LIFE OF
VEDANAYAGAM SASTRIAR

THE EVANGELICAL POET OF TANJORE

BY HIS SON

V. NOAH GNANADICAM SASTRY

நெல்லையானும்

தஞ்சை சுவிசேட கவிராயனுமாகிய

வேதநாயக சாஸ்திரியார்

குமாரன்

V. நோவா ஞானதிக்க சாஸ்திரியாரால்

தெரிந்தெடுக்கப்பட்ட சுருக்கமான சரிதை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தஞ்சாவூர் சுவிசேட கவிராய

வேதநாயக சாஸ்திரியார்

குமாரன்

V. நோவா ஞானதிக்கம் சாஸ்திரியாரால்

தெரிந்தெடுக்கப்பட்ட சுருக்கமான சரிதை

"தேவரீர் உமது அடியானுக்குச் செய்துவந்த எல்லாக் கிருபைகளுக்கும் எல்லா உண்மைகளுக்கும் நான் எம்மாத்திரம்" ஆதி. 32:10.

திருப்பாப்புலியூரில் ஆயுள்வேதிய M. சேனாதிபதியாபிள்ளை
உதவியால் சென்னபட்டணம் கி. க. அ. சங்கத்தாரது
அச்சுக்கூடத்தில் 1899ஞு பதிப்பிக்கப்பட்டதை,
துரைராஜ் வேதநாயகம் சாஸ்திரியாரால்
திரும்பப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

1899-ல் முதல் பதிப்பு
1970-ல் இரண்டாம் பதிப்பு

முகவுரை

திருநெல்வேலியில் பிறந்தவரும், தஞ்சையில் சுவார்ச்சு ஐயரவர்களால் வளர்க்கப்பட்டவருமான, சங்கை வேதநாயகம் சாஸ்திரியாரவர்களை தமிழ்ச்சபை அறிந்திருக்கிறது.

இவர் மன்னன் சரபோஜி சமஸ்தான வித்வான்களில் ஒருவராயிருந்தார். இவர் தமிழ்ச்சபைப் பிதாக்களில் ஒருவராய்த் திகழ்ந்து, சபைகளுக்குப் பக்திவிருத்திக்கேதுவான பாடல்களைப் பாடியும், படித்துக்கொடுத்தும், நூற்று இருபத்திரண்டு பிரபந்தங்களையும் உண்டுபண்ணியுமிருக்கிறார். சங். வேதநாயகம் சாஸ்திரியார் வரலாற்றைக் கேள்வியினாலும், சில நூல்களினாலும் அறிந்துள்ளோம்.

இவரது இரண்டாவது குமாரன் நோவா ஞானதிக்கம் சாஸ்திரியார், தம் தந்தையாரின் வரலாற்றை எழுதியிருக்கிறார்கள். அது சிறப்புடையதெனவும், அதை யாவரும் அறியத்தக்கதாகத் திரும்பவும் பிரசுரிப்பது அவசியமெனவும் பலர் விரும்பிக் கேட்டுக்கொண்டபடியே இப்பொழுது அச்சிடப்பட்டது.

சாது சுந்தர்சிங், சர். நாராயண சந்திரவர்க்கர், நாராயண வரமன்திலர், ஸ்ரீமதி சரஸ்வதி பண்டிதை ராமாபாய், சந்திரலீலாள், தேவதாசன் சுப்பையர், வித்வான் H. A. கிருஷ்ண பிள்ளை, கதிர்வேல் நாயனார், சண்முகநாத கவிராயர், வள்ளிநாயகம்பிள்ளை, சங். வேதநாயகம் சாஸ்திரியார் போன்ற ஆத்ம விசாரமும், ஆராய்ச்சியும் உடைய அநேகம் பேர், உயர் மரபில் உதித்தவர்களாயிருந்தும், தங்கள் உலக மகிமைகளையும் மேன்மைகளையும் உரிமைகளையும் வெறுத்து, கிறிஸ்து இயேசுவைத் தங்கள் மீட்பராகப் பற்றிக்கொண்டனர்.

மேற்கண்ட பக்தர்களைக் கண்டறிந்தவர்களும், படித்தவர்களுமான பலர் தங்கள் வாழ்க்கையில் மாறி, கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்று மகிழ்ந்தனர்.

முன்னரே தஞ்சாவூரிலும், மற்றுமுள்ள தமிழ்ச்சபைகளிலும் கிறிஸ்தவர்களானவர்கள், தாங்கள் முன்னிருந்த அஞ்ஞான மதங்களின் வீண் கொள்கைகளையும், சாஸ்திரங்கள் சகுனங்களையும் விட்டுவிடாமல் இருந்த அறிவீனங்களையும் கண்டித்துரைத்தும், கவிகளால் பாடிக்காட்டியும் குரங்குப் பிடியாய்ப் பிடித்திருந்ததைக் கண்ட சாஸ்திரியார் சாஸ்திர சகுனங்களை 850 கும்மிகளால் விஸ்தரித்து "சாஸ்திரக்கும்மி" என்ற நூலாகவும் வெளியிட்டனர். இக்காலத்தில் தங்களைத் தேர்ந்த கிறிஸ்தவர்களாக எண்ணிக்கொண்டிருக்கிறவர்களும் இந்நூலால் எச்சரிக்கப்படுகின்றனர்.

கிருபையினாலே சிலுவையில் சம்பாதித்த இரட்சகரின் மீட்பை உலகத்தார் யாவரும் பெற்று, பூரண மீட்புக்கு நம்மைக் கொண்டுசேர்க்கும் புத்திர சுவீகாரத்தின் ஆவியையும் பெற்று பரமபிதாவோடு உறவாடும் வகையையும் பரிசுத்தவான்களின் வரலாற்றால் அறிகிறோம்.

இக்காலத்தில் அடிக்கடி நடக்கும் இஸ்ரவேல் அரபு யுத்தங்களால், கிறிஸ்துவின் வருகை விரைவில் இருக்குமெனவும் எச்சரிக்கப்படுகிறோம். ஆதலால் மாம்சத்திலும் ஆவியிலுமுண்டான எல்லா அசுசியும் நீங்க நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (2கொரி. 7:1)

இப்படியிருக்க, பிள்ளைகளே, நம் மீட்பர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படி இயேசுவில் நிலைத்திருங்கள். (1யோவான் 2:28)

கர்த்தர் இவ்வரலாற்றையும் ஆசீர்வாதமாக்கித் தருவாராக.

திருச்செந்தூர், S. தாமஸ் இரத்தினம்
10-4-1974.

பொருள் அட்டவணை

		பக்கம்
1	அருணாசலம்பிள்ளை வாலிப நடை	1
2	அருணாசலம்பிள்ளை ரேனியஸ் உபதேசி ஞானேந்திரக் கணியானிடத்தில் சம்பாஷித்தது	2
3	ஞானஸ்நானம் பெற்றது	3
4	விவாகங்களும், சுவிசேட மார்க்கத்திலுட்பட்ட வரலாறும்	9
5	அவருடைய கடைசி நடபடி	11
6	வேதநாயக சாஸ்திரியின் பிறப்பு வளர்ப்பு	12
7	அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கிறபோது கண்ட சிலுவைக் காட்சி	13
8	அவருடைய சிறுவயதின் நடபடி	14
9	அவர் சுவார்ச்சையரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டது	15
10	அவரை சுவார்ச்சையர் நடத்தின பட்சமும், இவர் அவருக்குச் செய்த ஊழியமும்	17
11	அவர் தரங்கன்பாடிப் பள்ளிக்கூடத்தில் படித்தது	19
12	சுவார்ச்சையர் அவரைப் பள்ளிக்கூட வாத்தியாய் நியமித்தது	19
13	வேதநாயக சாஸ்திரியின் ஊழியம்	20
14	அவருக்குத் திருச்சபையாற் கொடுக்கப்பட்ட பெயர்களும் அந்தந்தச் சபையிற் செய்யப்பட்ட மரியாதைகளும்	22
15	அவர் யாழ்ப்பாணத்துக்குப் போயிருந்தபோது அங்கே இவரைக் கர்த்தர் நடத்தின அதிசயம்	23
16	அவருக்குத் தஞ்சாவூர் இஸ் அயினசு சரபோசி மகாராசா செய்த வெகுமதி	26
17	மகாராசா, வேதநாயக சாஸ்திரியை பிள்ளையாரைப் பாடச் சொன்னதால் உண்டான சம்பாஷணை	27
18	வேதநாயக சாஸ்திரியின் சீஷப்பிள்ளைகளின் நாமங்கள்	30

VENERABLE

VEDANAYAGA SHASTRIAR

EVANGELICAL POET, TANJORE

Born the 7 September 1774 in Tinnevelly
Died the 24 January 1864 at Tanjore

திருநெல்வேலி இராச்சியத்தில்

சைவ சமயத்திலிருந்து கிறிஸ்து மார்க்கத்திலுட்பட்ட

வேதநாயக சாஸ்திரியின் தகப்பன்

தேவசகாயம் பிள்ளையின்

சுருக்கமான சரிதை

---

1. அருணாசலம்பிள்ளை வாலிப நடை

தென் இந்தியாவின் தெட்சணபாகமாகிய திருநெல்வேலியில் வேதநாயக சாஸ்திரியின் தகப்பன் தேவசகாயம் பிள்ளை; கிறிஸ்தாப்தம் 1735 ஷு இந்து மதத்தில் பிறந்தவர்.

இவருடைய தகப்பன் ஐயம் பெருமாள்பிள்ளை இந்து மார்க்கத்திலிருந்தபோது இவருக்கு அருணாசலமென்று பெயரிட்டு அழைத்தார்.

இவர் வாலிபனானபோது இந்து சாஸ்திரங்கள், புராணங்களை மெத்தவும் நம்பி, சித்தாதிகள் வாக்கியம் முதலான பற்பல பாடல்களை மனப்பாடமாக்கி, பிராமணாள் பண்டாரங்கள் சொன்ன வார்த்தைகளை அங்கிகரித்து, காயசித்தி செய்ய வேண்டுமென்ற நோக்கமாய்ச் சில கற்பங்களைச் சாப்பிட்டு, ஒருவிசை சதுரகிரி மலைக்கும் போய்வந்தார்.

அன்றியும் ஒருமுறை காசிக்கு யாத்திரை போய்ப் புண்ணியம் சம்பாதித்து வரவேண்டுமென்று நிச்சயித்திருந்தார்.

அதையவர் தகப்பனாரும், இனசனத்தாரும் அறிந்து, அத்தனை தொலைதூரம் போகக்கூடாதென்று தடுத்து, தங்கள் பிராமணக் குருக்களையழைத்து, காசிக்கு போய் வருகிறதினாலுண்டாகும் பலனை வேறு என்ன செய்து சம்பாதித்துக் கொள்ளலாமென்று கேட்டார்கள். அதற்கவர்கள் தங்கள் பண்டிகையாகிய மாமகப் பெருநாளன்று, ஆயிரம் ஸ்நானம் பண்ணினால் அந்தப் பலனுண்டாகுமென்றார்கள்.

இவர் அவர்கள் சொன்னபடி, அந்தநாள் உதயத்தில் எழுந்து, ஒரு செப்புக்குடமுங் கயிறு மெடுத்துக்கொண்டு, தனக்கு சிநேகிதனயிருந்த ஒரு தோழனையுங் கூட்டிக் கொண்டு, அந்தத் திருநெல்வேலியிலிருந்த கிணற்றுக்கொரு முழுக்காக, சகல கிணறுகள், ஏரிகள், ஆறுகள், வாய்க்கால்கள், குளங்கள், குட்டைகளெல்லாமோடி ஓடியலைந்து, அருணேதயமுதல் அஸ்தமனமாகுமட்டும் ஸ்நானம்பண்ணி, வீட்டுக்குத் திரும்பினர்.

உடனே காசிக்குப்போன பலன் கைமேலே வந்து பலித்து, ஆறு மாதம் கடினமான வியாதிப்பட்டுப் பிழைத்தார்.

இவருடைய வைராக்கியத்தைக் கண்ட இவர் தகப்பன் ஐயம் பெருமாள்பிள்ளை இவனொரு ஞானியாய் அல்லது வேதாந்தியாய்ப் போவானென்று பயந்து, அவர் மனதை ஏதாவதொரு வியாபாரத்தில் நாட்டமாகும்படி செய்யக் கருதி, இவருக்குத் திருநெல்வேலி இராச வீதியில், சொந்தக் காகக் கடையொன்று கட்டிக் கொடுத்தார். அதிலே இவர் காக வியாபாரஞ் செய்துகொண்டிருந்தார்.

அப்பொழுது இவர் தம்மிடத்திலே வருகிற ஏழைகளுக்குக் காககளைக் கொடுத்து முதலுக்குக் கட்டிவரவில்லையென்று கண்டு, காகக் கடைக்குப் போகிற ஒவ்வொரு நாளிலும், அரிசியுங்கூடக் கொண்டுபோய் வைத்திருந்து, ஏழைகளுக்கு இல்லையென்காமல் போட்டு வந்தார்.

அந்தத் தெருவழியாய்ப் போகிற ரோமான் உபதேசி ஞானேந்திரக் கனியானென்ற மனுஷன்; இதைப் பார்த்து, காகக்கடையிலே பிச்சைக்காரருக்கு அரிசி கொடுக்கிறது அதிசயமாயிருக்கிறது. இவன் ஒரு தருமவானயிருக்க வேண்டுமென்று நினைத்துக்கொண்டு போவான்.

2. அருணசலம்பிள்ளை ரோமான் உபதேசி ஞானேந்திரக் கனியானிடத்தில் சம்பாஷித்தது.

ஒருநாள் அந்த ஞானேந்திரக்கனியான் கிட்டி வந்து நின்று, ஐயா! நீர் தருமஞ் செய்கிறது நல்லதுதான். ஆனல் ஆண்டபொருளை அறியவேண்டும்.

"ஆண்டபொருளை யறியாதார் செய்த தவம்
மாண்ட மரத்துக்கணைத்த மண்" என்றான்.

அருணாசலம்: ஆண்டபொருள் யார்?

ஞானேந்திரக் கணியான்: வானத்தையும் பூமியையும், அதிலடங்கிய சகல சிருஷ்டிகளையும் படைத்துப் பராமரித்து இரட்சிக்கிற மெய்யான பராபர வஸ்துவாகிய கடவுளே ஆண்ட பொருள் என்றான்.

அரு: திரிமூர்த்திகளாகிய பிரமா, விஷ்ணு, ருத்திரன் ஆண்ட பொருளல்லவா? என்றான்.

ஞானே: நீங்கள் மோசம் பேசுகிறீர்கள்; தெய்வம் பரிசுத்த வஸ்து. நீங்களோ பாவிகளும் அசுத்த நடக்கையும் நிறைந்து அழிந்து போனவர்களைத் திரிமூர்த்திகளென்றும் தெய்வங்கள் என்றும் வணங்குகிறீர்கள். அவர்கள் ஆண்ட பொருளாக மாட்டார்கள் என்று பற்பல நியாயங்களைச் சொன்னான்.

அரு: நீர் சொல்லுகிற விஷயத்தைப்பற்றி அதிகமாயறிய எனக்கு ஆசையிருக்கிறது. உங்களுக்குக் குருக்களுண்டா என்றார்.

ஞானே: ஆம். நாலுகாத வழிக்கப்பால் காமநாய்க்கன்பட்டி என்ற ஒரு ஊர் இருக்கிறது. அங்கே ஒரு கோவிலுமிருக்கிறது. அந்தக் குருவைக் கண்டால் உமக்கு நல்ல வழியைச் சொல்லுவாரென்றான்.

3. அருணாசலம் பிள்ளை ஆடத்துமான் வேத போதகக்குருவிடத்தில்போய் உபதேசம் கேட்டு ஞானஸ்நானம் பெற்றது.

அருணாசலம்பிள்ளை மறுநாள் ஞானேந்திரக் கணியானை வரச்சொல்லி, உருத்திராட்சம் திருநீறிட்டுக்கொண்டு புறப்பட்டு, காமநாய்க்கன்பட்டி போய்ச்சேர்ந்து, அந்தக் குரு இருந்த கோவில் முகப்பிலே போய் நின்றார்.

ஞானேந்திரக் கணியான் ஆடத்துமான் வேத போதகக் குருவினிடத்தில் போய் இந்து சைவன் ஒருத்தன் சத்திய வேதங்கேட்க ஆசையாகி உங்களைத் தெரிசிக்க வந்தானென்றான்.

அப்பொழுது அந்தக்குரு வெளியே வந்து இவரைப் பார்த்து, இவர் கழுத்திலும் சிரத்திலும் தரித்திருக்கிற திருநீற்றுப் பூச்சையும், உருத்திராட்ச வேடத்தையுங் கண்டு கோபித்து, இந்தப் பிசாசை ஏன் கூட்டிக்கொண்டு வந்தாய், இந்தப் பிசாசு குணப்படுமா என்று அறைக்குள்ளே போய்ப் படுத்துக்கொண்டார்.

அருணாசலம்பிள்ளை வாலிபனாயிருந்தும் கோபப்பட்டுத் திரும்பிவிடாமல், குருவினிடத்தில் பேச வாஞ்சையோடு நின்றார். ஞானேந்திரக் கணியான் மறுபடியும் குருவிடத்திற் போய், உங்களைக் கண்டு உங்கள் உபதேசத்தைக் கேட்க நாலுகாதம் நடந்து வந்திருக்கிற மனுஷனைப் போகச்சொல்லலாமா? தங்கள் கடமைப்படி சொல்லுங்கள், கேட்டால் அவனுக்கு நன்மை; கேட்காதே போனால் நமக்குக் குறைவென்ன என்றான்.

அப்பொழுது அந்த குரு, இவரை உள்ளே அழைத்து, வந்த நோக்கமென்னவென்று விசாரித்தார். இவர் வேதங் கேட்க வந்தேனென்றார். அப்படியானால் உட்காரும் என்று உபசரித்து உபதேசஞ் சொல்லத் தொடங்கினார்.

பராபர வஸ்து ஒருவருண்டு என்றறிய சூட்சமான இரு வகை உண்டு: 1. சிருஷ்டிப்புகளாலும் 2. கடவுள் அருளிச் செய்த பரிசுத்த வேத வசனத்தினாலும் அறியலாம். பிராமணர் கட்டி வைத்திருக்கிற வேதங்களோ, முழுதும் பொய்யும் கட்டுக்கதையுமாயிருக்கிறது. அவர்கள் ஆராதித்து வருகிற தேவர்களெல்லாம், கல்லும், மண்ணும், செம்பும், மரமுமான மனுஷருடைய கைவேலைகளாயிருக்கிறது. அவற்றால் யாராவது இரட்சிக்கப்படக்கூடுமோ? கூடாதே.

பராபர வஸ்து தானாய், அனாதியாய், சகல வஸ்துக்களுக்கும் ஆதிகாரணமாயிருக்கிறார். அவர்தான் உலகத்தையும் அதிலடங்கிய சகல சராசர சிருட்டிகளையும் உண்டுபண்ணினார். அவரையன்றி நாம் பிழைத்திருக்கக்கூடாது. அவர் எங்கும் திறைந்து எல்லாவற்றையும் அறிந்திருக்கிற மகத்துவமான பரிசுத்த தேவன். அவர் கெட்டுப்போன மனித சாதியை இரட்சிக்க, தம்முடைய ஒரே பேறான குமாரனை

இவ்வுலகில் அனுப்பினுர். அவர் மனிதாவதாரம் பண்ணிப் பாடுபட்டு நமக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் சம்பாதித்தார். இப்போதும் நீ அவரைக்கொண்டு ஞானஸ்நானம் பெற்ருயாஞல் இரட்சிக்கப்படுவாயென்று, சிருட்டிகரைப் பற்றியும் இரட்சகரைப்பற்றியும் அறியவேண்டிய வேத உபதேசங்களையெல்லாம் திட்டமாய்ச் சொன்ஞர்.

அருணுசலம்பிள்ளை: ஐயா, நீங்கள் சொன்னதையெல்லாம் உறுதியாய் விசுவாசிக்கிறேன். எனக்குத் தீட்சை கொடுங்களென்ருர்.

அப்போது குரு: உம்முடைய குணப்படுதலுக்கு அடையாளமாக நீர் அணிந்திருக்கிற வேஷங்களையெல்லாம் அகற்றிப்போட்டு, ஞான உபதேசங்கள் மந்திரங்களைக் கற்று பரிசோதிக்கப்பட்டபின்பு, ஞானதீட்சை கொடுக்கப்படுமென்ருர்.

அருணுசலம்பிள்ளை: நெருப்பைக் கொண்டுவரச் சொல்லுங்களென்ருர். அங்கேயிருந்து இவர் பேசுகிறதைக் கேட்டுக்கொண்டிருந்த குருவின் ஊழியக்காரர், இவர் மாயமாய்ப் பேசுகிருரென்றெண்ணி, உடனே தணற்சட்டியைக் கொண்டு வந்தார்கள்.

இவர் தமது கழுத்திலும், சிரத்திலும் அணிந்திருந்த உருத்திராட்ச மாலைகளைக் கழற்றி, நெருப்பில் போட்டு, நீற்றுப் பூச்சையுங் கலைத்துப் போட்டார். குருவுக்கு இவர் பேரிலே மெத்த மகிழ்ச்சி உண்டாயிற்று.

இவர் ஞான உபதேசங்களையும் மந்திரங்களையும் மனப்பாடமாக்கினபின், அந்த ஆடத்துமான் வேதபோதகக் குரு தானே இவருக்கு ஞானத்தகப்பனுகி, இவருடைய இருபத்தைந்தாம் பிராயமாகிய 1760ஸு த்தில் ஞானதீட்சை கொடுத்து, தேவசகாயமென்று பெயரிட்டார்.

இவர் திருநெல்வேலிக்கு வரத்துப்போக்காயிருந்து, தாம் அறிந்த சத்தியத்தைத் தமது பெற்ருேருக்கு அறிவித்துக் கொண்டு வந்ததுமன்றி, முந்தின வீணுன ஆடம்பரங்களை அகற்றிவிட்டு, வேறுவித நடையுள்ளவராயிருந்தபடியினுலே அவருடைய இனசனத்தார், இவரையழைத்து, நீர் படிப்புள்ள மனுஷனுச்சே, உம்முடைய பூசையென்ன; ஆசார

மென்ன, இப்படிக் கொண்டுபோகலாமாவென்று, நாமும் பல மூமாய்ப் பேசினார்கள். அவர்கள் சொல்லுக்கு இவர் இணங்காமல், தாம் உட்பட்ட மார்க்கமே கடவுள் அருளிச்செய்த மெய்வேதமென்று உறுதியாய்ப் பேசினபடியினாலே, இவரை யும் பகைத்து சாதிக்குப் புறம்பாய்த் தள்ளிப்போட்டார்கள்.

அவருடைய தகப்பனுமோ, தன் குமாரன் சொன்னதை விசுவாசித்து, தம் மற்றக் குமாரர் குமாரத்திகளுடன் மனந் திரும்பி ஞானஸ்நானம் பெற்றார். அன்றியும் தங்களுடைய நந்தவனத்தில் இனசனத்தார் பூசை செய்யும்படி கோவிலுக் குக் கட்டப்பட்டிருந்த இருபத்தொரு பீடங்களையும், தேவ சகாயம்பிள்ளை அடியோடே இடித்துப்போட்டார். இதினாலே இனசனத்தார் விரோதியாய்த் துன்பப்படுத்திப் பெரிய கலகங் களை யெழுப்பி விட்டார்கள். அப்படியிருந்தும் தேவசகாயம் பிள்ளை விட்டுப் பின்வாங்கிப் போனதில்லை, ஏனெனில் அக்கியான இராச்சியத்திலிருந்து அவர்களைக் கர்த்தர்தாமே தெரிந்துகொண்டபடியினாலே, அவர்களுக்கு நல்ல திடமனதைக் கொடுத்திருந்தார்.

தேவசகாயம்பிள்ளை, தம் ஞானத்தகப்பனாகிய ஆடத்துமான் வேதபோதக குருவின் ஆதரிப்பிலிருந்து, அவரிடத்தில் குருப்பட்டத்துக்கென்று லத்தீன் பாஷையைப் படித்துக் கொண்டிருந்தார்.

பட்டங் கொடுக்கிற நாள் வந்தபோது மேற்றிராணியார், இவரைக் குறித்து விசாரித்து, இவர் இந்துமார்க்கத்தில் உட்பட்டபடியினாலே, மூன்றுந் தலைமுறைக்கும் பின் குருப்பட்டம் கொடுக்கத் தகுமேயன்றி, இப்பொழுது பட்டங் கொடுக்கக்கூடாதென்று தீர்த்து, அவரைக் குருவுக்கு இரண்டாவதாக அங்கி தரிப்பித்து, பூசைக்கு உதவி செய்யும்படி தோமினி உபதேசியாராக நியமித்தார்.

அவர் இவ்விதம் பத்து வருட காலத்தைப் பின்னிட்டார். அப்பொழுது ஆடத்துமான் வேதபோதககுரு, இராமநாதபுரம் கமரித் தாலுக்காவைச் சேர்ந்த ஆனைக்குளத்திலிருந்து தம்மிடத்திலே பாவ சங்கீர்த்தனத்துக்கு வந்திருந்த சவரிராயன் செட்டியாரோடே பேசி, அவருடைய குமாரத்தி

ஞானப்பூ அம்மாளை, தம் ஞானக் குமாரனாகிய தேவசகாயம் பிள்ளைக்கு மணமுடித்துக் கொடுக்கவேண்டுமென்றார். அப்படியே அவர் சம்மதித்ததின் பேரில் 1770 ஞூ தேவசகாயம் பிள்ளை முப்பத்தைந்தாம் பிராயத்தில் அவருக்கு ஆடத்துமான் குருக்களைக்கொண்டு விவாக முடித்து வைத்தார்.

தேவசகாயம் பிள்ளைக்கு 1774-ம் ஞூ புரட்டாசி மீ 7-ம் தெய்தி செவ்வாய்க்கிழமை பகல் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்குத் தேவசகாயம்பிள்ளை வேதபோதகம் என்று பேரிட்டு, வேதபோதகம் ஆடத்துமான் குருக்களைக்கொண்டு ஞானஸ்நானம் பண்ணுவித்தார். வேத போதகம் என்ற பெயர், தம்முடைய குருவின் பெயராயிருந்ததினாலே தம் குமாரனை வேதநாயகம் என்ற பெயரால் அழைத்து வந்தார். அந்தப் பெயரே நெடுகிலும் வழக்கமாகி இந்நாள்வரையும் வேதநாயகமென்று வழங்கி வருகிறது. இவர்தான் வேதநாயக சாஸ்திரியார்.

வேதநாயகத்துக்கு ஏழு வயதானபோது, அவன் தாய் ஞானப்பூ அம்மாள், ஆனைக்குளத்திலிருந்து தன் தகப்பனார் வீட்டுக்கு வந்திருந்தபோது வியாதிப்பட்டு மரித்துப்போனாள். அந்த அம்மாள் பெற்ற சூசையம்மாள், வேதநாயகம், பாக்கியம்மாளென்ற மூன்று பிள்ளைகளையும், தேவசகாயம்பிள்ளை அவர்கள் தாயைப் பெற்ற பாட்டன் வீட்டிலே விட்டு, தம்முடைய ஊழியத்தைப் பார்க்கப் போய்விட்டார். இவர்கள் இங்கே சிலகாலம் மிகுந்த கரிசனமாய் வளர்க்கப்பட்டார்கள்.

தேவசகாயம்பிள்ளை தம்முடைய பெண்ஜாதி ஞானப்பூவம் மாளிறந்து, இரண்டு வருஷமான பின்பு அந்த இனத்திலே, மரியமுத்து என்ற ஒரு பெண்ணை மறுதாரமாக விவாக முடித்தார். இந்த மரியமுத்து அம்மாள்தான், தஞ்சாவூரில் லுத்தரன் சபையார் ஆராதனை பண்ணும்படி, தம்முடைய வீட்டைக் கொடுத்து, முதன்மையாய்ச் சபையில் சேர்ந்த, மகாராசா வாத்தியாராகிய சுவிசேஷ முத்துப்பிள்ளையின் தாய். ஞானாபரணமென்ற ஒரு பெண்ணும் பாக்கியநாத பிள்ளையென்ற ஒரு ஆணும் பிறந்தார்கள்.

பிற்பாடு தேவசகாயம்பிள்ளை தம்முடைய மறுதாரத்தையும், வேதநாயகத்தையும் கூட்டிக்கொண்டு திருநெல்வெலிக்குப் போனார். அப்பொழுது தேவசகாயம்பிள்ளையை மார்க்கத்திலுட்படுத்தின அவருடைய ஞானத்தகப்பனாகிய வேத போதக ஆடத்துமான் குரு மாற்றப்பட்டு, அவருக்குப் பதிலாக தேவர்த்தநாத குரு என்ற வேறேயொரு புதுக்குரு வந்தார்.

தேவசகாயம்பிள்ளைக்கு ஒரு நொண்டி ஞானி சிநேகிதனாயிருந்தான். அவனுக்குத் தாடி இருந்தது. அதை அருளானந்த முதலி தேவசகாயம்பிள்ளை மேல் ஒரு முறைப்பாடாகப் புதுப்பாதிரியாருக்குச் சொல்லி, ஐயா, நீங்களல்லவோ குருவும் ஞானியுமாயிருக்கிறீர்கள். இப்படியிருக்க ஒரு நொண்டி தன்னை ஞானியென்று சொல்லித் தாடி வைத்துக்கொண்டு இருக்கிறான். அவனைத் தேவசகாயம்பிள்ளை மெத்தக் கனமாக எண்ணிச் சிநேகித்து வருகிறார் என்றான்.

ஒருநாள் அந்த நொண்டி ஞானி சாலை மார்க்கமாய்ப் போகிறானென்று புதுப்பாதிரியாருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் அவனை அழைத்துவரச் சொன்னபோது, அந்த ஞானி வந்து வணங்கி நின்றான். அப்பொழுது பாதிரியார் கோபத்தோடே அந்த ஞானியைப் நோக்கி, நமக்குந் தாடி உனக்குந் தாடியா? என்றார். அந்தச் சந்நியாசி, இவர் வெள்ளை மனுஷனாயிருந்தபடியால் அதிகமாய்ப் பயந்து, சுவாமி! அடியேன் இத்தேசத்து சந்நியாசிகள் செய்கிற வாடிக்கைப்படி செய்தேன். உங்களுக்கு விரோதமாய் நான் தாடி வைத்ததில்லை என்றான்.

தேவர்த்தநாதகுரு, அவன் மேற் சீறி விழுந்து, அடே ஞானி! நான் மாத்திரம் தாடி வைக்கத்தகும். நீ நமக்கு முன் எதிரிலே தாடி வைத்துக்கொண்டு நம்மோடு பேசுவாயென்று, இந்தச் சன்னாசியின் தாடியை இழுத்துப் பிய்த்து, மேசைக் கத்தியினாலே அறுத்துப்போட்டார். அந்த நொண்டி ஞானி, மிகவும் மனஸ்தாபப்பட்டு, தன்னைச் சிநேகித்துக் கொண்டிருந்த தேவசகாயம் பிள்ளையிடத்தில் போய், அவர் காலில் அடித்து மோதி விழுந்து அழுது, தனக்கு நடந்த அநியாயத்தை அறிவித்தான்.

தேவசகாயம்பிள்ளை, அந்த மனுஷனுக்காகப் பரிதபித்து, ஐயோ! இது மெத்தவுங் கொடுமை; பதித வேதத்திலேகூட இப்படிப்பட்ட அநியாயம் செய்யமாட்டார்களே என்ருர். ரோமானித்தார், சுவிசேட மார்க்கத்தாரைப் பதிதர் அதாவது வேதப்புரட்டர், என்று பேசுகிற வாடிக்கை. அப்படி இவரும் ரோமானித்தராயிருந்தபோது பேசினுர்.

உடனே இந்த வார்த்தைகள், புதுப்பாதிரியாருக்குக் கேள்வியாகி, தேவசகாயம்பிள்ளை பேரில் மிகுந்த ஆங்காரங் கொண்டு, தோமினி உபதேசியாராகிய தேவசகாயம், பதிதனைப் போய்விட்டபடியினுலே, அவனைச் சபைக்குப் புறம்பாக்கி வைத்திருக்கிருேம். கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளில் நீர் நெருப்பு முதலாய்க் கொடாமல் விலகியிருக்க வேண்டுமெனச் சாபம் போட்டுக் கோவிலிலே வாசித்தார்.

4. தேவசகாயம்பிள்ளை சுவிசேட மார்க்கத்திலுட்பட்ட வரலாறு.

அக்காலத்தில் பாளையங்கோட்டை கர்னல் இலிட்டீட்டன் துரை பெண்சாதி பாப்பாத்தி கிளாரிந்தாளம்மாள், திருநெல்வேலியில் ஒரு ஆலயத்தைக் கட்டுகிருள் என்றும், கிறிஸ்தவர்களுக்கு நன்மைசெய்து வருகிறளென்றும் பிரசித்தமாயிருந்தது.

தேவசகாயம்பிள்ளை தம்முடைய சிநேகிதனுகிய வயித்திய சன்னுசியை அழைத்துக்கொண்டு, தங்களுக்கு நடந்த அநியாயத்தைச் சொல்லிக்கொள்ளப் புறப்பட்டுப்போனுர்கள். பாப்பாத்தி கிளாரிந்தாளம்மாள் இவர்களை மிக உபசரித்து ஏற்றுக்கொண்டு, இவர்கள் வந்த நோக்கம் என்னவென்று விசாரித்து, சமாதானமாய்ப் பேசி, ரோமான் குருக்கள் தாங்கள் சொல்லுகிறபடி செய்கிறவர்களல்ல, வேதம் ஒருபக்கம், அவர்கள் நடக்கை வேறுமாதிரியிருக்கிறது. அவர்கள் மாதாவையும் அர்ச்சியசிஷ்டரவர்களையும் வணங்கி, இரட்சகருடைய புண்ணியத்தின் பலனை மறுதலிக்கிறவர்களென்றுஞ் சொல்லி, நீர் இனி அந்த அநியாயக்காரப் பாதிரி முகத்திலே போய் விழிக்கவேண்டாம். இங்கு உபதேசம்

சொல்லிக்கொண்டிரும். நானுமக்கு அந்த வருமானத்தைத் தருவேன் என்று இவரை விசாரித்து வந்தான்.

அங்கேயிருந்த ஞானப்பிரகாசம் உபதேசியாரை இவரிடத்திலே சம்பாஷிக்கச் சொன்னான். தேவசகாயம்பிள்ளை ரோமானித்தர் எழுதிய "பதிதர் கோடாலி" என்ற ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு ஞானப்பிரகாசம் உபதேசியாரோடே தர்க்கம் பண்ணிக்கொண்டு சில நாளிருந்தார். பாப்பாத்தி கிளாரிந்தாள் தேவசகாயம்பிள்ளையிடம் நீர் தஞ்சாவூருக்குப் போவீரானால், அங்கே நீர் அறியவேண்டிய தேவநியாயங்களைத் திட்டமாயறியலாமென்று சொல்லி, அவரைத் தஞ்சாவூரிலிருக்கிற சுவார்ச்சு ஐயரிடத்தில் அனுப்பினாள். 1785லே இவர் தஞ்சாவூருக்கு சங். தகப்பனார் சுவார்ச்சையரிடத்தில் வந்து சேர்ந்து நாலு மாதங்களிருந்து சத்திய வேதத்தின் நிச்சய உபதேசத்தையறிந்து பாளையங்கோட்டைக்குத் திரும்பிப் போனார்.

அந்த வருஷத்திலே சுவார்ச்சையர் திருநெல்வேலி சபை விசாரணைக்குப் போயிருந்து திரும்புகிறபோது, தேவசகாயம் பிள்ளையோடே பேசி, வேதநாயகத்தை என்னோடே அனுப்பும், நான் அவனை ஒரு மனுஷனாக்குவேன் என்று தம்மோடு தஞ்சாவூருக்குக் கூட்டிவந்தார். பின் சுவார்ச்சையரவர்கள், தேவசகாயம்பிள்ளையைச் சமுசார சகிதமாய் புறப்பட்டு வரும்படி வழிச்செலவுக்குக் கொடுத்தனுப்பி, தஞ்சாவூருக்கழைப்பித்து, அவரைத் தம்மிடத்தில் உபதேசியாராக வைத்துக்கொண்டார்.

தேவசகாயம்பிள்ளை உபதேசியாராயிருந்த நாட்களில், இந்துக்களோடே சம்பாஷிக்கிறதும், மார்க்கத்திலுட்படுகிறவர்களுக்கு மந்திரங்களைப் படிப்பித்துக் கொண்டுமிருந்தார். அல்லாமலும் இந்துப் புராணங்கள் சாஸ்திரங்களெல்லாம் அழிந்துபோம். கர்த்தருடைய இராச்சியம் சீக்கிரம் பெருகும். அப்பொழுது சத்தியவேதம் பாடலாகப் பாடப்பட்டிருந்தால் பிரியமாய்ப் படிக்கிற அநேகர் எழும்புவார்கள் என்று எண்ணிப் பகலும் இரவும் யோசித்துப் பாடல்களை உண்டுபண்ணிக்கொண்டிருப்பார்.

பின்னும் பழைய அச்சாயிருந்த ஒரு புதுஏற்பாட்டுச் சுவிசேஷத்தை ஒன்பது கலிப்பொன்னுக்கு விலைக்கு வாங்கியிருந்தார். அது தமது பின்னடியாருக்கு உதவும்படி நாலைந்து பிரிதி ஓலையிலே பெயர்த்தெழுதிக்கொண்டு, அதே வேலையாயிருந்தார்.

இவர் கர்த்தர்பேரிலே மிகுந்த விசுவாசமும், மெய்யான பக்திவைராக்கியமாயிருந்தார். இவரைக் கர்த்தர் நடத்தின ஆச்சரியமான சரித்திரங்கள் அதிகமுண்டு. இவர் திருநெல்வேலியிலிருந்த இவருடைய தகப்பனுருடைய வீட்டாரையும் மற்றும் இனசனத்தாரையும் மெய் மார்க்கத்தில் சேர்க்க மிகப் பிரயாசப்பட்டார்.

5. தேவசகாயம் பிள்ளையின் கடைசி நடபடி

இவர் தமது முதிர்வயதில் யாழ்ப்பாணத்துக்குப் போனுர். அவ்விடத்திலும் நீர்க்கொழும்பிலும், இந்துக்கள், ரோமானித்தார் முதலானவர்களோடு சம்பாஷித்துக் கிறிஸ்துவைப்பற்றி அறிவித்தார். சிலர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுர்கள். இவர் அங்கேயிருந்து தம்மை ஆண்டவர் நடத்திவருகிற விதங்களையும், தாம் செய்துவருகிற ஊழியத்தையும், தமது குமாரன் வேதநாயகம் பிள்ளையும் அவருடைய குடும்பத்தாரும் நடந்துகொள்ளவேண்டிய புத்திமதிகளையும் எழுதி அனுப்பிக்கொண்டிருந்தார்.

கடைசியாக அவரை ஆண்டவர் அழைக்கச் சித்தமாயிருந்ததால், அவருக்கு நடுக்குச்சுரம் போலக் கண்டு, எட்டு நாள் காய்ச்சலாயிருந்து, நீர்க்கொழும்பிலே மிக்கேல் முகாந்திரன் என்கிற கிறிஸ்தவன் வீட்டிலே படுத்திருந்தார். அந்தப் புண்ணியவானும் அவர் பிள்ளைகளும் இவருடைய வியாதியிலே இவருக்கு மிகப் பராமரிப்பாயிருந்து, இவர் மரண நேரத்துக்கு உதவினுர்கள்.

இவர் சுவிசேஷத்தை வாசித்து, தம்முடைய தலைமாட்டிலே வைத்து, இயேசுவே இரட்சியுமென்று சீவனை விட்டார். மிக்கேல் முகாந்திரனும் இவருடைய சிநேகிதர்களுமாயிருந்த பெரிய மனிதரெல்லாரும் கூடிவந்து, இவரைச் சங்

கையாயெடுத்து சுவிசேட மார்க்கத்தின் கல்லறையிலே அடக்கம் பண்ணினார்கள்.

அவர் 1799 ௵ தை ௴ 2-ம் தெய்தி, அறுபத்தைந் தாம் வயதில் மரித்தார். இவருடைய மரணத்தின் பேரில் இவருடைய குமாரன் வேதநாயக சாஸ்திரி புலம்பி, ஐம்பது விருத்தம் பாடினார்.

திருநெல்வேலிச் சுவிசேடக் கவிராய

வேதநாயக சாஸ்திரியின்

சுருக்கமான சரிதை

---

6. வேதநாயக சாஸ்திரியின் பிறப்பு வளர்ப்பு

கர்த்தருடைய பாடகனும் கவிராயனுமாகிய வேதநாயக சாஸ்திரி, திருநெல்வேலியில் கிறிஸ்தாப்தம் 1774-ம் ௵ புரட்டாசி ௴ 7-ம் தெய்தி செவ்வாய்க்கிழமை பகல் பிறந்தார். இவருடைய தகப்பன் தேவசகாயம் பிள்ளை, தாய் ஞானப்பூவம்மாள்.

இவர் பாப்பு மார்க்கத்தில் பிறந்து வேதபோதக ஆடத்துமான் குருக்களாலே ஞானஸ்நானம் பெற்று, வேதபோதக மென்று பெயரிடப்பட்டார். வேத போதகமென்ற பெயர், ஆடத்துமான் குருவுடைய பெயராயிருந்ததினாலே தேவசகாயம் பிள்ளை வேதநாயகமென்று அழைத்து வந்தார். அந்தப் பெயர்தானே நெடுகிலும் வழங்கி வந்தது.

வேதநாயகத்துக்கு ஐந்து வயதானபோது, தேவசகாயம் பிள்ளை ஒரு இலக்கண வித்துவானைக் கொண்டு படிப்புத் துவக்கி, அந்த உபாத்தியாருக்கு வெகுமானம் பண்ணினார். வேதநாயகத்தின் தாய் மறு வருஷம் இறந்துபோனாள். இவர் சிறுவத்திலே தன் தாயை இழந்துபோனதினாலே, இவரையும், இவருடன் பிறந்த ஞானசையம்மாள், பாக்கியம்மாள் ஆகிய

மூன்று பிள்ளைகளையும் மதுராபுரிக்கடுத்த ஆனைக்குளத்திலிருந்த அவர்கள் பாட்டனார் வீட்டில் விடப்பட்டார்கள்.

இந்தப் பிள்ளைகள் தங்கள் தாயைப் பெற்ற பாட்டன் சவரிராயன் செட்டியார் வீட்டில் மிகுந்த கரிசனத்தோடே வளர்க்கப்பட்டார்கள். சவரிராயன் செட்டியார் நிலபலமுள்ளவரானதால், வேதநாயகத்தின் படிப்பைப் பற்றிக் கவனிக்க முடியாமற் போயிற்று. வேதநாயகம் மாடுமேய்க்கிற வேலைக்காரரோடே சேர்ந்து, தன் பாட்டனாருடைய மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்.

7. வேதநாயகம் பள்ளிக்கூடத்தில் படிக்கிற போது கண்ட சிலுவைக் காட்சி

இவருடைய தகப்பனார் சொக்கம்பட்டிக் காவலான புளியங்குடியில் ஒரு இந்து ஆசிரியரிடம் 1783-ம் ஹூ இவரைப் படிக்க வைத்தார். அப்பொழுது இவருக்கு 9வயது. அங்கே இவர் ஆனச்சுவடியும் இலக்கணமும் படித்தார்.

ஒருநாள் மாலை ஐந்து மணி வேளையில், வெளியே உட்கார்ந்து படிக்கிறபோது ஒரு ஆள் உயரமான ஒரு சிலுவை இவர் கண்ணுக்குத் தெளிவாய்த் தெரியக்கூடிய சமீபத்தில் ஆகாயத்திலே மெதுவாய் வலதுபக்கத்திலேயிருந்து இடது பக்கமாய்க் கடந்துபோயிற்று. அது மேகத்திலே காணப்பட்ட அடையாளமல்ல; சரியாய் மரத்தினலுண்டுபண்ணப்பட்ட சிலுவை போலிருந்தது. இவர் அதை உற்றுப் பார்த்துக்கொண்டிருக்கிறபோது, இவர் கிட்ட இருந்த பையன் இவரைத் தட்டி, நீ என்னடா படியாமல் பராக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறுய் என்றுன்.

அதற்கு இவர் ரோமானிலிருந்தபடியினலே, அந்த மார்க்கத்தார் அப்பொழுது பேசுகிற வாடிக்கைப்படி, இதோ எங்கள் சுவாமி போகுது, பார் பார் என்று அவனுக்குக் காட்டினர். அந்தச் சிலுவை அரை நாழிகை நேரம் இவருக்குக் காணப்பட்டு, அப்புறம் மறைந்துபோயிற்று. இவர் வீட்டுக்கு வந்தபின் அதைத் தன் பாட்டியாருக்குச் சொன்னர். அவள் ஆச்சரியப்பட்டு, அது மெய்யாகவே சுவாமியினுடைய அடை

யானந்தான், அது கிடைக்கத்தக்க தரிசனையல்ல. ஏதோ ஓர் அதிசயம் உன் காலத்திலே சம்பவிக்கவேண்டும் என்றான்.

8. வேதநாயகத்தின் சிறுவயதின் நடபடி.

அப்பொழுது இவர் தகப்பனார் மறுதாரம் விவாகமுடித்து வந்து, வேதநாயகத்தைக் கூட்டிக்கொண்டு, திருநெல்வேலிக்குப் போய், அங்கேயிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் இவரைப் படிக்கவிட்டார். ஒருமுறை அந்தப் பள்ளிக்கூடத்துப் பையன்களோடே சேர்ந்துகொண்டு வெள்ளத்திலே அழிந்துபோயிருக்கிற வெள்ளரித் தோட்டங்களிற் போய்க் காய்களைத் தடவித் தடவிப் பறிக்கிறபோது, அங்கே மறைவாயிருந்த கிணற்றுக்குள் விழுந்து அமிழ்ந்திப்போனார். உடனே இவரைக் கூட்டிப்போன பையன்களெல்லாம் ஓடிப்போனார்கள்.

இவரோ இரண்டுமுறை கிணற்றிலே அமிழ்ந்தி மூன்றும் விசை எழும்பினபோது, தேவ கிருபையால் வரம்பைப் பிடித்துக்கொண்டு தப்பிப் பிழைத்தார். இது காரியத்தை வெகுநாளாய்த் தன் தகப்பனாருக்குச் சொல்லப் பயந்திருந்து பிற்பாடு சொன்னார். தகப்பனார் இதைக் கேட்டு அதிசயப்பட்டு, தன் குமாரனைப் பிராண சேதத்துக்கு விலக்கி இரட்சித்த கர்த்தரைத் துதித்தார். இவர் சிலகாலம் தன் தாயைப் பெற்ற பாட்டன் வீட்டில் மாடு மேய்க்கிறவர்களோடே விளையாடித் திரிந்தபடியினாலே படிப்பில் கவனமில்லாமல், பள்ளிக்கூடத்தை விட்டு ஓடி ஓடி ஒளிந்துகொள்ளுகிறதும், உபாத்தியார் தேடித் தேடிப் பிடித்துக்கொண்டு வரச்சொல்லுகிறதுமாயிருந்து மெத்த அலுத்துப்போனார். அப்பொழுது உபாத்தியார் மனவருத்தத்தோடே ஆருக்குப் படித்துக்கொடுத்தாலும் இவனுக்குப் படித்துக் கொடுக்கக்கூடாது. எமனுக்குப் படிப்பு வந்தாலும், இவனுக்குப் படிப்பு வராது என்றார்.

இந்தச் செய்தி கேட்டு, தகப்பனார் மிக விசனப்பட்டு, இவன் தாயில்லாத பிள்ளை; என்ன செய்யலாமென யோசித்து சாயங்கால நேரத்தில் கண்ணீரோடு கர்த்தரிடத்தில் பேசி விண்ணப்பம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்பொழுது வேதநாயகம், உலாத்திக்கொண்டிருக்கிற தகப்பன் கிட்டப்போய்,

என்ன ஐயா! உயரப் பார்த்து விசனமாய்ப் பேசிக்கொண்டிருக்கிறீர்களே, காரணமென்ன என்ருன். அதற்கவர்: நான் உனக்காகத்தான் செபம்பண்ணிக்கொண்டிருக்கிறேன். நான் வெகு சுவடிகளையெல்லாம் எத்தனையோ பிரயாசப்பட்டு உண்டாக்கி, உனக்காகச் சேர்த்துவைத்தேன். என்னுடைய பிள்ளையாயிருக்கிற நீ முட்டாளாய்ப் படிக்காமற் கெட்டுப்போகிருயே என்ருர்.

வேதநாயகம்: ஐயா எனக்குப் படிப்பு வருமா என்ருன்.

தகப்பன்: கவனித்துப் படித்தாயானல் கடவுள் உன் கண்ணைத் திறப்பார். உன் புத்தியைத் தெளிவாக்குவார். நீ படித்துக் கெட்டிக்காரனுவாய் என்ருர்.

வேதநாயகம்: ஐயா எனக்குப் பாடம் எழுதிப் போடுங்கள். இனி நான் கவனித்துப் படிக்கிறேன் என்ருன்.

தகப்பனுர் மறுநாள்முதல் தன் மகனுக்குப் பாடங்களும் கணக்குகளும் ஓலையில் எழுதிப்போட்டுப் படிப்பித்து வந்ததுமன்றி, திட்டமாய் ஒப்புவிக்கிற பாடங்களுக்கு, தின்பண்டங்களும் காசுகளும் கொடுத்து ஒருவித உபாயத்தைக் கையாடி வந்தார்.

9. தேவசகாயம் பிள்ளை சுவிசேட மார்க்கத்தில் உட்பட்டதும், சங். சுவார்ச்சையரிடத்தில் தன் மகனை ஒப்புவித்ததும்

1785 ஹூ பாளையங்கோட்டையில் கர்னலாயிருந்த இலீட்டட்டன்துரை பெண்சாதி, பாப்பாத்தி கிளாரிந்தாளம்மாள் தேவசகாயம்பிள்ளைக்கு, ரோமான் சபையிலுள்ள தப்பிதங்களை தெரிவித்து, அவருக்குச் சுவிசேட மார்க்கத்தைப் படிப்பிக்க, அவரை சங். தகப்பனுர் பிரடரிக் சுவார்ச்சையரிடத்துக்கு அனுப்பினுள். அவர் தஞ்சாவூருக்கு வந்து நாலுமாதமிருந்து, வேத உபதேசங்களைத் திட்டமாயறிந்துகொண்டு திடப்பட்டு, மறுபடியும் பாளையங்கோட்டைக்குத் திரும்பிவந்தார்.

அந்த வருஷத்திலே சுவார்ச்சையர் திருநெல்வேலி சபை விசாரணைக்குப் போயிருந்தார். வேதநாயகம் தன் தகப்பனேடேயிருந்தான். ஒருநாள் இரவில் வேதநாயகம் செபம்

ஐயர் தஞ்சாவூருக்கு வந்து, துளசி மகாராசாவைக்கண்டு அரண்மனைக்கடுத்த விஷயங்களைப் பேசிக்கொண்டபின்பு அந்த தை மாதத்திலேதானே துளசி மகாராசா மரணமடைந்தார்.

10. வேதநாயகத்தை சுவார்ச்சையர் பட்சமாய் நடத்தினதும் இவன் அவருக்குச் செய்த ஊழியமும்

வேதநாயகம் தஞ்சாவூருக்கு வந்த துவக்கத்திலே, ஐயரிடத்தில் போய் நான் படிக்கத் தங்களுக்குச் சித்தமான ஒரு புஸ்தகம் கொடுங்களென்று கேட்டான். ஐயர் ஒரு சங்கீத புஸ்தகத்தை எடுத்து வாழ்த்திக் கொடுத்தார். ஐயர் துவக்கமாக, சங்கீதப் புஸ்தகத்தைத் தம்முடைய கையினுலே வாழ்த்திக் கொடுத்த ஆசீர்வாதத்தினுலே இவர் கர்த்தருடைய சங்கீதக்காரனும் பேர்பெற்ற வித்துவானுமானுர்.

மேலும் ஐயர் வீட்டிலே இவருக்கு யாதொரு குறைவுமில்லாமல் அன்ன வஸ்திரங் கொடுக்கப்பட்டு பிள்ளைபோல் வளர்க்கப்பட்டார்.

அக்காலத்திலே சங். தகப்பனுர் பிரடரிக் சுவார்ச்சையர் தேசத்துக்கு இடறலில்லாதபடி நடந்துகொண்டு, தமது உபதேசங்களை எல்லாச் சாதியாரும் வந்து கேட்கும்படிக்கு, ஒரு உபாயத்தைக் கையாடி, தமது வீட்டில் சமையல் முதலான போசன பானங்களுக்கடுத்த சுயம்பாகிகளாக, உயர்ந்த சாதியாரையே வைத்திருந்தார். இந்த நல்ல ஒழுங்கினுல் இந்துக்களில் பலர் அவரிடத்தில் வந்து, தங்கள் ஆத்தும ஈடேற்றத்துக்கேற்ற உபதேசங்களைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றதுமன்றி, தங்கள் பிள்ளைகளையும், கல்விகற்கும் பொருட்டு அவரிடம் ஒப்புவித்தார்கள்.

சங். தகப்பனுர் சுவார்ச்சையர் அவர்கள் ஆத்துமாக்களை விலையேறப்பெற்றதென்றெண்ணி, அவர்களுக்கு இடறலான உபதேசம் சொல்லாமல், அவர்கள் இரட்சிக்கப்பட்டால் போதுமென்று, அவர்களை மிகுந்த பட்சமாய் சிநேகித்து, அவர்களுக்கு ஒரு நல்ல தகப்பனைப்போலிருந்தார். அல்லா

மலும் ஐயர் தம் வீட்டிலிருக்கிற வேதநாயகத்தை, படிப்பு நேரந்தவிர மற்ற நேரங்களில் குறிக்கப்பட்ட வேலைகளை மற்றப் பிள்ளைகளோடே சேர்ந்து செய்யச் சொல்லுவார்.

ஐயர் மாலை நாலு மணிக்குமேல் படுத்துக்கொண்டு சற்றுநேரம் நித்திரை செய்வார். அப்பொழுது வேதநாயகம் ஐயருக்கு நித்திரை வருமட்டும் வேதாகமத்தை வாசித்துக்கொண்டிருப்பான். வேதநாயகம் வாசிக்கிறது ஐயருக்குத் தெளிவாயிருந்தபடியினால், எப்பொழுதும் அவனைத் தமக்குமுன் இருந்து வாசிக்கக் கற்பித்தார்.

சிலவேளை ஐயருக்குக் கைகழுவத் தண்ணீர் வார்த்தும், சிலவேளை அவருக்குக் கால் பிடித்துக்கொண்டுமிருப்பான். ஒருநாள் அவன் ஐயருக்குக் கால் பிடித்துக்கொண்டிருந்த போது, பரலோகத்தின் மகிமையையும், அங்கு வசிக்கப்போகிற மோட்சவாசிகளுடைய வாழ்வைப் பற்றியும் உள்ள விசேடங்களை, வேதநாயகத்துக்கு ஐயர் சொல்லிக்கொண்டிருந்தார். அப்பொழுது வேதநாயகம் ஐயா! நான் உங்களோடு கூட பரமண்டலத்துக்கு வந்து, அங்கே எப்போதும் உங்களுக்குக் கால் பிடித்துக்கொண்டிருக்க விரும்புகிறேன் என்றான்.

ஐயர், அதற்கு அப்பா! பரமண்டலத்திலே கால் வலிக்குமா? அங்கே பெலவீனமாகிலும் விசனமாகிலும் ஒன்றுமிராது. அது காரியங்களைப் பற்றி நீ அதிகம் அறியவேண்டியதிருக்கிறது என்றார்.

மேலும் ஐயர் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூட பாடம் மட்டும் போதுமென்றிராமல், காலை மாலை செபத்திலும், மற்ற ஒழிந்த வேளைகளிலும் அவர்களோடே வேத காரியங்களைப் பற்றிப் பேசிப் போதித்து, அவர்களை அறிவாளிகளாக்க உட்கருத்தாய்ப் பிரயாசப்பட்டார்.

இவ்விதம் வேதநாயகம், சங். தகப்பனுர் பிரடரிக் சுவார்ச்சையரிடத்தில் படித்துக்கொண்டிருந்த இரண்டாம் வருஷம் வேதநாயகத்தின் பெற்ருேர் தஞ்சாவூருக்கு வந்தார்கள். அவர்கள் வந்து நாலைந்து நாளானபோது அவர்கள் இங்கிருந்தால் வேதநாயகத்தின் படிப்புக் கெட்டுப்போகுமென்ற

றிந்து தரங்கன்பாடியிலிருந்து வந்திருந்த டாக்குத்தர் யோனேயரோடே (Dr. John) வேதநாயகத்தை அனுப்பினுர்.

11. வேதநாயகம் தரங்கன்பாடி பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கப்பட்டது

1789ஸ்ல வேதநாயகம் சங். டாக்குத்தர் யோனேயரோடே தரங்கன்பாடிக்குப் போனுன்.

யோனேயர் வேதநாயகத்துக்கு முதலாவது வேதசாஸ்திரத்தைக் கொடுத்து, நீ இந்தப் புஸ்தகத்தைப் படித்துப் போகவேண்டுமென்று சொன்னுர். அந்தப்படியே இவர் பாடின சகல பாவினங்களும், வசன நடைப்புஸ்தகங்களும் வேதசாஸ்திரக் கருத்துக்கிசையப் பாடினதினுலே வேதசாஸ்திரி என்று அழைக்கப்பட்டார்.

வேதநாயகம் தரங்கன்பாடியிலிருந்து படிக்கிறபோது, ஒவ்வொரு சாயுங்காலத்திலும் யோனேயரோடே உலாவப் போகிற வழக்கமிருந்தது. அப்பொழுது ஐயர் பல உபதேசங்களேயும் சீர்மைக் கதைகளேயும் சொல்லிக்கொண்டு நடந்து போவார். டாக்குத்தர் யோன்ஐயர், கேமரர் ஐயர், உரோத்துலர் ஐயர்மார்களும் வேதநாயகத்தை பட்சமாய் விசாரித்தார்கள். இவன் பள்ளிக்கூடத்தில் சாப்பிட்டுக்கொண்டு இரண்டு வருஷகாலம் வேதசாஸ்திரம், சோதிட சாஸ்திரம் (வான = Astronomy) முதலானதைப் படித்துவந்தான்.

அல்மா ஞாப் (German = Allemagne) பாஷையில் சுவிசேஷம் வாசிக்கக் கற்ருலும் அந்தப் பாஷையில் தேறவில்லே. இங்கிலிஷிலும் சிறிது பயின்ருர். அங்கே படித்தபின்பு திரும்பவும் தஞ்சாவூரிலிருக்கிற சங். சுவார்ச்சையரிடத்தில் வந்து சேர்ந்தார்.

12. சுவார்ச்சையர் வேதநாயகத்தை முதல் வகுப்பு ஆசிரியராக ஏற்படுத்தினுர்.

சுவார்ச்சையர், வேதநாயகத்துக்கு இப்பொழுது போதுமான வயதும் அறிவுமிருக்கிறது. அவன் இனி படிக்கத் தேவையில்லே என்று சொல்லி, சபை விசாரணக்குப்போன ஞானமுத்து உபதேசியார் முதலானவர்களோடே, உதவியாளாக அனுப்பினுர்.

இவர் தஞ்சாவூரைச் சேர்ந்த வல்லம், புதுப்பட்டி, பூத லூர், சித்திரகுடி முதலான இடங்களுக்கும், இராமநாதபுரம், உத்திரகோசமங்கை முதலான தெட்சண பாகங்களுக்கும், அவர்களோடே போயிருந்து, அவர்கள் செய்த ஊழியத் துக்கு மிகவும் உதவியாயிருந்தார். இவருக்கு பத்தொன்பது வயதாகிறபோது சங். தகப்பனூர் பிரடரிக் சுவார்ச்சையர் இவரை சாஸ்திரப் பள்ளிக்கூடத்துக்கு முதல் வகுப்பு ஆசிரி யராக நியமித்தார்.

இவர் தம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வேதசாஸ்திரத்தையும் லௌகீக ஞானநூல்களையும், கணக்கு சாஸ்திரத்தையும், உண்மையும் சுறுசுறுப்புமாய்க் கற்பித்தார். சுவார்ச்சையர் இவருடைய சாமர்த்தியத்தையும், இவர் பிள் ளைகளை நடத்துகிற ஒழுங்கையுங்கண்டு, இனிமேல் மாண வர் தரங்கன்பாடிக்குப் போய்ப் படிக்கவேண்டிய அவசிய மில்லை என்றார். அதனால் துரைமாருடைய பிள்ளைகளும், நாட்டையர்மாருடைய பிள்ளைகளும் இவரிடத்திலேயே வந்து படித்தார்கள்.

13. வேதநாயக சாஸ்திரியின் ஊழியம்

இவரிடத்தில் படித்த பிள்ளைகளில் ஐந்து பேர் குருப் பட்டம் பெற்றார்கள். எழுபதுபேர் வாத்திகளும், உபதேசி களும், தேச உத்தியோகஸ்தருமானார்கள். இதன்றி சீர்மை ஐயர்மாரில் சிலருக்கு முனிஷியாக இருந்து தமிழ் படித்துக் கொடுத்தார்.

இவருக்கு பாடுகிற வரமுண்டாயிருந்தபடியினாலே, இராப் பகலாய்ப் பிரயாசப்பட்டுத் தன்னுடைய இருபதாம் பிராய முதல் சபைக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் உதவியான சிறி தும் பெரிதுமான நூற்றிருபது புஸ்தகங்களைச் சாஸ்திர மேரையாக உண்டுபண்ணி, கிறிஸ்தமான உபதேசங்களை யெல்லாம் வேதவழுவின்றி, அநேகவிதப் பாடலும் புலம்பலு மாகச் செய்ததுமன்றிக் கர்த்தருடைய சகல பண்டிகைநாட் களிலும், ஞானஸ்நானம் கலியாணம் முதலிய சகல சந் தோஷ நாட்களிலும், சில மாணாக்கருடைய உதவியைக் கொண்டு, பாடிவருகிற வழக்கத்தை உண்டுபண்ணினார்.

அன்றியும் இந்துக்களுக்கும் பாப்பு மார்க்கத்தாருக்கும் தெளிவூட்டுகிற சில புஸ்தகங்களை உண்டுபண்ணித் தம் வீட்டிலே வருகிறவர்களுக்கும் தாம் வெளியே புறப்படுகிற போது காணப்படுகிற கூட்டங்களுக்கும் வாசித்துக் காண்பித்து, கிறிஸ்துவை அறிவித்துக்கொண்டிருப்பார்.

இது மாத்திரமல்ல 1814 ஸு முதல் 1863 ஸு வரை கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கிற தவசு நாட்களிலே, தமது வீட்டின் முகப்பிலே பந்தல் போட்டுப் பிரசங்கச் சதுர் உண்டாக்கி, ஒவ்வொரு நாள் இரவிலும், ஏழரை மணி முதல் பத்தரை மணி வரை வெளியரங்கமாய்ப் பிரசங்கிப்பார். அவர் பேசுகிற சத்தம் இன்பமும் தெளிவுமாயிருக்கிறதுமல்லாமல் வெகுதூரமும் கேட்கும். அதைக் கேட்கிறதற்காகக் கிறிஸ்தவர்களும் ரோமானித்தரும், மகமது மார்க்கத்தாரும், இந்துக்களுமான திரள் சனங்கள் வந்து கூடுவார்கள்.

இவர் பராபரனுடைய தேவ சுபாவ மகிமைகளையும், சிருட்டிப்பின் கிரியைகளையும், பராபரன் பழைய ஏற்பாட்டுக் காலத்திற் செய்த அவருடைய அதிசயமான வல்லமைகளையும், கிறிஸ்துவின் மனுஷ அவதாரம் துவக்கி, அவர் பாடுபட்டு மரித்து, உயிர்த்துப் பரமண்டலத்துக்கேறிப் பிதாவின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, பரிசுத்தாவியை அனுப்பி இனி நடுத்தீர்க்க வரப்போகிற கடைசி நாளின் வர்த்தமானத்தையும், நவ எருசலேம் பட்டணத்தையும், சாபதுநாளின் கொண்டாட்டத்தையும் பற்றிய விசேடங்களையும் அந்த நாற்பத்தைந்து நாட்களில் பாடி விஸ்தரிக்கிறது அவருடைய பிரதான வேலை.

இவர் பிரசங்கிக்கிறபோது வெள்ளை நிலையங்கி தரித்துக் கொண்டு, தலையிலே சிவப்பு சவுத்தனுக் குல்லாப் போட்டுக் கொண்டு இடையிலே கச்சை கட்டிக்கொண்டிருப்பார்.

இவருடைய சதுர்ப் பிரசங்கங்களை சங். தகப்பனூர் கோலப் ஐயரும், சாப்பிளன் போலே ஐயரும், அவர்களுக்குப் பின்பு வந்த மற்றெல்லா மிஷனெரிகளும் வந்து கேட்டறிந்தார்கள்.

14. வேதநாயக சாஸ்திரிக்கு திருச்சபையாரால் கொடுக்கப்பட்ட பெயர்களும், அந்தந்தச் சபை யாரால் நடந்த மரியாதைகளும்.

அவர் பள்ளிக்கூடத்து ஆசிரியராயிருந்தபோதே சனங்கள் அண்ணாவியாரென்று அவரைக் கனமாயழைக்கத் துவக்கினார்கள்.

பின்பு 1808 ௵ அவருடைய கவிவல்லபத்தையும், பிரசங்க சாதுரியத்தையும், தஞ்சாவூர்ச் சபையார் அறிந்தபோது, அவரைக் கனப்படுத்தி அவருக்கு, வேதசிரோமணி மகா ஞானக் கவிச்சக்கரவர்த்தியாரென்று பெயரிட்டழைத்து அதற்கு நற்சாட்சி நிருபமெழுதி சபையாரனைவருடைய கையொப்பத்தோடே கொடுத்தார்கள்.

அப்படியே அந்த வருஷத்திலே, தரங்கன் பாடி சபையார், சதுர் வைத்து, ஞான நொண்டி நாடகம் அரங்கேற்றக் கேட்டு, சுவிசேட கவிராயரென்று நாமந்தரித்து, நற்சாட்சி நிருபமுமெழுதிக்கொடுத்து, பல்லக்கிலேற்றி பட்டணப் பிரவேசம் பண்ணி வைத்தார்கள்.

அதன்பின் 1806 ௵ ஆடி மீ˚ ஜூபிலி பண்டிகைக்கு, இவருடைய சமுசார சகிதமாய்க் கூட்டத்தோடே தரங்கன் பாடிக்குப் போயிருந்து, எருசலேம் தேவாலயத்திலும் பெத்லகேம் தேவாலயத்திலும் பாடிப் பிரசங்கித்தார்.

இவருடைய பிரசங்க ஆரம்பத்திலே, கர்த்தராகிய ஆண்டவர் லூத்தரையெழுப்பி, நம்மை ரோமான் மார்க்கத்தின் அந்தகாரமான கட்டுப்பாட்டுக்கு நீங்கலாக்கி விட்டதற்காகவும், சீகன்பால்க்குச் சேட்டர், இந்த இருளான இராச்சியத்தில் வந்து கிறிஸ்துவைப் பிரசங்கித்த நாள் முதல் இதுவரைக்கும், கிறிஸ்து மார்க்கம் இந்த இந்து தேசத்தில் நிலைத்திருக்கிறதற்காகவும், இவ்விடத்தில் கூடிவந்திருக்கிற நாமனைவரும், கர்த்தரை ஸ்தோத்திரிப்போமாக என்று சொல்லி, அந்தப் பண்டிகையில் சனங்களுக்கு மிகுத்த எழுப்புதலை உண்டுபண்ணினார். எல்லா ஐயர்மாரும் சபையாரும், இவரைக் கனப்படுத்தி மரியாதை செய்தார்கள்.

1809 ஹூ சென்ன பட்டணத்துச் சபையார் சதுர் வைத்து, பெத்லகேம் குறவஞ்சி அரங்கேற்றக் கேட்டு, முத்துசாமியா பிள்ளை சபையின் நாமத்தினாலே, அறுபத்தைந்து விராகனுக்கு, புதுப் பல்லக்கு உண்டுபண்ணி சங். பெத் சொல்த்தையர் உத்தரவுப் பிரகாரம் வெப்பெரி தேவாலயத்தின் சன்னதி வாசல் முகப்பிலே கொண்டுவந்து வைத்து, தமிழ்ச் சபையார், வலங்கைச் சபையார் இருகூட்டமும் ஒரு மனதாய்க் கூடிவந்து நின்று, ஞானதீபக் கவிராயரென்று பெயரிட்டு, நற்சாட்சி நிருபமுங் கொடுத்து வஸ்திராலங்காரம் செய்து, பல்லக்கிலேற்றி பட்டணப் பிரவேசம் செய்தார்கள்.

1815 ஹூ திரிச்சிராப்பள்ளி சபையார் சிந்தாமணி வாசலுக்கெதிரே பட்டணத்து வீதியிலே பந்தல் போட்டு மரப் பீடம் உண்டுபண்ணி, இருவகுப்பு சனமும், துரைமார் துரைசானிகளும், ஒருமனப்பட்டுக் கூடிவந்திருந்து, நாற்பத்தைந்து நாள் பேரின்பக் காதல் அரங்கேற்றக் கேட்டுச் சதுர் முடிந்து, பட்டாபிஷேகத்தன்றைக்கு சங். போலே ஐயர் எல்லா நாட்டையர் மாருக்கும் அங்கி கொடுத்தபடி இவருக்கும் தம்முடைய செலவில் அங்கி செய்து, தரிப்பித்து வேதசாஸ்திரியார் என்றெழுதப்பட்ட நிருபத்தைப் பட்டணத்தார் கேட்க, சபையார் எழுந்திருந்து நிற்க, அவ்விடத்திற் பிரதானமாயிருந்த ஞானப்பிரகாச உபதேசியார் நின்றுகொண்டு உரத்த சத்தமாய் வாசித்து, இவர் கையிலே கொடுத்தார்கள்.

அதுமுதல் இந்த அவருடைய முதுமையின் காலமாகிய எண்பத்தொன்பது பிராய மட்டும் வேதநாயக சாஸ்திரியென்று அழைக்கப்பட்டு வருகிறார்.

15. வேதநாயக சாஸ்திரி யாழ்ப்பாணத்துக்குப் போயிருந்தபோது அங்கே நடந்த அதிசயம்.

1811 ஹூ யாழ்ப்பாணத்துக்கு சமுசாரசகிதமாய்ப் புறப்பட்டுப் போனார். அப்போது வடகாற்று அடிக்காதபடியினாலே தோணி ஓட்ட தாமதப்பட்டது. இவர் வழிச்செலவுக்காக வைத்திருந்த பணமெல்லாம் செலவழிந்து போயிற்று. அப்

வந்து பரிதபித்து, எல்லா வஸ்திரங்களையும் திருடன்கொண்டு போய்விட்டானென்று சொல்லிக் கையை விரித்தான்.

ஏனடா பொய் சொல்லுகிறாய் என்றபோது, அவன் ஐயா! கதிர் காமர் மேலே ஆணைப்படிக்குத் திருடன் கொண்டு போனது உள்ளதென்றான். புறத்தியிலே விசாரித்து அந்த வண்ணான் சொல்லுகிறது உண்மையென்று கண்டுகொண்டார்.

அப்பொழுது இவர் மனஸ்தாபப்பட்டு கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி என்னுடைய வஸ்திரங்களெல்லாம் களவுபோய்விட்டது. நான் இப்பொழுது வெளியே புறப்படக்கூடாதிருக்கிறேன். என்னோடே வந்தவர்களுக்கும் எனக்கும் இப்பொழுது வஸ்திரங் கொடுத்து, நாங்கள் சந்தோஷத்தோடே வெளியே போகக் கிருபைசெய்யும் என்று பிரார்த்தனை பாடி செபம் பண்ணினபின்பு இரண்டொரு ஞானப்பதங்களைப் பாடிக்கொண்டிருந்தார். "நெஞ்சே நீ கலங்காதே'' என்ற பாடலும் அந்த ஊரில்தானுண்டுபண்ணப்பட்டது.

அப்போது அந்த மார்க்கமாய்ப் போகிற புகையிலைக் குத்தகையெடுத்த இராமசாமிபிள்ளை யென்ற ஒரு இந்து வெளியே வந்துநின்று, ஐயா, உள்ளே வந்து கேட்க உத்தரவுண்டோ என்றான். இவர் சுகமே வரலாமென்று உள்ளே அழைத்தார். அந்த மனுஷனை இவர் முன்னொருக்காலும் கண்டிருந்ததில்லை. இவர் சற்று நேரம் பாடல் கேட்டுக்கொண்டிருந்தபின்பு, நீங்கள் துக்கமாயிருக்கிற முகாந்திரமென்னவென்று விசாரித்தார்.

சாஸ்திரியார் வஸ்திரங்களவுபோன விவரத்தைக் கூறினார். அந்த மனுஷன் உடனே தன்னிடத்திலிருந்த ஒரு ஆளை அனுப்பி இரண்டு சேலை எடுத்துவரச்சொல்லி, பட்டுச்சேலையை உங்கள் சமுசாரத்துக்கும், மற்றச் சேலையை உங்கள் வேலைக்காரிக்கும் கொடுங்களென்று கொடுத்து, தன் சாக்கிலிருந்த ஐம்பது இரையால் அடங்கிய ஒரு பாங்கி நோட்டு எடுத்துக்கொடுத்து, நீங்கள் உங்களுக்குச் சம்மதியான வஸ்திரங்கள் வாங்கிக்கொண்டு, பத்தாதே போனால்

கிறீர், எச்சரிக்கையாயிரும். யாரையாவது உமது மார்க்கத்தில் இழுத்துக்கொள்ளாதேயும் என்றார்.

இவர், இராசாவுக்கு நான் ஞானஸ்நானங் கொடுக்கிறவனல்ல, அதற்காகக் குருக்கள் இருக்கிறார்கள். நான் புத்தி மாத்திரம் சொல்லுவேன் என்றார். ஆகிலும் மகாராசா பேசினது, இவர் மனச்சாட்சிக்கு மெத்த வருத்தமாயிருந்தது. அப்பொழுது இவர் கண்ணீர்விட்டு, கர்த்தர் என்னை மனுஷனாக்கித் தம்மைப் பாடுகிற வரத்தையும் எனக்குத் தந்தார். இந்த அற்பப் பொருளுக்காக நான் அவரைப் பாடாமலும் பிரசங்கியாமலும் பூமியிலிருந்து பயனென்ன? இன்று இரவிலே என்னைப் பாம்பு கடித்து நான் செத்தால், இராசாவுடைய பணம் எனக்கென்னத்துக்குதவும் என்று மனதிலே எண்ணி, இராசா கொடுத்த பணத்தை மறுபடியும் அவரிடத்திலே கொடுத்துவிடக் கொண்டுபோனார்.

அத்தருணத்தில் இராசா உள்ளே அரண்மனைக்குட் போயிருந்தார். அங்கே அவருடைய மந்திரி பாவாப் பண்டிதர் மாத்திரம் இருந்தார். அவர் இவருடைய மார்க்க வைராக்கியத்தைக் கண்டு, உம்முடைய சுவாமியை நீர் பிரசங்கிக்க வேண்டாமென்று மகாராசா சொல்லவில்லை; யாரையாவது இழுக்காதேயுமென்று மாத்திரஞ் சொன்னார். நீர் சுகமே உம்முடைய சுவாமியைப் பிரசங்கித்துக் கொண்டிரும்; அதற்குத் தடையில்லை என்று சொல்லிப் பணத்தை ஒரு மாணுக்கனிடங் கொடுத்து,இவரோடே கூட வீட்டுக்குக்கொண்டு போகச் சொன்னார்.

மகாராசாவோடு கூட இருக்கிற பிராமணரும் சாஸ்திரிகளும், இவர் மகாராசாவோடே சரிசமானமாய்ப் பேசுகிறாரென்று பொருமைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

17. மகாராசா, சாஸ்திரியாரிடம் பிள்ளையாரைப் பாடச் சொன்னதுபற்றி சாஸ்திரியார் கூறினது:

மகாராசா அவர்கள், நான் பாடின பெத்தலேகங் குறவஞ்சியைக் கேட்டுத் தம்முட தேவனாகிய பிரகதீஸ்வரன் பேரிலே அப்படி ஒரு குறவஞ்சி பாடச் சொன்னார். நான் நடுக்கத்தோடே பராபரனைத் தவிர வேறொன்றையும் பாடக்

கூடாதென்றேன். அதற்கு மகாராசா நான் சம்பளங் கொடுக்கிறபடியால் நான் சொன்ன வேலையை நீர் செய்ய வேண்டியதில்லையா? என்றார்.

அதற்கு நான் ஆண்டவனே, சங். தகப்பனார் சுவார்ச் சையரவர்களால் வளர்க்கப்பட்ட சீஷனாயிருக்கிறேன். எனக் கிப்போது ஐம்பத்தாறு பிராயமாகுது. இதுமட்டும் பராபரன் என்னைப் பராமரித்து நடத்தி வந்தார். இப்போது சபையிலே வந்த புது மிஷனெரிமார்களுண்டுபண்ணிய சாதி வேற்று மைக் கலவரத்தால் தங்கள் சமுகத்தில் வந்தேன். இப்பொ ழுது என் சிருஷ்டிகருக்கு விரோதமாகப் பாவஞ் செய்கிறதி னாலே அவருக்கு சத்துருவாவேன். இதைவிடத் தாங்கள் என்னைத் தள்ளிப் போடுகிறதாயிருந்தால், தங்கள் சித்தம் என்றேன்.

அதற்கு மகாராசா, அதை எப்படி நீர் பாவமென்று சொல்லலாம்? அது குற்றமா என்றார். அதற்கு நான் மகா ராசாவே நான் தங்களாலே போஷிக்கப்பட்டு சில வருஷத் துக்குப் பிறகு, தங்களை விட்டு இன்னொரு ராசாவைப்போய்ச் சேர்ந்துகொண்டால் தங்களுக்கு யான் பிரியமாயிருப்பேனோ, தாங்கள் என்னைச் சத்துருவா யெண்ணமாட்டீர்களா, அப்ப டிப்போலவே சங். தகப்பனார் சுவார்ச்சையரவர்கள் திருநெல் வேலிக்கு வந்து, என்னைப் பன்னிரண்டு வயதிலே கூட்டி வந்து இதுவரைக்கும் எனக்கு அன்னவஸ்திரம் கொடுத்து ஆதரித்து, எனக்குப்போதித்த உபதேசத்திற்கு விரோத மான காரியத்தை இப்போது செய்தால் நான் அவருக்குச் சத்துருவாய்ப் போகமாட்டேனோ என்றேன்.

அதற்கு மகாராசா, நீர் குறவஞ்சி பாடாதே போனால் போகட்டும். ஒரு காப்பு மாத்திரம் பிள்ளையார் பேரிலே உண் டாக்கிக் கொடுமென்று சொன்னார். அதற்கு நான் குறவஞ்சி பாடாமல் ஒரு சின்னப்பாட்டு மாத்திரம் பாடினாலும் கர்த்த ருடைய பார்வையில் நான் குற்றவாளிதான். நான் அப்படிச் செய்யக்கூடாது மகாராசாவே என்றேன். அப்போது மகா ராசா என்னைப் பார்த்து: உம்முடைய ஏகநாதர் பேரிலே நாங்களொரு பாட்டுப் பாடுகிறோம்; நீர் எப்படிச் சொன்

னீரோ அப்படியெல்லாம் வைத்து இன்னம் அதிகமாகவும் பாடித்தருகிறேம். அதின் பிறகாகிலும் நீர் எங்கள் பிள்ளையார் பேரிலே ஒரு காப்புப் பாடிக் கொடுக்கலாமே என்ருர்.

அதற்கு நான் மகாராசாவே, நீங்கள் இயேசுநாதர் பேரிலே பாடுவீர்களென்கிறதற்குச் சந்தேகமில்லை. அப்படி நீங்கள் பாடினுலும் நான் பிள்ளையாரைப் பாடக்கூடாதென்றேன். மகாரர்சாவுக்கு ஆயாசமுண்டாகித் தம்முடைய சங்கத்தாரைப் பார்த்து, என்ன காணும்? இவருடைய சுவாமியின் பேரிலே பாடல்களை நாங்கள் கேட்கவேணுமாம். நாங்கள் அவருடைய சுவாமியின் பேரிலே பாடினுலும், அவர் எங்கள் சுவாமியின் பேரிலே பாடக்கூடாதாம், இதெப்படியிருக்கிறது என்ருர். அதற்கு அவர்கள் சும்மா பாடுங்காணும், மகாராசா வார்த்தையைத் தட்டாதேயும் என்ருர்கள்.

அதற்கு நான் மகாராசாவே தங்கள் பணிவிடைக்காரர் போல் என்னைப் பாவித்து நடத்தவேண்டியதில்லை. எத்தனை யானை, குதிரை, மாடுகள் முதலான மிருக சீவன்களை வைத்து ஆதரிக்கிறீர்கள். ஒரு யானைக்கு மாதம் எம்மாத்திரமோ செல்லுது. அப்படி என்னையும் ஒரு யானையாக நினைத்து நடத்தச் சித்தமாளுல் தங்கள் மனது; அல்லவென்று அனுப்பி விட்டாலும் தங்கள் சித்தம். இனி எல்லாரும் என்னை விரோதித்து தங்களுக்கு ஆயாசத்தை உண்டாக்குவார்கள்; பிழைக்கலாமென்று வந்த இடத்திலே இந்த சோதனை நேரிட்டதென்றேன். அதற்கு மகாராசா ஓய் வேதநாயகம் பிள்ளை! நீரொருத்தருக்கும் பயப்படவேண்டாம். எங்கள் சாமியையும் பாடவேண்டாம். உம்முடைய யேசுநாதரையே பாடிக்கொண்டு சுகமேயிரும் என்று அனுப்பிவிட்டார்.

இத்தருக்கங்கள் ஒரு சாமத்துக்கு அதிகம் நடந்தது, நான் மெத்த சுருக்கமா யெழுதினேன்.

இப்படி யெல்லாமிருந்தும், இஸ் அயினசு சரபோஜி மகாராசா, இவரைப் பட்சமாய்ச் சிநேகித்து நடத்திவந்தார். அவருடைய குமாரன் சீவாசி இராச பட்டத்துக்கு வந்த போது, கிறிஸ்தவர்களெல்லாரையும் பகைத்து இவரையும் அரண்மனைக்குள் வராதபடிக்குத் தடைபண்ணிஞர்.

18. வேதநாயக சாஸ்திரியின் சீஷப் பிள்ளைகளின் நாமங்கள்.

1. **தாவீது.** இவர் சமுசாரவாளியாகி குருப்பட்டம் பெற்று பாளையங்கோட்டை சேகரத்திலிருந்தார்.

2. **பரஞ்சோதி.** இவர் குருப்பட்டம் பெற்று சிக்கந்திரா பாகத்திலிருந்தார்.

3. **பேரானந்தம், பிச்சானந்தம்.** இவ்விருவரும் பெரிய உப தேசிகளாயிருந்து மரித்துப் போனார்கள்.

4. **தேவநேசம், தேவசகாயம்.** இவ்விருவரும் பெரிய உப தேசிகளாயிருந்து மரித்துப் போனார்கள்.

5. **வாமன்.** இவனையும் இவன் தாயையும், வேதநாயக சாஸ்திரி அக்கியானத்திலிருந்து திருப்பி, வாமனுக்காக அக்கியானத்திலிருந்து ஒரு பெண்ணை மார்க்கத்திலுட்படுத்தி விவாக முடித்து வைத்தார். இந்த வாமன் சென்ன பட்டணத்துக்கு இவரோடே கூடப் போயிருந்தான். பிற்பாடு அவருக்குத் துரோகம் பண்ணி விரோதியாயெழும்பினான்.

6. **தவசியப்பன்.** இவன் சில காலமிருந்து, சமுசாரவாளியான பின்பு உபதேசியாய் போனான்.

7. **துங்கானந்தம், சொரூபானந்தம்.** இவ்விருவரையும் வேதநாயக சாஸ்திரி குழந்தைப் பிராயத்திலே, கும்பகோணத்திலிருந்து கொண்டுவந்து, அவர்களுக்குக் கிறிஸ்தவ அறிவைப் படிப்பித்தார். அவர்கள் ஞானஸ்நானம் பெற்று, வாலிபமானபோது, அவர்கள் இனத்திலுள்ள பெண்களை மார்க்கத்திலுட்படுத்தி அவர்களுக்கு விவாகமுடித்து வைத்தார். இவ்விருவரும் சரபோசி மகாராசாவினிடத்தில் பாடின இராகத் தலைவர்கள்.

8. காரைக்கால் அந்தோணிமுத்தென்ற சீவானந்தம்பிள்ளை, சின்னப்பபிள்ளை, மனுவேல்பிள்ளை, சாந்தப்பபிள்ளை, சாமுவேல் மண்கொண்டான். இவர்களை ரோமான் மார்க்கத்திலிருந்து சபையிற் சேர்த்துக் கொண்டார்.

இவர்களெல்லாரையும் வேதநாயக சாஸ்திரி மிகுந்த பிரயாசத்தோடே வளர்த்துப் படிப்பித்து ஆளாக்கினார். அவர்

களை நடத்தப் போதுமான பணமில்லாததினாலும், அவர்களைச் சிநேகித்து நடத்தின சரபோசி மகாராசா மரித்துப் போனதினாலும், அவரவர் தங்கள் பாட்டுக்குப் பிழைக்கப் பிரிந்து போனார்கள்.

என்றாலும் இந்தக் காலத்திலே, அவருடைய பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளுமாகிய ஆண்களும் பெண்களும் அவருடைய ஊழியத்துக்கு உதவியாயிருக்கிறார்கள்.

19. வேதநாயக சாஸ்திரியின் குடும்பங்கள்.

வேதநாயக சாஸ்திரியின் இருபத்தோராம் வயதிலே, அவருடைய சொந்த அத்தை மகள் வியாகம்மாளென்ற பெண்ணை அவருடைய தகப்பனார் தேவசகாயம் பிள்ளையும், பிரடரிக் சுவார்ச்சையருமாக நியமித்து சங். சேனிக்கையரைக் கொண்டு விவாக முடிப்பித்தார்கள். அந்தப் பெண் கற்பமாயிருந்து மறுவருஷம் மரித்துப்போனாள்.

பிற்பாடு வேதநாயக சாஸ்திரி தன் அம்மான் மகள் மிக்கேலு முத்தம்மாளைத் தெரிந்துகொண்டு, மிகுந்த பிரயாசத்தோடே படித்துக்கொடுத்து, தன் இருபத்தேழாம் பிராயத்திலே சங். கோலப்பையரைக் கொண்டு, விவாக முடித்துக் கொண்டார்.

அந்தம்மாளுக்கு வெகுநாளாய்ப் பிள்ளையில்லாதிருந்ததினாலே, 1811 ஷூ தன் சகோதரி பெற்ற மகள் ஞானதீபத்தை முப்பது நாள் குழந்தையில் ஞானஸ்நானங் கொடுக்கிற அன்று, பெரிய செலவு செய்து தத்துப் புத்திரியாயெடுத்துக் கொண்டார்.

அந்த ஞானதீப அம்மாள் வேதநாயக சாஸ்திரியின் பிரசங்கச் சதுருக்கு மெத்தவும் உதவியாயிருந்து, அவருண்டு பண்ணின சகல புஸ்தகங்களிலும் அப்பியாசித்திருந்து, சகல இராகங்களையும் இனிதாய்ப் பாட சாமர்த்தியம் உடையவளாயிருந்தது மாத்திரமல்ல, இங்கிலிஷ் பாஷையைச் சாதுரியமாய்ப் பேசவும், எழுதவும் கற்றிருக்கிறதுமன்றி, அந்த அம்மாள் தமிழ்ச் சனங்களின் பிரயோசனத்துக்கென்று இங்கிலீஷிலிருந்து திருப்பின "இளமைப் பக்தி" என்ற புஸ்த

கம் சென்ன பட்டணத்து கமிட்டியாராலே அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அம்மாள் முப்பத்திரண்டு வயதுமட்டும் கன்னியாஸ்திரியாயிருந்து, பிற்பாடு இனத்திலே தானியேல் மங்களம் பிள்ளை யென்ற புருஷனுக்கு விவாக முடித்துக் கொடுக்கப்பட்டாள். அந்த அம்மாளுக்கு ஞானுகரமென்று பெயருள்ள ஒரு குமாரத்தியிருக்கிறது.

பிற்பாடு 1813 ஷ * ஞானசிகாமணி என்ற புத்திரன் பிறந்தான். இவரும் தன் மூத்த தமக்கையைப் போலப் படிப்பிக்கப்பட்டு, தஞ்சாவூர் சாஸ்திரப் பள்ளிக்கூடத்து முனிஷியாயிருந்து, ஐயர்மார்களுக்குந் தமிழ் படிப்பித்துக்கொண்டிருந்து, பாப்பு மார்க்கத்தாருக்கு சத்தியத்தை விளக்க இரு சமய சம்பந்தமென்ற புஸ்தகத்தையும், மகமது மார்க்கத்தாருக்கு உண்மையைத் தெரிவிக்க "மேசியா மகத்துவம்" என்ற புஸ்தகத்தையும் எழுதினர். அதை சென்ன பட்டணத்துக் கமிட்டியார் அச்சிட்டார்கள்.

அல்லாமலும் வேதநாயக சாஸ்திரி தன் குமாரன் ஞானசிகாமணிப் பிள்ளையை சில மாணுக்கரோடே அனுப்புவார். இவர்கள் போகிற இடங்களில் பிரசங்கச் சதுர் உண்டுபண்ணிப் பாடிப் பிரசங்கிப்பார்கள். எல்லாரும் இவர்களைப் பட்சமா யேற்றுக்கொண்டு, தங்களால் கூடிய நன்மையைச் செய்து அனுப்புவார்கள்.

ஒருமுறை மலையாளத்து மகாராசாவும், ஒருமுறை மைசூர் மகாராசாவும் தங்கள் அரண்மனைகளிலே அழைத்துக் கிறிஸ்துவைப்பற்றிப் பிரசங்கிக்கக் கேட்டு, வெகுமானம் பண்ணி அனுப்பினர்கள். இதினலே அவர் சுவிசேட புரான பிரசங்கியாரென்று பெயர் பெற்றுர்.

இவருக்கு இரண்டு தாரம். முந்தின தாரத்துக்கு சிரோமணி, தவோமணி என்ற இரண்டு ஆண்களும், தயாமணி

* இன்று பாகவதர் வேததாயகம் சாஸ்திரியார் என்கிற பெயருடன் ஊழியம் செய்துவருபவரும் அவரது முன்னேர்களும், வேதநாயக சாஸ்திரியாரின் மூத்த குமாரனுன ஞானசிகாமணி சாஸ்திரியாரின் பரம்பரையினர்

என்ற ஒரு பெண்ணும் உண்டு. இந்தப் பெண் மிக்கேல் பிள்ளை யென்ற ஒரு இனத்தானுக்கு விவாக முடித்துக் கொடுக்கப்பட்டு, வேதபோதக முதலிய குழந்தைகளைப் பெற்றிருக்கிறது. முந்தின தாரம் மரித்தபின், மறுதாரம் ஒரு பெண்ணை விவாகம் பண்ணினார். அவருக்கு செபமணி, சுபமணி, வேதமணி, சிவமணி என்ற ஆண்களும், நவமணி, ஜெயமணி என்ற பெண்களும் உண்டு.

வேதநாயகசாஸ்திரியின் முந்தின இரண்டு தாரங்களும் மரித்தபின், அவருடைய ஐம்பத்தைந்தாம் வயதிலே மூன்ருவது தாரமாக, தஞ்சாவூர் சாந்தப்பபிள்ளை மகள் வரோதய அம்மாளை சங். பிரதர்ட்டன் ஐயரைக்கொண்டு விவாகமுடித்துக்கொண்டார். இந்த அம்மாளை அவர், சிறுபிள்ளையாயிருக்கிறபோது தெரிந்துகொண்டு, சுவிசேஷம் வாசிக்கவும், எழுதவும் கற்றுக்கொடுத்தார். இந்த வரோதயம் அம்மாள் வேதநாயக சாஸ்திரியாருடைய முதுமையின் காலத்திலே, அவருக்கு மிகுந்த உதவியாயிருந்தார்கள்.

இந்த அம்மாள் சிலநாள் வியாதியாயிருந்தபோது, வேதநாயக சாஸ்திரியார் அந்த அம்மாள் தலையிலே கையை வைத்து செபம் பண்ணினபின்பு, பயப்படாதே நான் உனக்காகக் கர்த்தரிடத்திலே, கர்த்தாவே என் விருத்தாப்பியத்திலே இவளை எடுத்துக்கொள்ளாதேயும் என்று மெத்த உட்கருத்தாய் செபம்பண்ணியிருக்கிறேன்; ஆனதினாலே நீ இப்போது சாகமாட்டாய். எனக்குப் பின்னான காலத்திலேதான் ஒருவேளை கர்த்தர் உன்னை அழைப்பார் என்ருர். அதின்பின்பு மரணவியாதிப்பட்டிருந்த அந்த அம்மாள் சுகப்பட்டு அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

இந்த அம்மாள் * நோவா ஞானதிக்கம், தேவசிகாமணி என்ற இரண்டு ஆண்பிள்ளைகளையும், மனோன்மணி என்ற ஒரு பெண்பிள்ளையையும் பெற்ருர்கள்.

---

* தற்போது தஞ்சையில் இருந்துவரும் கனம் சேம் வேதநாயகம் சாஸ்திரியாரும், அவரது தகப்பனர் காலம்சென்ற கனம் வேதானந்தம் சாஸ்திரியாரும் இந்த நோவா ஞானதிக்கம் சாஸ்திரியாரின் பரம்பரையினர்.

நோவா ஞானதிக்கம் என்ற மூத்த குமாரன், தன் தகப்பன் வேதநாயக சாஸ்திரியின் சதுர் பிரசங்கத்துக்குக் கூட உதவியாயிருந்ததுமல்லாமல் சில வேளைகளில் சபைகளுக்குப் போய் கர்த்தரைப்பாடி பிரசங்கிக்கத் தகப்பனாலே அனுப்பப்பட்டதுண்டு.

அவன் அருளம்மாள் என்ற ஒரு பெண்ணை விவாக முடித்தான். பாமணி, அருள்மணி, இராகேல், சிகாமணி என்ற பெண்களும், வேதானந்தம் என்ற ஒரு ஆணுமுண்டு.

2-வது. மனோன்மணியம்மாள் தகப்பனுருடைய சதுருக்கு அவருண்டுபண்ணின பற்பல பாடல்களை இனிதாய்ப் பாடவும், சபையிலே வேதாகமங்களைத் திட்டமாய் வாசிக்கவும் உதவியாயிருந்து, இருபத்துநாலு வயதுக்குப்பின், இனத்திலே மாசிலாமணியாபிள்ளைக்கு விவாகமுடித்துக் கொடுக்கப்பட்டு, வேதசாஸ்திரமென்ற ஒரு பெண் குழந்தையைப் பெற்று 1861வது நாகபட்டணத்தில் வெஸ்லிமிஷன் பர்ச்சிலரையா பள்ளிக்கூடத்தின் பெண்பிள்ளைகளுக்கு இங்கிலீஷ் பாஷையும், தமிழ் இலக்கணமும் கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்து அந்த வருஷத்திலேதானே வியாதிப்பட்டு கர்த்தரிடத்திலே விசுவாசமாய் மரித்துப்போனாள். இந்த மனோன்மணியம்மாளுடைய புருஷன் நாகபட்டணத்திலே முனிஷியலுவலாயிருந்தாலும் சதுர்ப்பிரசங்கத்துக்கடுத்த பாடல்களைப் பாடக் கற்றிருக்கிறார். அவ்விடத்திலே பஜனையும் செய்கிறார்.

3-வது. எலியா தெய்வசிகாமணி. இவன் மற்றவர்களைப் போலவே, தன் தகப்பனுருடைய சதுருக்கு உதவியாயிருக்கிறதுமன்றி, தன் தகப்பனைப்போல சுயம்பாட வரமுடையவனாயிருந்து சில கீர்த்தனைகளைப் பாடியிருக்கிறதுமல்லாமல், அப்போஸ்தலர் நடபடி முழுவதையும் புராணமாகப் பாடியிருக்கிறான். வெளிகளிலும் சபைகளிலும் சதுர்ப் பிரசங்கம் நடத்துகிற வழக்கம் உண்டு.

20. அச்சிற் பதிக்கப்பட்டிருக்கிற வேதநாயக சாஸ்திரியின் புஸ்தகங்கள்

1. குருட்டு வழி. இந்தப் புஸ்தகம் இந்துக்களின் சாஸ்திரங்கள், புராணங்களிலுள்ள தப்பறைகளைக் காட்டி, அவர்

களைக் கர்த்தரண்டைக்கு மனந்திருப்ப ஏவுகிறதற்கானது. இது இந்துக்களிடம் பேச விரும்புகிறவர்களுக்கு மிகப் பயனுள்ளது. அமெரிக்கன் மிஷனெரிமார் இதைத் திரளாய் அச்சிட்டு சனங்களுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

2. சாஸ்திரக்கும்மி: இது இந்துக்கள் பார்க்கிறபடி, கிறிஸ்தவர்களும் நாட்கள் சாஸ்திரங்களைப் பார்க்கக் கூடாதென்றும், ரஸவாதமில்லையென்றும், கிறிஸ்தவர்களான தாழ்ந்த சாதியாரைத் தங்கள் சொந்த அவயவமாய் எண்ணி நேசிக்க வேண்டுமென்றும் எழுதப்பட்ட ஒரு விசேஷித்த நூல். இந்தப் புஸ்தகத்தை யாழ்ப்பாணத்திலுள்ள மிஷனெரிமார் அச்சிட்டு விற்பனை செய்கிறார்கள்.

3. விதிவிலக்கு: இது தலையெழுத்து அல்லது விதியின் படி நடக்குமென்று நம்புகிறவர்களின் அவிசுவாசத்தை எடுத்துப்போடும் பெலனுள்ள நியாயங்கள். இத்துடன் கிறிஸ்தவர்களானவர்களின் விசுவாசத்துக்கும் செபத்துக்கும் உதவியான பாவினங்களாகிய பராபரன்மாலை, ஞானேத்தப் பாட்டு, பேரின்பக்காதல், அதனுசியஸ் விசுவாசப்பிரமாணம், செபமாலை முதலான புஸ்தகங்களை சங். கிறிஸ்தியான் கோலப்பையர் பிரதர்ட்டனையர் முதலானவர்களின் கேட்டுக்கொள்ளுதலின்பேரிலே சென்ன பட்டணத்துச் சபையார் அச்சிட்டார்கள்.

4. கடைசி நியாயத்தீர்ப்பு, ஞானவுலா என்ற இரு புஸ்தகங்களையும், பாளையங்கோட்டை மிஷனெரிமார் அச்சிட்டு, அதற்குக் கொஞ்சம் நன்மை செய்தார்கள்.

5. பதகீர்த்தனை: இந்தப் புஸ்தகத்திலே இலேசான இராகங்களைத் திண்டுக்கல் மிஷனெரியாகிய சங். வைப்பையர் தெரிந்தெடுத்து, அவைகளின் இராகங்களை, தேவ ஊழியருக்குக் கற்றுக்கொடுத்து ஆராதனை நேரத்தில், பிரார்த்தனைக்கொப்பாய்ப் பாடிவருகிற வழக்கத்தையுண்டுபண்ணினர். இதை அவர் அச்சிற் பதித்தபோது, வேதநாயக சாஸ்திரியாருக்குக் கொஞ்சம் உதவி செய்தார்.

6. நூறு சுலோகம்: இதைத் தரங்கன்பாடிப் பூர்வ குருமார் வசன நடையாயுண்டுபண்ணியிருந்தார்கள். அதை இவர்

[illegible]

21. வேதநாயக சாஸ்திரியின் சிறுவயது முதல் அவரைக் கர்த்தர் நடத்திவந்த விதம்.

[illegible]

றதில் அலுவலாயிருந்தார். இவர் கவிராயராயிருந்தபடியி ஞலே சரபோஜி மகா ராஜாவின் போசலே ராச வங்கிஷ சரித் திரத்தைப் பாடலாகப் பாடினர். அப்பொழுது மகாராசா, இவருக்குத் தம்முடைய அரண்மனையிலே சம்பளம் பண்ணு வித்தார். இவர் மாதத்திலே இரண்டு தடவை மாத்திரம், இராசாவைப் போய்க் கண்டுகொண்டு, மற்ற நாளெல்லாம் தமக்குச் சம்மதியான வேலைகளைச் செய்து கொண்டிருப்பார்.

அந்த மகாராசா மரித்தபிற்பாடு இவருக்கு சிறுமையுண் டாயிற்று. இவருக்கு நிலபலமாகிலும், ஆஸ்தி பாஸ்தியாகி லும் கிடையாது. அதுகளையவர் விரும்பிச் சேர்த்து வைந் ததுமில்லை. இப்படியிருக்கிறபோது, ஆண்டவர் அவருக்கு ஒத்தாசையாக, கல்விக்கோட்டை சிரஸ்தார் தெய்வசிகாம ணிப் பிள்ளையை எழுப்பினர். அவர் கர்த்தருடைய பாடல் களைச் சிநேகித்தபடியினலே, இவருக்கு வருஷாந்திரம் நூறு விராகன் மட்டும் அனுப்பிக் கொண்டிருந்தார்.

அவரைக் கர்த்தர் எடுத்துக்கொண்டபோது அந்தந்தச் சபையிலுள்ள, தமிழ்ப் பாடல்களின் பிரயோசனத்தையறிந்த சில ஐயர்மார்களும், இரண்டொரு துரைமார்களுமாகச் சேர்ந்து, மாதாந்திரம் ஆளுக்கு அரையும் ஒன்றுமாகச் சேர்த் துக்கொடுத்து வந்தார்கள். அத்துடனே சர்மன் தேசத்திலே யிருந்து ஒரு உபகாரியை ஆண்டவர் புதிதா யெழுப்பினர். அவர் சங். அக்ட்டர்லோனி ஐயர் வசமாய்க் கொஞ்சம் நன்மை செய்து அனுப்பிக் கொண்டிருந்தார்.

1856 ஷு இவர் தரங்கன்பாடி ஜூபிலி பண்டிகைக்குப் போக ஆசைப்பட்டபோது, இவர் கையிலே ஒன்றுமில்லை. சமுசாரம் பிள்ளைகளுக்காக மாத்திரம் வண்டில் வைத்துக் கொண்டு, கால் நடையாய் நடந்துபோனர். இவர் ஐயன் பேட்டை மட்டும் எட்டு மைல் நடக்கிறதற்குள்ளாக, நாலைந்து இடத்திலே உட்கார்ந்து போனர். இவர் வண்டி லில் ஏறும்போது மயக்கமும் வாந்தியும் உண்டாகிறபடியால் வண்டிலில் ஏறமாட்டார். பல்லக்கில் மாத்திரம் ஏறிப்போகிற வழக்கம்; ஆனல் பல்லக்கு வைக்கிறதற்கு இவருக்குப் பெல னில்லை.

கர்த்தருடைய செபத்தைச் சொல்லி மன்றுடுகிறபோது "அன்றன்றுள்ள எங்களப்பத்தை, எங்களுக்கின்று தாருமென்று" சொல்லுகிற வழக்கம்போல நாங்கள் சொல்லி வேண்டிக் கொள்ளாமல், உண்மையாகவே அந்த நாளின் அன்றன்றுள்ள அப்பத்தைக் கர்த்தர் எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டு வருகிருேமென்ருர். சில வேளைகளில் அப்போதப்போது, தாழ்ச்சியுண்டாயிருக்கும்போது, இவர் கடன்பட்டுத் தம்முடைய கூட்டத்தை நடத்தவேண்டியிருக்கும்.

ஒருவேளை கடன் கொடுக்கிறவர்களும் தங்கள் மனதைக் கடினப்படுத்துங்காலத்தில் இவர் கர்த்தரை நோக்கி செபம் பண்ணி வருந்தரத்திலே, முப்பது லட்சம் சனங்களை நடத்தின வல்லமையுள்ள கர்த்தாவே! நாங்களும் எங்கள் பிள்ளைகளும் மாணுக்கரும், ஏறக்குறைய முப்பது பேரிருப்போம். இந்தச் சிறு கூட்டத்தை நீர் கிருபையாய்ப் பார்த்து, எங்கள் பாவங்களை மன்னித்து எங்கள் இரட்சகர் நிமித்தம் எங்கள் அன்றன்றுள்ள அப்பத்தைக் கட்டளையிட்டருளுமென்று வேண்டிக்கொண்டு, ஒன்றுக்கும் கவலைப்படாதிருப்பார். உடனே ஆண்டவர் எங்கேயிருந்தாகிலும், ஆச்சரியமான பிரகாரமாக, இவருக்கும் இவருடைய கூட்டத்தாருக்கும் படியளிப்பார்.

பின்பு தம்முடைய பிள்ளைகளையும் மாணுக்கரையும் பயணப்படுத்தி, அந்தந்த ஊரிலுள்ள கிறிஸ்தவ சபையாரிடத்தில் அவர்களை அனுப்பும்போது, செபம் பண்ணி அவர்கள் ஒவ்வொருத்தர் தலையிலும் சிலுவை வரைந்து ஆசீர்வதித்து அனுப்புவார். அவர்கள் எத்தனை தூரம் போனாலும், அங்கே என்னென்ன வியாதிகளிருந்தாலும், அவர் ஆசீர்வதித்து அனுப்பினவர்களில் ஒருத்தராகிலும் சாகாமல், சுகத்தோடும் சந்தோஷத்தோடும், சபையார் செய்த காணிக்கைகளோடும்கூட வீடுவந்து சேருவார்கள்.

மேலும் இவர் தஞ்சாவூரிலே வீடு கட்டிக் குடியேறின அறுபது வருஷக் காலங்களிலே வியாதிப்பட்டு, விஷபேதி கண்டு, துன்பப்பட்ட ஒருத்தராகிலும் பிராண சேதம் அடைந்ததில்லை. வைத்தியர்களெல்லாம் அவர்களைக் கைவிட்டா

றும், இவர் கர்த்தர் பேரிலே நம்பிக்கையாயிருந்து, தம்முடைய குடும்பத்தார் அனைவரோடுங்கூட, முழங்காலிலிருந்து சுவாமி திருவுளமாயிருமென்கிற சமுதாயப் பிரார்த்தனையைச் சொல்லி, வியாதிப்பட்டவர்கள் தலையிலே கையைவைத்து செபம் பண்ணி கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார். வியாதிப்பட்டவர்களுக்கு அப்போது கர்த்தர் இரங்கி நல்ல சுகத்தைக் கொடுத்திருக்கிற கண்கண்ட சாட்சியுண்டு.

இதினாலே எல்லாரும் அவரை கர்த்தருடைய அடியான் என்று எண்ணி தங்களுடைய வீடுகளில் அழைத்துப்போய் வியாதிப்பட்டவனுக்காக விண்ணப்பம்பண்ண இவரைக்கேட்டுக்கொண்டார்கள்.

இவர் ஞாயிற்றுக்கிழமைதோறும் தேவாலயத்துக்குப் போகிறதற்குமுன், தம்முடைய வீட்டிலே ஆராதனை நடத்துவார். அப்பொழுது இந்த இருண்ட தேசத்தில் சுவிசேஷம் பரம்பவும்,

சங். பிரடரிக் சுவார்ச்சையர் இந்த இருண்ட அந்தகார லோகத்தில் சுவிசேஷ இராச்சியத்தைப் பரப்ப எடுத்துக் கொண்டிருக்கிற பிரயாசத்தைக் கெடுக்கத்தக்கதாக, இப்பொழுது வந்திருக்கிற புது மிஷனெரிகள், சங். பிரடரிக் சுவார்ச்சையர் பட்ட பிரயாசத்தை அழித்துப்போட்டு, பராபரனுடைய இராச்சியத்தைப் புசிப்பும் குடிப்புமுள்ள இவ்வுலக ராச்சியத்தின் மாயையான தன்மைகளுக்கொப்பாக மாற்றிப் போதிக்கிறார்களே, கர்த்தாவே! நீர் இந்த புதுக்குருமாரின் இடறலான உபதேசத்தை அகற்றி ஒழித்துவிட்டு, அவர்கள் இடறலற்ற விதமாகப் போதித்து வரவும், தேசமெல்லாம் உம்மை அறியவும், நீருமது விலையறியாத இரத்தத்தைச் சிந்தி மீட்ட ஆத்துமங்களெல்லாம், உம்முடைய மந்தையிலே வந்துசேரவும், உமது சனமாகிய மனக்கடினப்பட்ட யூதர்களெல்லாரும் மனந்திரும்பி உம்மைப் பற்றிக்கொள்ளவும், உமது பரம இராச்சியம் தீவிரமாக இவ்வுலகமெங்கும் பரம்பச்செய்ய வேண்டுமென்றும்,

தம்மையும் தமக்கடுத்தவர்களையும் விசேஷமாய்த் தமக்கு நன்மை செய்கிற உபகாரிகளையும், எல்லாக் கிறிஸ்தவ சபை

களையும் தற்காத்து இரட்சிக்க வேண்டுமென்றும், ஏழைப் பாவிகளாகிய அடியார் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம் என்று உட்கருத்தாய் மன்றாடி செபம் பண்ணுவார்.

பின் தமக்கடுத்த எல்லாரோடும் உடுத்திக்கொண்டு தேவாலயத்துக்குப் போவார். கர்த்தருடைய சன்னதியிலே வெற்றுக் கையுடனே போகக்கூடாதென்று, ஏதாகிலும் கொண்டுபோய்க் காணிக்கை செலுத்திப் போடுவார்.

இவர் தம்மண்டை வருகிற ஏழைகளுக்கும் தமக்கு வருகிற வருமானத்துக்குத் தக்கதாய் வெள்ளிக் கிழமைகளிலும் மற்றப் பண்டிகை நாட்களிலும் தர்மஞ் செய்வார். மெத்த எளிமையாய் இக்கட்டுப்பட்டு வந்த கிறிஸ்தவனாயிருந்தால் அவன் எந்தச் சாதியானாயிருந்தாலும், தமக்கு முன்பாய் வைத்து, தமது போசனத்திலே அவனுக்குப் பகிர்ந்து கொடுத்து, அப்பால் தாம் சாப்பிடுவார்.

அவன் அம்மணமாயிருந்தானென்று கண்டால் தம்முடைய மேல் வஸ்திரத்தையாகிலும், அல்லது தாம் படுத்திருக்கிற மெத்தையின் உரையையாகிலும் கழற்றி அவனை உடுத்துவிப்பார்.

ஏனிப்படிச் செய்யவேணும், உமக்கே தாழ்ச்சியாயிருக்கிறதே என்று யாராவது கேட்டால், நான் கர்த்தருக்குக் கடனல்லவோ கொடுத்திருக்கிறேன், நான் வீணாய்ச் செலவிடவில்லை; அது எனக்கு இரட்டிப்பாய்த் திரும்பி வரும். மேலும் அந்த நாளிலே இந்தச் சிறியரில் ஒருவனுக்கு என்னத்தைச் செய்தீர்களோ அதை எனக்குத்தான் செய்தீர்களென்று கிறிஸ்து சொல்லுவாரல்லவோ? அல்லாமலும் ஒரு ஆத்துமத்தையுடைய நம்மைப்போலொத்த மனுஷருக்கு இரங்காமல் மனதைக் கடினப்படுத்திக் கனிகொடாத மரத்தைப்போலிருப்பது என்னைப் பாக்கியவானாக்கமாட்டாது என்பார்.

23. வேதநாயக சாஸ்திரியின் மன்றாட்டுகளும், மற்ற அவருடைய குறை நடைபடிகளும்

1848-ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பின் பண்டிகையிலே இவர் மெத்த வியாதிப்பட்டு மரணப்படுக்கையிலேயிருந்தார்.

அவருடைய வீட்டார் எல்லாரும் அடங்கி நடப்பார்கள். அவருக்குக் கோபம் வந்ததானால், எலியா தீர்க்கனைப்போல உக்கிரமுள்ளவராயிருப்பார். கர்த்தருடைய காரியத்தில் மிகுந்த பக்தி வைராக்கியமுள்ளவர்.

கிறிஸ்தவர்கள் தங்கள் வீடுகளில் கலியாண முதலிய சந்தோஷ நாட்களில், அக்கியானிகளுக்கொப்பாக, யாதொரு சாஸ்திர சடங்குகளைப் பார்க்கிறதாயிருந்தால், இவர் மனஸ் தாபப்பட்டு அவர்கள் மேலுள்ள கர்த்தருடைய ஆசீர்வாதம் விலகிப்போக இடமாயிருக்கிறதேயென்று சிந்தித்து, அவர்கள் எத்தனை மேன்மையுடையவர்களாயிருந்தாலும், உடனே அவர்களை முகமுகமாய்க் கண்டித்து, அது கர்த்தருக்கேற்காத அருவருப்பான காரியமென்பார்.

அதையவர்கள் சட்டைபண்ணாதிருந்தால் அவர்களை ஒரு பொருட்டாயெண்ணாமல், அந்த வீட்டார் இவருக்கு உபசரித்துக் கொடுத்த பணங்களையும் தாம்பூல முதலிய மரியாதைகளையும் ஏற்றுக்கொள்ளாமல் திரும்பக் கொடுத்துவிட்டு, தம்முடைய கூட்டத்துடனே எழுந்து வீட்டுக்கு வந்துவிடுவார். அவருடைய நாட்களையெல்லாம் கிறிஸ்தவ சபைகளின் பிரயோசனத்துக்கென்று செலவிட்டு, மிகுந்த கருத்தும் சுறுசுறுப்புமாய் ஓயாமல் எழுதிக்கொண்டும் யோசித்துக்கொண்டும் இருப்பார். அவருடைய பிரயாசத்துக்கு நிகரானவரைக் காண்பது அரிது.

ஆனால் அவர் கொஞ்சம் சிறுமைப்படுவது உண்டு; அப்போது அவர் "நாமறியாத அநேகம் வழிகளைக் கர்த்தர் திறப்பார்; அவரிடத்தில் அநேகம் பெட்டிகளுண்டு; அவருக்குச் சித்தமானால் ஒரு சின்னக் காக்காய்க் குஞ்சைக் கொண்டும் போஷிப்பார். நாம் கவலைப்படத் தேவையில்லை. நம்மை விசாரிக்கிறது அவர்பேரில் விழுந்த கடமை" என்பார். எந்தத் துன்பம், எந்த இக்கட்டு இடைஞ்சல் வந்தாலும் திடாரிக்கமாயிருப்பார்.

1808-ம் ஹு இவர் தரங்கம்பாடியில் பிரசங்கிக்கிறதை, சில புறச்சமயத்தார் கேட்டு, பொறாமைப் பட்டு தேசத்தையெல்லாம் தூண்டிவிட்டு, மகாநாடு கூடினபொழுதும், பின்பு

திருச்சிராப்பள்ளியில் ரோமானித்தாரிற் சிலர் கட்டுப்பாடு செய்து, அர்ச்சியசிஷ்ட தேவமாதாவே, ஒரு பதிதனைக் கொன்றுபோட்டால் எங்களுக்கு மோட்சம் கொடுப்பாயல்லவா என்று சபதங்கூறி, இவரைக் கொன்றுபோட எத்தனமாய் வந்திருந்தபோதும், இவர் தம் தைரியத்தைக் கைவிடாமல் கிறிஸ்துவைப் பிரசங்கித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது விரோதிகளின் இருதயத்தை ஆண்டவர் வேறுபடுத்தினதினாலே, அந்தக் கூட்டத்தின் பெரிய மனிதரெல்லாரும், இவர் மகா வித்துவானாயிருக்கவேண்டுமென்று சொல்லி, அமைதலாயிருந்து இவர் பிரசங்கச் சதுரைக் கேட்டார்கள்.

கர்த்தர் பேரிலே அவருக்கு இருக்கிற நம்பிக்கை சிநேகத்தையெல்லாம் ஒப்பிட்டுப் பார்த்தால் தாவீது ராசாவின் நடக்கைக்கொத்ததாயிருக்கும். எப்பொழுதும் கர்த்தர் பேரிலே புதுப்பாட்டை உண்டுபண்ணி, அவரைக் கீர்த்தனம் பண்ணிக்கொண்டிருப்பார்.

எல்லா லௌகிக ஞான நூல்களைவிட கர்த்தருடைய வேதத்தையே அதிக ஆவலோடே வாசிப்பார். அவற்றிலுள்ள கர்த்தருடைய ஆச்சரியமான செயல்களையும் நடத்துதல்களையும் வாசிக்கிறபோது சிலவேளை சிரித்து மகிழ்ந்து கொண்டிருப்பார்; அல்லது கண்ணீர் விட்டு தியானிப்பார். எந்த சந்தோஷத்திலாகிலும், எந்த துக்கத்திலாகிலும், அவ்விதமாய்ச் சந்தோஷப் படவுமாட்டார்; கண்ணீர் விடவுமாட்டார்.

தம்முடைய படுக்கையிலிருந்து விழிக்கிறபோதெல்லாம் செபம் பண்ணுவார். சிலவேளை பெப்ருசியஸ் ஐயருடைய பிரார்த்தனைகளை மனப்பாடமாய்ச் சொல்லிக்கொண்டிருந்து ஒவ்வொரு நாளிலும் கர்த்தரைத் துதிக்கும்படி, தம்முடைய வீட்டாரை அதிகாலையிலே எழுந்திருக்கக் கண்காணித்து வருவார். மெய்யாகவே அவருடைய இருதயம் பராபரனைச் சிநேகித்த மகாத்துமாக்களுடைய இருதயத்துக்கொப்பாயிருந்ததென்று அவரையறிந்து, அவருடனே வாசம்பண்ணிச் சஞ்சரித்துக்கொண்டிருந்தவர்கள் சாட்சியிடுவார்கள். ஆனால் அவர் மனிதனாயிருந்தபடியால், அவருடைய நடக்கைகளில்

அநேகம் பழுதுகளிருக்கும். அவருடைய செய்கைகளெல்லாம் அத்தனை ஒழுங்குள்ளதென்று சொல்லவும் இடமில்லை யென்று ஒருநாள் அவர் தம்முடைய வீட்டிலே நடந்த காலை ஆராதனையில் தம்மைக்குறித்துச் சொன்னதென்ன வென்றால்:

"நான் நல்ல மனிதனென்று நீங்களொருத்தரும் நினைக்கவேண்டாம். நான் கர்த்தருக்கேற்காத வெகு பாவங்களைச் செய்த பாவி. ஆனால் என் இரட்சகருடைய நீதியையும் அவருடைய உத்தரவாத புண்ணிய பலன்களையும் கெட்டியாய்ப் பற்றிப் பிடித்துக்கொண்டேன். ஆனதினாலேதான் இந்நாள் மட்டும் தற்காக்கப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் நிமித்தம்தான், பராபரன் என்மேல் கிருபையாயிருந்து, எனக்கு வந்த எல்லா மோசங்களையும், இடுக்கண்களையும் விலக்கி, என்னை மீட்டு, என் மன்றாட்டுகளை கிருபையாய்க்கேட்டு நான் எண்ணின எண்ணங்களை நன்மையாய் முடிக்கிறார்'' என்று சொன்னார்.

24. யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பாஷணை

(வெளிப்படுத்தல் 12-ம் அதிகாரத்தில் எழுதப்பட்ட சூரியனை அணிந்த ஸ்திரீ மாதாவல்ல, உவமை வார்த்தைகளென்பது)

இதைப்பற்றி கிறிஸ்தாப்தம் 1811ஆ யாழ்ப்பாணத்திலே சவரிமுத்து முதலியார் தர்க்கம் பண்ணின வரலாறு:

வேதநாயக சாஸ்திரி: நாம் நெடுகிலும் பார்க்கிறபடி, முழு வேதத்திலேயும், பராபரனுடைய சபை பெண்பாலாக, ஸ்திரீ என்றும், மணவாளி என்றும், தேவ உபகாரத்தை நன்றியறியாமற் போகிறவர்களை வேசிகளென்றும் கூறியிருக்கிறது. இதையறியாமல் ஸ்திரீ என்பதை மாதாவைக் குறித்தது என நினைப்பது மெத்தப் பைத்தியம்.

வெளி. 19:7, 21:9; எரே. 3:6, 10; எசேக். 16-ம் 23-ம் அதிகாரங்களையும் காண்க.

சவரிமுத்து முதலியார்: என்னையா! மாதாவையல்லாமல் வேறொரு ஸ்திரீ இத்தனை பெரிய சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் அணியக்கூடுமோ?

சாஸ்: இங்கே சொல்லப்படுகிற சூரியன், சந்திரன், நட்சத்திரங்களெல்லாம் உவமை வார்த்தைகளாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடியால், சரியான சூரியன் சந்திரன் நட்சத்திரங்களென்று நினைக்கப்படாது.

சுவாமி: ஏன் நினைக்கப்படாது, மாதாவின் சுரூபத்தை நீங்கள் பார்த்ததில்லையோ? இந்த அடையாளங்களெல்லாம் அந்தச் சுரூபத்திலே இருக்கிறது. அவள் சந்திரனை மிதித்தவளென்றும், சூரியனை உடுத்தவளென்றும், நட்சத்திரங்களைத் தரித்தவளென்றும், அதிலே பாடங்கள் மாதாவின் பேரிலே பாடப்பட்டிருக்கிறதே; அப்படியிராதோ?

சாஸ்: நீரென்ன ஒரு குருடனைப்போலப் பேசுகிறீர். வானத்திலே சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும் பார்க்கிறோமே. அந்தச் சந்திரன் மேலே அந்த அம்மாள் மிதித்துக்கொண்டு நின்றால் கண்ணுக்குத் தெரியுமே.

சுவாமி: எப்படித் தெரியும்? சந்திரமண்டலம் வெகு தூரமாச்சே. அந்த அம்மாள் நம்மைப் போலொத்த ஒரு மனித உயரமாயிருந்திருப்பாள். அவள் அதிலே நிற்கிறது இத்தனை தூரத்துக்குத் தெரியுமா?

சாஸ்: நல்லது நீர் சொல்லுகிறபடியே மனித உயரமாயிருந்தால், சந்திர மண்டலத்திலே நிற்கிற அவள் சூரியனை உடுத்தது எப்படி, எட்டும் போர்த்துக் கொள்ளக்கூடும்? அப்புறம் அதற்கு மேலேயிருக்கிற நட்சத்திரங்களிலே பன்னிரண்டு நட்சத்திரங்களைத் தலையிலே வைத்துக்கொள்ளக் கூடுகிறது எப்படி? இவைகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால் இது உவமை வார்த்தைகளேயல்லாமல், நிச்சயதம் அப்படியிருக்கக் கூடாது.

எப்படியெனில், 1. சூரியன் அக்கினி மயமான ஒரு உருண்டை. இந்த உலகத்தைப் பார்க்கிலும் பதின்மூன்று இலட்சத்துக்கதிகமான பருமனுள்ளது. இப்படிக் கொத்த பயங்கரமான அக்கினி உருண்டையை மாதா போர்த்திக் கொண்டு வாசம்பண்ண மனதாயிருப்பாளோ?

2. பன்னிரண்டு நட்சத்திரங்களை அவள் தலையிலே வைப்ப தென்றால், ஒவ்வொரு நட்சத்திரம் பூமண்டலத்திற் சொல்

லுகிறபடியே இந்தப் பூமியைப் பார்க்கிலும் மகாப் பெரியவை. அவற்றில் பன்னிரண்டை தன் தலையிலே சுமந்துகொண்டு, கஸ்திப் படுவாளோ?

3. சந்திர மண்டலமிருக்கிற இடம் வேறே, சூரிய மண்டலமிருக்கிற இடம் வேறே, நட்சத்திர மண்டலங்களிருக்கிற இடம் வேறே. ஒரு ஸ்திரி இந்த மூன்று மண்டலங்களையும் ஒருமிக்கத் தூக்கிச் சுமந்துகொண்டிருப்பது கூடிய காரியமா? இதைப் புவன சாஸ்திரிகள் கேட்டாற் சிரிப்பார்களல்லவோ?

4. அந்த அம்மாள் மகா பெரியவளாயிருந்து, சந்திரனை மிதித்துக்கொண்டு, சூரியனையும் உடுத்திக்கொண்டு, நட்சத்திரங்களையும் தரித்திருப்பாளானால்; அவள் சந்திரனையும் சூரியனையும் நட்சத்திரங்களையும்விடப் பருமனானவளும் திடகாத்திரமானவளுமாயிருக்கவேண்டும். ஆகாய மண்டலம் வெளிச்சமாயிருக்கிறதினாலே, அவள் சந்திர மண்டலத்திலே நின்று சூரிய மண்டலத்திலே தாவிக்கொண்டிருக்கிறதை பிரத்தியட்சமாய்க் காணலாமே. அப்படியிராததினாலே, இது உவமை வார்த்தையாகச் சொல்லப்பட்டதேயொழிய மற்றப்படியல்ல.

இப்படித்தான் புறச்சமயத்தார் இராகு கேது என்கிற பாம்புகள் வந்து தங்கள் படத்தாலே சூரியனையும் சந்திரனையும் விழுங்குகிறபோது, கிராணம் உண்டாகிறது என்பார்கள். ஒருவன் அவர்களைப் பார்த்து பாம்புக்கு தலையிருக்கிறபோது உடலும் வாலுமிருக்குமே, அதன் தலையாலே சூரியனை விழுங்குகிறபோது, அதன் உடலையும் வாலையும் தொங்கக்காணேமே அது அப்படியல்ல; கிரணம் உண்டாகிறவகை இப்படியென்று விவரித்துச் சொன்னாலும், பின்னையும் அந்தப் பேதை அக்கியானிகள் அதை நம்புகிறதில்லை. அப்படியே நீங்களும் இருக்கிறீர்கள்.

சவரி: ஐயா என்னை அப்படி நினையாதேயுங்கள். அந்த அம்மாள் இப்போது மோட்சத்தில் இருக்கிறபடியினாலே, அங்கே அவளுக்கு அப்படிக்கொத்த மகிமையும், வல்லமையுமிருக்கிறது. ஆதலால் அங்கேயிருந்து அப்படித் தூக்கிக் கொண்டிருக்கிறாள்.

சாஸ்: நல்லது, நீர் சொல்லுகிறபடியே மோட்சத்திலே அந்த அம்மாளிருந்து, அலைகளைத் தூக்கிக்கொண்டிருப்பார்களானால், சூரியனையும் சந்திரனையும் நித்தம் உலகத்திலே காண்கிறோமே. சூரியனையும் சந்திரனையும் அவள் எடுத்துக் கொண்டு மோட்சத்துக்குப் போயிருக்க, அவள் உத்தரவை மிஞ்சி அவை பூமியில் வருகிறதோ?

சவரி: ஐயா, தாங்கள் சொல்லுகிற அர்த்தத்தை விட்டு விடுங்கள். சூரியனை அணிந்த ஒரு ஸ்திரீ இருந்தாள் என்றும், அவள் பாதங்களின்கீழே சந்திரனும், அவள் சிரசின் மீதில் பன்னிரண்டு நட்சத்திரங்களின் கிரீடமும் இருந்ததென்று சொல்லப்படுகிறதே, அவற்றின் அர்த்தமென்ன?

சாஸ்: “ஸ்திரீ” என்பது சபை. இதைத் துவக்கத்திலே வாக்கியங்களைக்கொண்டு ஒப்புவித்தேன். “சூரியன்” என்பது இயேசு. அவரே நீதியின் சூரியன். திருச்சபை என்கிற பெண் நீதியின் சூரியனாகிய இயேசுவின் நீதியினாலே உடுத்தப்பட்டிருக்கிறாள். இயேசுவினுடைய நீதியின் வஸ்திரங்களாகிய வெண்பட்டாடைகளே அவளுடைய பரிசுத்தத்துக்கு அடையாளம். வெளி. (19:8) 3:18 உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்தில் வாங்கிக்கொள் என்கிறார். “சந்திரன்” என்பது உலக வழக்க பழக்கங்கள்; யூத மார்க்கத்தாருக்கும், பிற மதத்தினருக்கும் உரிய சடங்குகள். ஏனென்றால் எல்லா மண்டலங்களைப் பார்க்கிலும் சந்திரனே தாழ இருக்கிறது; இந்த சந்திரனுக்குக் கீழாயிருக்கிற உலக காரியங்களையெல்லாம் அவள் வெறுத்து, அவற்றைத் தன் காலின் கீழே மிதிக்கிறாள். “பன்னிரண்டு நட்சத்திரங்க”ளுடைய கிரீடமாவது: பன்னிரண்டு அப்போஸ்தலருடைய உபதேசத்தினாலேயும் மாதிரிகளினாலேயும் வெளிச்சமாக்கப்பட்டவள்.

சவரி: ஆனாலிந்த வாக்கியத்தின் கடைசியிலே, அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள் என்று சொல்லியிருக்கிறதே; இது உவமை வார்த்தைதானோ? இது மாதாவைப்பற்றிச் சொல்லியிருப்பதாகவே காண்கிறேன்.

சாஸ்: அது உவமை வார்த்தையொழிய மற்றங்படியல்ல. ஏனென்றால் அவள் கர்ப்பவதியாயிருந்து, வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினளென்று சொல்லியிருக்கிறது; நீங்களோ, அவள் கர்ப்பவேதனைப் படவில்லை; அற்புதமாகப் பிள்ளை பெற்றாள் என்கிறீர்கள்.

சவரி: பரிசுத்த தேவமாதா, முப்போதும் கன்னியாயிருக்கிறாள்; அவள் இயேசுநாதரைப் பெறுகிறதற்கு முன்னே எப்படியிருந்தாளோ அப்படியே, அப்போதும், இப்போதும், எப்போதும் கன்னியாயிருக்கிறாள்.

சாஸ்: அர்ச். மரியம்மாள் பரிசுத்த கன்னியாயிருந்தாள்; அவளிடத்தில் இரட்சகர் வந்து மனிதனாகப் பிறந்தார்.

சவரி: பிறக்க இல்லை; அற்புதமாகப் பிறந்தார்.

சாஸ்: இல்லை. நம்மைப்போலவே, நாமெப்படி ஸ்திரியின் வயிற்றிலிருந்து பிறந்தோமோ அப்படியே பிறந்தார்.

சவரி: அல்ல அல்ல, நாம் புருஷரால் சென்மித்துப் பிறக்கிறபடியினாலே அப்படிப் பிறக்கிறோம். அவர் புருஷரால் சென்மியாதபடியினாலே, நம்மைப்போல் பிறக்கவேண்டிய அவசரமில்லை. அற்புதமாகவே மாயையாய்ப் பிறந்தார்.

சாஸ்: யேசுநாதர் மாயையாய்ப் பிறந்தாரானால், அது அவருடைய இரட்சிப்பின் கிரியைக்குப் பெலனில்லையே. அவள் சரியாய்க் கர்ப்பவதியாயிருந்து, எலிசபெத்து அம்மாளிடமும் வந்திருந்தாளே! யோசேப்பும் அதைக் கண்டு அவளைத் தள்ளிவிடப் பார்த்தானே. லூக். 2:6,7-ல் அவள் பெறுகிறதற்கு நாட்கள் நிறைவேறி, தன் முதற்பேறான குமாரனைப் பெற்றாளென்று சொல்லியிருக்கிறதே.

சவரி: இது தூஷணம்; அவள் பெறவில்லை, அற்புதமாகப் பிறந்தார்.

சாஸ்: அவள் பெறுகிறதற்கு நாட்கள் நிறைவேறித் தன் முதற்பேறான குமாரனைப் பெற்றாளென்று வேதத்திலே சொல்லியிருக்க, இதை நீரெப்படித் தூஷணமென்று சொல்லலாம்?

சவரி: அடா சொன்னான். அதற்கென்ன தேவமாதா கர்ப்பவதியாயிருந்தது உள்ளதுதான். ஆர் அதை இல்லையென்

கிறது. அவள் நம்மைப்போல அம்பாயப்பட்டுப் பெறவில்லை; ஏனென்றால் அதை அங்கேதானே விட்டுவிடாமல், அந்தப் பேச்சை ஏன் வளர்க்கிறீர்.

சால்: நல்லது, அவள் கர்ப்பமாயிருந்ததைத்தான் ஒத்துக் கொள்ளுகிறீரே, பின்னையெப்படித்தான் அவரைப் பெற்றாள்?

சவரி: முன் அவளுக்குக் கர்ப்பமாகிறபோது காபிரியேல் சம்மனசு சொன்னவுடனே, ஸ்பிரீத்சாந்துவானவர் (பரிசுத்த ஆவியானவர்) எப்படி அவள் வயிற்றுக்குள் அற்புதமாய்ப் போனாரோ, அப்படியே அற்புதமாக வெளிப்பட்டார்.

சால்: விசுவாசப்பிரமாணத்திலே கன்னிமரியாளிடத்திலே நின்று பிறந்தாரென்று விசுவாசிக்கிறோமே.

சவரி: மெய்தான். அவளிடத்திலே நின்று பிறந்தாரென்று விசுவாசிக்கிறோம். ஆனால் மனிதரைப்போலப் பிறந்தாரென்று நாங்கள் விசுவாசிக்கவில்லை.

சால்: மனிதரைப்போல பிறக்காதேபோனால் பின்னெப்படித் தான் பிறந்தார்?

சவரி: ஒரு கண்ணாடியிலே சூரியனுடைய வெளிச்சம் எப்படி பிரகாசிக்கிறது? மறுபடி அந்தக் கண்ணாடியை எடுத்துப் போட்டபிறகு, கண்ணாடிக்குள் காணப்பட்ட சூரியன் வெளியே எப்படிப் போனது? அப்போது கண்ணாடி உடைந்ததோ? இல்லையே! அப்படிப்போல, அவள் வயிற்றுக்குள்ளே கர்ப்பமாக உற்பவித்தவர், மறுபடி அவளை விட்டு அற்புதமாக வெளிப்பட்டுப்போனார்.

சால்: நீங்கள் அந்த அம்மாளுடைய சங்கைக்காக வேண்டி அவருடைய பிறப்பின் மகிமையை அற்பமாக்குகிறீர்களே. அவர் பாவந்தவிர சகலத்திலும் நம்மைப்போலப் பிறந்து வளர்ந்து, பாடுபட்டாரே. மேலும் அந்த அம்மாளுக்குத் தானும் இது சங்கையல்லவே. அவள் வருத்தப்பட்டுப்பெற்றாளென்று சொல்லாமல், மாயையாய்ப் பெற்றாளென்று சொல்லுகிறதினாலே அவளுக்குச் சங்கை உண்டாகுமோ?

சவரி: இப்படிப் பிறக்கிறதே அவருக்கும் அவளுக்கும் சங்கை (மதிப்பு) மற்றப்படி நம்மைப்போலப் பிறப்பது இரு பக்கத்துக்கும் சங்கையல்ல.

சாஸ்: இதை எப்படிச் சொல்லலாம்? இவர் இரட்சிப்பின் கிரியையை நிறைவேற்ற வந்தபடியினாலே, நம்மைப்போலவே பிறக்கவேண்டும்; இல்லாவிட்டால் அவர் மெய்யான மனிதனாயிருக்கமுடியாதே.

சவரி: ஓய்! அதைப்பற்றிப் பேசாதேயும், நீங்கள் பரிசுத்த கன்னியாஸ்திரியாகிய அர்ச். தேவமாதாவைத் தூஷணிக்கிறீர்கள். அவள் பரிச்சேதங் (கொஞ்சங்கூட) கர்ப்பவேதனைப் படவில்லை; அவள் அற்புதமாகவே அவரைப் பெற்றாள்.

சாஸ்: அவள் கர்ப்பவேதனைப்படாமல் அற்புதமாய்ப் பெற்றாளென்பதை, வேதவாக்கியங்களைக்கொண்டு ரூபியுமேன்.

சவரி: வேதவாக்கிய மென்னகாணும். கண்ணாடிக்குள்ளே சூரியன் போய் வெளிப்படுகிற விதத்தைக் கைக்கு மெய்யாய்க் காட்டியிருக்க, இதைப் பார்க்கிலும் அதிகமாக ரூபகாரப் படுத்துகிற வேதவாக்கியமுண்டோ?

சாஸ்: நீர் சொல்லுகிறபடி, இயேசுநாதர் நம்மைப்போலப் பிறக்காமல், கண்ணாடிக்குள்ளே போய் வெளிப்பட்ட சூரியனைப்போல, அற்புதமாக வெளிப்பட்டிருப்பாரானால் எந்த நேரத்திலாவது நினைத்தபோது, பெத்தலேமில் அல்லது வேறொரு இடத்திலிருக்கிறபோது பிறக்கலாமே. ஒரு மாட்டுக் கொட்டிலைத் தேடி ஒரு மறைவிடத்திலே போய்ப் பிறக்க வேண்டியதென்ன? இதையெல்லாம் கவனிக்கும்போது அந்தம்மாள் மற்ற ஸ்திரிகளைப்போலவே அம்பாயப்பட்டுப் பிள்ளை பெற்றாளென்று சொல்லவேண்டுமேயொழிய மற்றப் படியல்ல.

சவரி: அர்ச். தேவமாதா, அம்பாயப்பட்டு (வேதனைப்பட்டு) பிள்ளை பெற்றாளானால், அவள் முப்போதும் கன்னியாயிருக்கக் கூடாதே; அவள் அற்புதமாக இயேசுநாதரைப் பெற்றபடியினாலே, அன்றைக்கும் இன்றைக்கும் என்றைக்கும் கன்னியாயிருக்கிறாள். அவள் கன்னியாஸ்திரியின் மேன்மையையுடையவளாயிருந்தபடியினாலே மூன்றாம் பிறையிலே மிதித்துக்கொண்டு, சூரியனை உடுத்தி, நட்சத்திரங்களையுடைய கிரீடத்தை அணிந்துகொண்டிருக்கிறாள்.

ஈசா நபி பிறப்பைப்பற்றி என்ன சொல்லுகிறீர்?

சாஸ்: மரியம் பீபியிடத்தில் காபிரியேல் என்கிற மல்க்கு வந்து சொன்ன வாழ்த்துதல் துவக்கி, தொனியாவில் அவர் பிறந்த விதமும், முகாந்திரமும், தூதர்கள் பாடின முத்தோத்திரமும், அதின் விஸ்தரிப்பும் சொன்னேன்.

காஷியார்: நீங்கள் அவரை என்னமா யெண்ணுகிறீர்கள்?

சாஸ்: அவர் பராபரனுடைய வார்த்தை; அந்த வார்த்தையினால் எல்லாம் உண்டாயிற்று; அந்த வார்த்தையே பராபரன்; அது வெளிச்சமாக இருளிலே உதித்தது; இருள் அதை உணர்ந்து கொள்ளவில்லை; குமாரனை விசுவாசியாதவன் ஜீவனைக் காணமாட்டான் என்பது போன்ற சில நியாயங்களைக் கூறினேன்.

காஷி: அவரை நீங்கள் அல்லாவைப்போலத் தொழுகிறீர்களோ? அல்லது அவரை ஒரு நபியாகவோ, அதற்கும் மேலாகவோ எப்படிச் சொல்லுகிறீர்கள்?

சாஸ்: பிதா அவருக்குப் பெரியவர்தான் என்றாலும் இவர் அவருக்குத் தாழ்ந்தவரல்ல; அவர் செய்கிறதை இவரும் செய்யலாம்; அவருக்கு ஆராதனை செய்கிறபடியே இவருக்கும் ஆராதனை செய்கிறோம்.

காஷி: அதெப்படிச் செய்யலாம்?

சாஸ்: 1. நீங்கள் சொல்லுகிறபடி அவர் ரூகல்லா. அதாவது பராபரனுடைய உயிர். நமது உயிர் நமது குமாரனுக்கு இருக்கிறதுபோல; பராபரனுடைய உயிர் பராபரனுடைய குமாரனுக்கு மாத்திரமிருக்கும்.

2. நீங்கள் சொல்லுகிறபடி அவர் பாவமில்லாமல், புருஷனுடைய அனுபோகமில்லாமல் பிறந்தவர். அப்படி எந்த நபிகளும் பிறந்ததில்லை; மூஷா நபி முதலான மற்ற நபிகளைப்போல அவருக்குப் பெண்சாதி பிள்ளைகளில்லை; பராபரனெப்படியோ அப்படி அவரும் இருந்தார்.

3. நீங்கள் சொல்லுகிறபடி அவர் மூன்றும் வானத்திலேயிருக்கிறார். சகல நபிகளும் செத்துப்போனார்கள். அப்புறம் எழுந்திருந்ததில்லை. இவர் மாத்திரம் எழுந்து பரமண்டலத்துக்குப் போயிருக்கிறார்.

சாஸ்: அல்லா தம்முடைய மனதின்படி எல்லாவற்றையும் செய்கிறார். அவர் உலக முதலிய பூத பௌதிகங்களையெல்லாம் உண்டுபண்ணினபோது, யாதொரு உபகரணமுமில்லாமல் உண்டுபண்ணினதுபோல, தாம் மனித அவதாரமான மரியம் பீபி இடத்திலே, தாம் குறித்த தீர்மானித்தின்படி, மனிதத்தன்மையை எடுத்துக்கொள்ள, அவள் உதிரத்திலே தம்முடைய ஆவியின் பலத்தினாலே, ஒரு குமாரனை ஜெநிப்பிக்கக்கூடாதோ? முந்தின மனிதனான பழைய ஆதாம், தகப்பனின்றி மண்ணினாலே உண்டாக்கப்பட்டான். அது முதல் ஒரு ஸ்திரியாகிலும் புருஷன் இல்லாமல் பிள்ளை பெற்றதில்லை. ஈசாநபி மாத்திரம் புருஷனின்றி பிறந்திருக்கிறபடியினாலே, இது விசேஷமாகக் கவனிக்கப்படத்தக்க காரியம்.

காஷி: நீங்கள் எத்தனை குரான் உண்டென்றும், கடைசி நபியை ஆரென்றும் சொல்லுகிறீர்கள்?

சாஸ்: நீங்கள் சொல்லுகிறபடி மூஷாவால் தௌரத்தும், தாவூதால் ஸபூரும், ஈசாவால் இஞ்சிலும், முஹமதுவால் புர்கானுமாகிய நாலு கிதாப்புக்கள் என்று சொல்லாமல், ஈசா உலகத்தில் வந்த கணக்கைக் காண்பித்து, ஈசாவுக்கு முந்தினது பழைய ஏற்பாடு என்றும், ஈசாவுக்குப் பிந்தினது புதிய ஏற்பாடு என்றும் இரண்டு கிதாப்புகளாக்கிச் சொல்லுகிறோம். தௌரத்தும் ஸபூரும் இரண்டு கிதாப்புகளாயிராமல், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல், தானியேல் முதலான நபிமார்கள் எழுதின [1] கிதாப்புகளோடே மூஷா எழுதின [2] தௌரத்தும், தாவீது எழுதின [3] ஸபூரும் ஒன்றாய்ச் சேர்ந்து பழைய ஏற்பாடு என்று அழைக்கப்படுகிறது. கடைசி நபி [4] ஈசா; ஈசாவுக்குப் பிறகு நபிமார் எழும்பினதில்லை.

காஷி: ஈசாவுக்கு எங்கேயிருந்து [5] குரான் இறங்கினது?

சாஸ்: மூஷா முதலானவர்கள் அல்லாவின் ஊழியக்காரராய் மாத்திரம் இருந்தபடியினாலே, பரமண்டலத்திலிருந்து அல்லா சொல்ல, அவர்கள் எழுதினார்கள். ஈசா குமாரனானபடியி

---

1. கிதாப்பு—புஸ்தகம் 2. தௌரத்—மோசேயின் ஆகமம் 3. ஸபூர்—சங்கீதம் 4. ஈசா—இயேசு 5. குரான்—வேதம்

ரோமர் ஆண்டு கொண்டார்கள். ஆதலால் எப்பிராயீம் கோத்திரத்தையும் தாவீதின் செங்கோலையும் விட்டு கிறிஸ்து வரக்கூடாது.

காஷி: அவர் கிறிஸ்துவென்று [1] எகுதிகள் ஒப்புக் கொண் டார்களா?

சாஸ்: மிச்சமானவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. அந்த எகுதிகள் எப்போதும் முரட்டுக் கழுத்துள்ள சனங்கள். அவர்கள் மூஷாவோடும் எப்போதும் போராடிக் கீழ்ப்படியாமல் நடந்து கொண்டார்கள். இதினிமித்தம் [2] அல்லா அவர்களை அநேகந்தரம் தண்டித்தார். ஒருதரம் அவர்களில் அநேகரை, பூமி பிளந்து விழுங்கிப் போட்டது. அப்படி ஈசா நபியோடும் எதிர்த்து நின்று அவரைப் பாடு படுத்தினார்கள்; அவரை விசுவாசியாமற் போனார்கள். இதினிமித்தம் அல்லா, அவர்களை உலகமெங்கும் சிதறப்பண்ணி அவர்களுடைய பட்டணங்களைக் காடாக்கிப் போட்டார், என்றேன். அந்நேரம் ஆறுமணியாயிற்று.

காஷி: ஈசா நபி உங்களை ஒருநாளில் எத்தனை தரம் தொழச் சொல்லிக் கட்டளை கொடுத்தார்?

சாஸ்: தாவீதுநபி, உம்முடைய வசனத்தின்மேல் பிரியத்தினாலே ஒரு நாளிலே ஏழுவிசை உம்மைத் தொழுகிறேன் என்றார். ஈசா நபியோ இடைவிடாமல் செபம் பண்ணுங்கள் என்றார்.

காஷி: எந்த முகமாய்ச் செபம் பண்ணுகிறீர்கள்?

சாஸ்: எருசலேமிலே தேவாலயமிருந்த படியினாலே, எகுதிகள் அந்த முகமாய்ச் செபம் பண்ணினார்கள். ஈசா அதைத் தொட்டு எங்களுக்கொரு கட்டளையுங் கொடுத்ததில்லை. பராபரன் எங்குமிருக்கிறபடியினாலே, நாங்கள் அவரை எந்த முகத்திலும் தோத்திரம் பண்ணித் தொழுகிறோம்.

காஷி: நீங்கள் ஏன் தாடி வைக்கிறதில்லை?

சாஸ்: உங்களைப் போல எகுதிகள் தாடி வைத்தார்கள். ஈசா நபி அந்தக் கோத்திரத்திலே வந்தபடியினாலே அவர்களைப் போல தாடி வைத்திருந்தார். இங்கிலிஷ்காரர் முதலானவர்களும் இருநூறு வருஷங்களுக்குமுன் தாடி வைத்திருந்தார்

கள். இப்பொழுது தொந்தரவாயிருக்கிறதென்று, எல்லாத்தையும் விட்டுவிட்டார்கள். அப்படியே நாங்களும், என்னை தோசாத்திரப்படி விட்டுவிட்டோம் என்கிறான்.

அப்புறம் ஒரு நாள், காஜியாரோடே பேசிக்கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவி என்னைச் சுத்தம் பண்ணுகிறார் என்கிறான்.

காஜியார்: பரிசுத்தாவியென்னும் அவர் யார்?

சாது: அவர் திரித்துவத்தில் ஒரு ஆள்.

காஜி: மூன்றேன் பிதாவும் குமாரனும் என்றீர், மூன்றாவது ஒரு ஆள் உண்டாச்சோ?

சாது: மூன்றுள் என்று சொல்லக்கூடாது; மூன்றுளாயிருந்தாலும், ஒன்றாயிருக்கிறார்கள்.

காஜி: எப்படி மூன்றுள்; மூன்றுபேர் எப்படி ஒன்றாயிருக்கக்கூடும்?

சாது: சூரியனிலே ஒரு வல்லமையும், ஒரு வெளிச்சமும், ஒரு உஷ்ணமும் இருக்கிறது. இப்படி மூன்று கிரியைகளிருப்பதால் அது மூன்று சூரியனோ ஒரு சூரியனோ? அப்படியும் போல சிருஷ்டிக்கிறதும், இரட்சிக்கிறதும், பரிசுத்தம் பண்ணுகிறதுமான முத்தொழிலின்படியே மூவராயிருக்கிறார். பிதா சிருஷ்டிக்கிறார் - குமாரன் இரட்சிக்கிறார் - பரிசுத்தாவி சுத்தம் பண்ணுகிறார். ஒரு வியாதிக்காரன் பாலை அனுபவிக்கக் கூடாது. ஒரு பன்றி இராச ஆசனத்தை அனுபவிக்கக் கூடாது. அதுபோல பாவவியாதியுள்ள மனிதன் அல்லது அசுத்த வாழ்க்கையுள்ள பாவி, பரலோகத்தின் நன்மையை அனுபவிக்க முடியாது. ஆகையால் பரிசுத்தாவியானவர் நம்மைச் சுத்தம்பண்ணி, நம் கெட்ட சுபாவமுள்ள மனதை நீக்கிப் புது மனதைக் கொடுத்தாலொழிய, நாம் பரலோக ராச்சியத்துக்குப் போகமுடியாது என்கிறான்.

அப்போது பக்கத்திலிருந்த ஒருவர், நீங்களெல்லா அக்கியானிகளைப்போல திரித்துவத்தின் அல்லது மூன்று தேவர்கள் உண்டு என்கிறீர்களா? என்றார். அப்பொழுது காஜியாரும்: சகலத்தையும் படைத்தவர் ஒரு தெய்வம் உண்

டென்று வழக்கத்திலே எல்லாரும் சொல்லுகிறார்களோ, சகலத்தையும் படைத்தவர்கள் மூவர்கள் உண்டென்று சொல்லுகிறார்களோ என்றார்.

அதற்கு நான் சிருஷ்டிப்பிலே ஒருத்தர் உண்டென்று மாத்திரம் அறிகிறோமேயொழிய மற்றப்படியல்ல; வேதத்தைப் பார்க்கிறபோது, இன்னும் சற்று அதிகமாய், இரட்சிக்கிறவர் குமாரன் என்றும், எங்களைப் பரிசுத்தம் பண்ணுகிறவர் பிதாவிடத்திலும் சுதனிடத்திலுமிருந்து புறப்படுகிற பரிசுத்தாவி என்றும், பல வாக்கியங்களினாலும் அறிகிறோம் என்றேன்.

காஷி: அவர் பிதாவிடத்திலும் சுதனிடத்திலுமிருந்து எப்படிப் புறப்படுகிறார், ஒரே மட்டாய்ப் புறப்படுகிறாரோ, வெவ்வேறாய்ப் புறப்படுகிறாரோ, வெவ்வேறாய்ப் புறப்பட்டு ஒன்றாய்க் கூடிக்கொள்ளுகிறாரோ?

சாஸ்: அது பெரிய பரம இரகசியம். மனிதப் புத்தி அதைக் கிரகித்து அறியமுடியாது. அதை மறுமையில் தெளிவாய் அறிந்துகொள்வோம். ஏனென்றால் நட்சத்திரங்கள் மெத்தப் பொடியாயிருக்கின்றன. அவற்றைக் கண்ணாடி மூலம் பார்க்கிறபோது, எவ்வளவு தூரத்திலிருக்கிறதென்றும், இத்தனை பெரிது, இத்தனை லோகங் கொண்டதென்றும் சாஸ்திரிகள் மட்டுக் கட்டுகிறார்கள். இப்படி சந்திர சூரிய நட்சத்திரங்களை, அவைகளின் தூரத்தையும், பருமனையும் சொல்லக் கூடுமேயொழிய, அவைகளில் எந்தெந்த வஸ்துக்களிருக்கின்றன, அங்கே நடக்கிற சரித்திரம் என்ன என்றும் சொல்ல முடியாது. அதுபோல இம்மையிலே திரித்துவத்தைப் பற்றி நமது கொஞ்சப் புத்தியினாலே கிரகித்து அறிய முடியாது. மறுமையிலே நாம் உட்படும்போது தெளிவாயறியலாமென்று இன்னும் சில திருஷ்டாந்தங்களையும் சொன்னேன்.

அதற்குக் காஷியார், மறுமையிலே அறிகிறதைத்தொட்டு இப்போது காரியமென்ன? இன்னொரு விசை பேசிக்கொள்ளுவோம் என்று எழுந்திருந்தார்.

26. தரங்கம்பாடிச் சபையார் நாமத்தினால் சங். தாவீது உபதேசியாரவர்கள் குமாரராகிய பெரிய தோல்க்கு மகா ள ள ஸ்ரீ தேவசகாயம் பிள்ளை எழுதின காகிதம்.

தஞ்ச நகரத்திலிருக்கும், மகா கனம் பொருந்திய கவி சேட கவிராய வேதநாயக சாஸ்திரியாரவர்களுக்குத் தங்க ளுண்மையுள்ள சீஷனும், ஊழியக்காரனுமாகிய தேவசகாயம் பாராபரனுக்கு ஸ்தோத்திரம் சொல்லி, எழுதி அறிவிக்கிற தாவது:

இவ்வூரில் நடந்த ஒரு கலியாணத்தின் பொழுது, கூடி வந்திருந்த மிச்சமான கிறிஸ்தவர்களும் அந்திய மார்க்கத் தாரும் கேட்கும்படி வெகுவான தங்களுடைய ஞானப்பாடல் களைப் பாடும்படி செய்வித்தேன். அதைக்கேட்ட வெகுபேர் ஞானப்பொருளுக்காகச் சந்தோஷப்பட்டுத் தங்களுடைய அரு மையான ஆயுசைக் கர்த்தர் பெருகச்செய்ய வேணுமென்று, உண்மையாய்க் கோரிக்கொண்டிருந்த சமயத்திலே "திரி யேகா திரியேகா திரிலோக இரட்சகா" என்ற பாட்டும் பாடப்பட்டது.

இதைக் கேட்ட சிலர், அவர் மூன்றுலகத்துக்கும் இரட் சகரோ என்று கேள்வி கேட்டபோது, நானும் என்னோடி ருந்த. சில உபதேசியார்களும், எங்களுக்கு விளங்கினதை அவர்களுக்கு விவரித்தோம். இந்தப் பாடலைப்பாடின தங்க ளிடத்திலும் இதின் வியாக்கியானத்தைப்பற்றி இன்னம் வலு வாயும், முகாந்திரத்துடனேயும் வியாக்கியானத்தை, நாங்க ளறிந்து சொல்ல இடமாகுமென்றெண்ணித் தங்களுக்கு இதைப்பற்றி எழுதிக்கொள்ளலானேன்.

இந்தப் பிரகாரமாக வேறொரு சமயத்தில் கூடிவந்த ஒரு கூட்டத்தில், பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத் தில் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் தண்டிக்கிறவரா இருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனை களைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட் டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன் என தமதாண்டவ

திருவுளம்பற்றியிருக்கிருரே. மூன்ரும் நான்காம் தலைமுறை மட்டும் தண்டிக்கிறவர், ஒரு நல்ல பிள்ளையை, அதின் ஆகாத தகப்பனின் நிமித்தம் அதைத் தண்டிப்பது நியாயமோ? மேலும் பராபரனிடத்தில் அன்புகூர்ந்து, அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாத, ஒரு ஆகாத பிள்ளைக்கு, அதின் நல்ல தகப்பன் நிமித்தம், அதாவது அவரைச் சிநேகித்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிற தகப்பனின் நிமித்தமாய், ஆயிரம் தலைமுறைமட்டும் நன்மை செய்வது நியாயமோ? என்ற இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டது.

இதற்கு, குருட்டுவழி இரண்டாம் புஸ்தகம் 14-ம் பக்கத்தில் தாங்கள் கூறியிருப்பதையும், மற்றும் எங்களுக்குத் தெரிந்த நியாயங்களையும் சொன்னேம். என்ருலும் தங்களுடைய மேலான கருத்தின்படி, இவைகளுக்கெல்லாம் தகுந்த விவரங்களும் ரூபகாரங்களும் ஆதாரங்களும் வெளியாகுமென்றெண்ணி, அதைக்கொண்டு இன்னுந் தைரியமாய் உத்தரவு சொல்ல எங்களுக்கு இடமாகும் என்றே இதையும் தங்களுக்கு எழுதினேன்.

ஆனபடியினுலே தங்கள் ஐசுவரியமான அறிவின் சமுத்திரத்திலிருந்து எனக்குக் கொஞ்சம் மொண்டு எடுத்துக் கொடுக்கத் தாழ்மையாகக் கேட்டுக்கொள்ளுகிற,

தங்கள் ஊழியன்,
தேவசகாயம்.

தரங்கன்பாடி,
1842ஸ்ரீ மாசிமீ 10உ.

பராபரனுக்கு ஸ்தோத்திரம்

27. தரங்கன்பாடியில் தோல்க்குத் தேவசகாயம்பிள்ளை வினவிய கேள்விகளுக்கு மறுமொழி.

ம-ா-ா-ஸ்ரீ, தேவசகாயம்பிள்ளை அவர்களுக்கு வேதநாயக சாஸ்திரி வந்தனம்.

எண்ணிக்கையுள்ள ஐயாவே!

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தங்கள் சுகத்தைப் பிரார்த்திக்கிறேன். தாங்கள் 1842 ஸு மாசி மீ 10 வ. எழுதியனுப்புவித்த காகிதத்துக்கு, மூன்றும் மாதமா கிய வைகாசி மீ 4 வ. ஆகிய இன்றைத்தினம் ஆயத்தப்பட்டேன். அதின் முகாந்திரம் இதின் பின்னான காகிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

தாங்களெனக்கெழுதிய காகிதத்தில் வினவிய சில கேள்விகளுக்குச் செம்மையான மறுமொழி கொடுக்கும்படிக்குப் பராபரன் எனக்குத் தயவு செய்வாராக.

1. கேள்வி: "திரியேகா திரியேகா திரிலோக இரட்சகா" என்று நான் பாடிய பாடலின்படி அவர் மூன்றுலகத்துக்கும் இரட்சகரோ என்று தங்கள் சங்கத்தார் வினவிய கேள்விக்கு மறுமொழியாவது:

பூமியந்தர சொர்க்கம், அல்லது வானம் பூமி பாதலம் இந்த மூன்று லோகத்தையும் திரியேக பராபரனுண்டாக்கினது மெய்யாயிருந்தால், அதைக் காத்து இரட்சிக்கிற கடமையும் அவருக்கே உரியது.

உலகத்தைச் சிருஷ்டித்தவர் உலகத்தைத் தாங்காவிடில் அது நிற்குமோ? அவ்வாறே வானத்தைச் சிருஷ்டித்தவர் அதைத் தாங்காவிடில் அதுவும் நிற்காது. இதைப்பற்றித் தான் 1-ம் கவியிலே சருவ சீவாத்துமா சாற்று பரப்பிரமா வென்று பாடிற்று. சருவ சீவாத்துமா = சுரர்களும், நரர்களும் மற்றும் சீவ செந்துக்களும். தாங்குதல் = ஆளுதல், பராமரித்தல், ஆதரித்தல், நடத்தல், காத்தல், இரட்சித்தல் இந்த எழும் ஒன்றே. சருவ லோகத்தையும் தாங்குகிறார்.

ஆளுகிறார், பராமரிக்கிறார், ஆதரிக்கிறார், நடத்துகிறார், காக்கிறார், இரட்சிக்கிறார் என்று நாங்கள் வழக்கமாய் சொல்லுகிறோம். ஏனென்றால் அவரெல்லாவற்றையும் உயிர்ப்பிக்கிற பராபரனுயிருக்கிறார். 1தீமோ. 6:14.

கேள்வி. சிருஷ்டி, திதி, சங்காரமென்கிற கடவுளின் முத்தொழிலைப்பற்றி நாங்கள் கேட்கவில்லை. அது யாவருக்கும் தெரியுமே. அவர் எல்லாவற்றையும் பராமரித்துக் காப்பாற்றுகிற இந்த இரட்சிப்பைப்பற்றி நாங்கள் கேட்கவில்லை. கிறிஸ்து பாடுபட்டு உலகத்தை இரட்சித்தபடி பரமண்டலத்தையும் இரட்சித்தாரோ? அவர் உலகத்துக்கு இரட்சகராயிருக்கிறது போல, பரமண்டலத்துக்கும் இரட்சகராயிருக்கிறாரோ?

உத்தரவு. இந்தப் பாடலிலே தேவசுபாவ மகிமையைப்பற்றிப் பாடினதொழிய, கிறிஸ்துவின் பாடுகளினாலுண்டான இரட்சிப்பைக் குறித்துக் கூறியதல்ல. அப்படியல்லவென்றாலும், கிறிஸ்துவினுடைய சகாயம் அல்லது இரட்சிப்பு தேவர்களுக்கும் வேண்டியதாய்க் காணப்படுகிறது.

பிலி. 2:10,11லே "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்". என்று சொல்லப்பட்டபடி தங்கள் பாவத்துக்காகப் பாடுபட்டு மரித்து இரட்சிப்பை உண்டாக்கினதற்காகப் பூதலத்தோர் தாங்கள் முழங்காற்படியிட வேண்டியது நியாயம். பூமியின் கீழானோர் தாங்கள் தண்டிக்கப்பட்டதால், தேவ நீதியின் தீர்ப்பை உணர்ந்து, பயத்தினாலே முழங்காலை முடக்கி, பூதலத்தில் தாங்கள் இருந்தபோதே இயேசுகிறிஸ்துவை கர்த்தரென்று அறியாமலும், விசுவாசித்து, பாவமன்னிப்பையும், புத்திர சுவிகாரத்தையும் பெற்று இரட்சகரோடு உறவாடாமலும்போன தங்கள் நிர்ப்பந்த நிலைமையையுணர்ந்து, பயபக்தியோடு இயேசுகிறிஸ்துவே கர்த்தரென்று நாவினால் அறிக்கை பண்ணுவார்கள் என்ற நியா

யத்தையும் ஒத்துக்கொள்ளுவோம். பூமியிலிருந்தவர்கள் பாவிகளும் குற்றவாளிகளுமானதுபோல வானோர்களுமிருந்தார்களோ? என்றால்: கீழ்வரும் வசனங்களைக் கவனிப்போம்.

யோபு 15:15. "வானங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகளல்ல. யோபு 25:5. நட்சத்திரங்களும் அவர் பார்வைக்குச் சுத்தமானவைகளல்ல. யோபு 4:18. தம்முடைய தூதரின் மேலும் புத்திமீனத்தைச் சுமத்துகிறாரே".

2பேதுரு 3:13-ல் "நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்" என்று சொல்லப்பட்டிருக்கிறதால், இப்போதிருக்கிற வானங்களிலே நீதியில்லையென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. நீதியிருக்குமானால், 2பேதுரு 3:10-12-ன்படி வானங்கள் மடமடப்போடொழிந்து, வெந்து கரைந்துபோகவேண்டியதில்லையே? இந்த நியாயத்தின்படி வானங்களிலே நீதியில்லையென்று கண்டால், இந்த உலகத்தை இரட்சித்தவர்தானே அவற்றையும் இரட்சிக்க நியாயமிருக்கிறது.

எபே. 1:9-10 இதை அதிக உறுதிப்படுத்துகிறது. "காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி, பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார்."

காலங்கள் நிறைவேறும்போது = உலக முடிவிலே.

விளங்கும் நியமத்தின்படி = நடுத்தீர்வையிலே.

பரலோகத்திலிருக்கிறவைகளும் = வெளி 12:12-ல் பரலோகங்கள் என்றும், 2பேதுரு 3:10-ல் வானங்கள் என்றும் கூறப்பட்டிருப்பதால் பரலோகத்திலிருக்கிறவைகள் என்பது பன்மை.

பூலோகத்திலிருக்கிறவைகளும் = இங்கே பூலோகம் ஒருமை.

சகலமும் = சுரான், நரான் எல்லாம். அடங்கலும்

கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று = ஆளுகையும் அதிகாரமும் கிறிஸ்துவுக்குள் இருக்குமென்பது.

தமக்குள்ளே தீர்மானித்திருந்த=பராபரன் தமக்குள்ளே தீர்மானத்தை முடித்து வைத்திருந்தார்.

தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை=பராபரனுடைய இருதயத்திலிருந்த இரகசியம்.

எங்களுக்கு அறிவித்தார் = அப்போஸ்தலருக்கும் நமக்கும் அறிவித்தார்.

பராபரனுடைய சித்தத்தின் இரகசியம் நமக்கு விளங்கக் கூடாவிட்டாலும் தம்முடைய தயவுள்ள சித்தத்தினுலே நமக்கு அறிவித்திருக்கிருர்.

கேள்வி: "பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்ரும் நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்'' என்கிருரே. ஒரு நல்லபிள்ளை அதின் ஆகாத தகப்பனின் நிமித்தம் தண்டிக்கப்படுவது நியாயமோ?

உத். இதற்கு முந்தின வார்த்தைகளையும் கவனிக்க வேண்டும். இது எபிரேயக் கருத்தின்படி "பிதாக்களுடைய அக்கிரமத்தை. என்னைப் பகைக்கிற பிள்ளைகளிடத்திலும் மூன்ரும் நான்காம் தலைமுறைமட்டும் தண்டிப்பேன் என்று அர்த்தமாகிறது. எசேக். 18:1-20 வரை படித்துப் பார்க்க.

தகப்பன் செய்த பாவத்தினுலே பிள்ளைகளுக்கு சரீரத்துக் கடுத்த அநேக உபத்திரவங்கள் இம்மையிலே வரும் என்பதற்குச் சந்தேகமேயில்லை. தகப்பன் தன் சுகத்தை அழித்தவனுனல், பிள்ளைகளுக்குப் பெலவீனமும் நோயுமுள்ள சரீரம் வரும். தகப்பன் ஆஸ்திகளை அழித்தால், பிள்ளைகள் ஏழைகளாகின்றன. தகப்பன் கெட்ட நடத்தையாய் நடந்தால், பிள்ளைகள் அவன் துன்மாதிரியைப் பார்க்கிறது. ஆகிலும் பிள்ளைகள் தகப்பன் காட்டின துன்மாதிரியைப் பின்பற்ருமல், கர்த்தருக்குத் தன்னை ஒப்புக்கொடுத்தால், கர்த்தராகிய பராபரன், அப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு இரங்கி, தகப்பன் செய்த பாவத்துக்காகத் தண்டிக்கமாட்டார். கெட்ட தகப்பனுடைய பிள்ளை கெட்டுப்போனுல், தன் குற்றத்தினுலே நிர்ப்பாக்கியனுவானே யொழிய மற்றப்படியல்ல.

கேள்வி: என்னத்துக்காகப் பராபரன் தகப்பனிமித்தமாகப் பிள்ளைகளுக்கு உபத்திரவம் வருமென்ருர்?

உத்: இதினாலே அவர் எல்லாத் தாய் தகப்பன் மாரையும் எச்சரித்தார். ஏனென்றால், பெற்றோர் தங்கள் பிள்ளைகளைச் சிநேகித்து, அவர்கள் மேல் ஆசீர்வாதம் வரவிரும்பினால், தாங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் பிள்ளைகளுக்கு நல்மாதிரி காண்பிக்க வேண்டும். பெற்றோர் பராபரனுக்குக் கீழ்ப்படியாமல் பிள்ளைகளுக்குத் துன்மாதிரி காண்பித்தால், பிள்ளைகளுக்கு அதினாலே வெகு உபத்திரவங்களும், தேவபக்தியாய் நடக்க வெகு தடைகளும் வரும். தாய் தகப்பன் மாரைக் கனம்பண்ண வேண்டுமென்று கர்த்தர் சொன்னாலும், பெற்றோர் துன்மாதிரியைக் காட்டினால், கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள, பிள்ளைகளாலே முடியாமற் போகும்.

கேள்வி: கர்த்தருடைய கற்பனைகளை ஏன் கைக்கொள்ள வேண்டும்?

உத்: என்னிடத்தில் அன்புகூர்ந்து என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன் என்று ஆண்டவர் சொன்ன வாக்குத்தத்தத்தின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவே.

கேள்வி: பெற்றோர் பராபரனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டதினாலே, பராபரன் அவர்களுடைய பிள்ளைகளை மோட்சத்திலே வைப்பாரோ?

உத்: அப்படிச் செய்யமாட்டார். மோட்ச ராச்சியத்துக்குப் போய்ச் சேரவேண்டுமென்றிருக்கிறவன், கர்த்தருக்குத் தன் மனதை ஒப்புக்கொடுத்துக் கீழ்ப்படிய வேண்டும். அதற்குப் பக்தியுள்ள பெற்றோரின் மாதிரி பிள்ளைகளுக்கு உதவியாயிருக்கிறது. பக்தியுள்ள பெற்றோரினிமித்தம் பிள்ளைகளுக்கு அநேக நன்மைகளுண்டு. அவர்களுடைய பிள்ளைகள் பாவத்திலே விழுந்தாலும், கர்த்தர் அவர்களுக்குக் குணப்படத் தவணை கொடுத்து, அவர்கள் சரீரங்களுக்கு வரப்போகிற துன்பங்களிலே, அவர்களின் பெற்றோரினிமித்தம் காத்து இரட்சிக்கிறார்.

கேள்வி: பராபரன் பக்தியுள்ள தாய் தகப்பனிமித்தம் பிள்ளைகளுக்குப் பல நன்மைகளைச் செய்ததற்கு அத்தாட்சி யுண்டோ?

உத்: இஸ்ரவேலர் பாவஞ்செய்து அடிக்கடி தேவ கோபத்துக்குரியவர்களானார்கள். ஆயினும் பராபரன் அந்தக் சாதியை அழிக்காமல், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, தாவீதினிமித்தமாக அவர்களைத் திருப்பித் திருப்பி இரட்சித்தார்.

கேள்வி: இதனாலே பெற்றோரும் பிள்ளைகளும் படிக்க வேண்டியதென்ன?

உத்: பெற்றோர் தங்களைக் கர்த்தருக்கு உண்மையாக ஒப்புக் கொடுக்க வேண்டும். அதனாலே தங்கள் பிள்ளைகளின்மேல் ஆசீர்வாதம் வரப்பண்ணுகிறார்கள். பிள்ளைகள் தங்கள் தாய் தகப்பன்மார் பக்தியை அறிந்து பின்பற்றினால், பெற்றோரின் செபத்தினிமித்தமாகக் கர்த்தராலே வெகு நன்மைகளையடைவார்களென்று நன்றாய் யோசித்துப் பார்க்க வேண்டும். பராபரன் சீவனையும் மரணத்தையும், பாக்கியத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் காட்டி எவ்விதத்திலும் நம்மைக் குணப்படுத்திப் பாக்கியவான்களாக்கப் பார்க்கிறார்.

இத்தன்மையான பராபரனுடைய பலவிதமான நடத்துதல்களைப்பற்றி, அதிகமாயறிய மனதுண்டானால், வேதநாயக சாஸ்திரி செய்த முன்னுரைக்கடுத்த மெய்யறிவென்ற புஸ்தகத்தின் 6-ம் பாட்டின் விஸ்தரிப்பைக் காண்க அஃதாவது:

ஆட்டி யுலகனைத்து மாள்வோ னொருநாளின்
மாட்டுக் குடிலில் வரலையோ – நாட்டி
லரசாண்ட தாவீ தரும்வனஞ் சென்றான்
றெரியா திறைவன் செயல்.

இதன் பொருள்: சகல உலகங்களையும் நடத்தி யாண்டு கொள்ளுகிறவன் ஒருநாள் முன்னணையிற் பிறந்ததில்லையோ? தாவீது கொடிய வனாந்தரத்துக்கு ஓடி யொளித்ததில்லையோ? கடவுளின் செயலை யாரும் அறிய முடியாது.

ஆதலால் நல்லோர்களும் அடிக்கடி தரித்திரப்படுகிறதும், உபத்திரவப்படுகிறதும், நம்முடைய புத்திக்கு விரோத

மாய்க் கண்டாலும், அதெல்லாமொரு காரணத்தைப்பற்றி யுண்டாகிய தேவச் செயலென்று நினைக்கவேண்டுமென்பது கருத்து.

பராபரனுடைய செயலை யாரும் ஆராய்ந்து முடியாது. அது மனிதருடைய புத்திக்கு எட்டாதது. அவர் மெய்யாகவே மறைவான பராபரனுயிருக்கிறார். ஏசா. 45:15 பகைகாரனைப்போலிருக்கிறார். யோபு 13:24. மறதியுள்ளவரைப் போலிருக்கிறார். சங். 13:1. தூங்குகிறவரைப்போலிருக்கிறார். சங். 44:23.

இப்படிக் காணப்பட்டாலும் கர்த்தருடைய வார்த்தை செம்மையும், அவருடைய செய்கைகளெல்லாம் சத்தியமுமாயிருக்கிறது. சங். 33:4; 25:10. ஆதலால் அவருடைய வழிகளைப்பற்றித் தர்க்கம் பண்ணக்கூடாது. ஏனென்றால் அவர் தானே, தம்முடைய வழிகள் செம்மையானது என்கிறார். எசே. 18:25,29; 33:10-20; உபா. 32:4; 2சாமு. 22:31; தானி. 4:34; வெளி. 15:3; எரே. 10:10; யோபு 34:10; சங். 92:12-15.

28. வேதநாயக சாஸ்திரியின் ஆசீர்வாதம்

சாஸ்திரியார் பனிகாலம் ஒத்துக்கொள்ளாததால் இடைக்கிடையே வியாதிப்பட்டார். இவரென்ன பலவீனமாயிருந்தாலும், இவர் வீட்டில் நடக்கிற காலை மாலைச்செபம், ஞாயிற்றுக்கிழமைச் செபம் தவறிப்போனதில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமையில் அவர் தமது குமாரர்களோடே, விசுவாசிகளான பூர்வ பிதாக்கள் நமக்குக் காட்டின மாதிரியின்படியே ஒவ்வொருத்தருக்கும் வாழ்த்துதல் சொல்லவேண்டியிருக்கிறது. அதற்கென்று ஒருநாளைக்குறித்துக்கொள்ளவேண்டுமென்றார்.

பிற்பாடு அவர்தானே, கர்த்தர் ஒருவேளை என்னைச்சடுதியாய் அழைத்துக்கொள்ளுகிறதாயிருக்கும்; ஆனதினாலே இப்பொழுதே இந்த நல்ல சமயத்தில் உங்களுக்குச்சொல்லவேண்டியதைச் சொல்லுகிறேனென்று, சங். பிரடரிக் சுவார்ச்சையரவர்களுடைய பூர்வ பிரசங்கம் எழுதியிருந்த ஒரு ஓலைச்சுவடியைத் தம்முடைய குமாரன் ஞானதிக்கத்தின் கையிற் கொடுத்து, நீ இதில் கிழமைதோறும் ஒரு பிரசங்கம் வாசித்

துச் செபம் பண்ணி வரவேண்டுமென்று கற்பித்து, கூடி வந்தவர்களெல்லாரையும் முழங்காற்படியிடச் சொல்லி, துவக்கமாக ஞானதிக்கம்பிள்ளை தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, நீ எனக்கு ஒரு டீக்கனைப்போல, வெள்ளை நிலையங்கி தரித்துக்கொண்டு பாடப் படிக்க என்னோடேகூட ஞானச் சதுர்ப்பிரசங்கத்துக்கு உதவியாயிருக்கிறவன். இன்று முதல் நான் உன்னை ஒரு உபதேசியாக நியமிக்கிறேன். கர்த்தர் உன்னைத் தமக்குச் சித்தமானமட்டும் உயர்த்தக்கடவரென்றார்.

இரண்டாவது, தம்முடைய இளையகுமாரன் எலியா தெய்வ சிகாமணி பிள்ளையின் தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, ஆண்டவர், தம்மைப்பாடுகிற வரத்தை உனக்குக் கொஞ்சம் கொடுத்திருக்கிறார். நீ என் ஊழியத்திலே இருக்கக்கடவாய். ஆண்டவர் உனக்குத் தம்மைப்பாடுகிற வரத்தைப் பரிபூரணமாய்க் கொடுக்கக் கடவரென்றார்.

மூன்றாவதாக, தம்முடைய மூத்தகுமாரன் ஞான சிகாமணியா பிள்ளை தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, நீ சுவிசேட புராணத்தைப் பாடி பிரசங்கிக்கிற படியினாலே, நீ எங்கும் அவருடைய நாமத்தைப் பிரசங்கிக்கிற பிரசங்கியாயிருக்கவும், மற்றவர்களுக்கு நன்மாதிரி காட்டி நடந்து கொள்ளவும், உன் பிள்ளைகளெல்லாம் உனக்கு உதவியாயிருக்கவும், ஆண்டவர் உனக்கு நீடித்த சுகத்தைக் கொடுக்கக்கடவரென்று முடித்தார்.

அன்று ஞான சிகாமணியா பிள்ளை பிறந்த நாளாயிருந்தது. தெட்சணத்து இன சனத்தாரும் வந்து கூடியிருந்தார்கள்.

கடைசியிலே மூத்த குமாரத்தி ஞானதீப அம்மாள் பிரயாணப்பட்டு, தெட்சணத்துக்குப் போகிறபோது, ஒரு நிருபமும் எழுதிக்கொடுத்து, தலையிலே கைவைத்து ஆசீர்வதித்து, நீ போகிற இடங்களிலுள்ள எல்லாச் சபைகளிலும், கர்த்தருடைய பாடல்களைப் பாடிப் புராணங்களை விஸ்தரித்து அவருடைய நாமத்தை மகிமைப் படுத்தக்கடவாய். அப்போது உனக்கு வெகு நன்மையாயிருக்கும். ஆண்டவர் உன் பேரிலும், உன் குமாரத்தியின்பேரிலும், கிருபையாயிருக்கக்கடவர் என்றார்.

பின்னும் அவருடைய பிள்ளைகளெல்லாரும் பிரயாணமாய்ப் போகிற ஒரு பயணத்தில், ஞானதிக்கம் பிள்ளை போக ஆயத்தமாயிருந்தான். ஞானதிக்கத்தை எப்பொழுதும், தனக்கு உதவியாயிருக்கும்படி வைத்திருக்க நினைத்து அவனை அவர்களோடே போகாதபடிக்கு, கர்த்தர் பேரிலே ஆணையிட்டுக் கொண்டார். இந்தப் பெரிய ஆணையினிமித்தம், ஞானதிக்கம் போகப் பயந்து, தன் பயணத்தை நிறுத்தினான். அவனுக்குப் பதிலாய் எலியா தேவசிகாமணிப் பிள்ளை அவர்களைப் பின் சென்றான்.

இதற்குப் பின்னான மறுவருஷத்திலும், அவருடைய பிள்ளைகள் தெட்சணத்துக்குப் பிரயாணப் பட்டார்கள். அவர்கள் போன இரண்டு மாதத்துக்குப் பிற்பாடு, இவருக்கு முற்றிலும் பசித்தீபனம் அற்றுப்போயிருந்தது. இவர் இரண்டு மாதக்காலமாக மிகவும் பலவீனப்பட்டார். அவருடைய பெண்சாதி விரோதய அம்மாள் அத்தருணத்திலே, வேண்டிய பணிவிடைகளைச் செய்து, அவரை இரவும் பகலும் காத்திருந்தார்கள்.

அப்பொழுது அவர், கர்த்தருன்னை யென் விருத்தாப்பியத்துக்கு உதவியாக வைத்தார். நீ யெனக்குப் பணிவிடை செய்ததினாலே, உன் பிள்ளைகளெல்லாம் உனக்குப் பணிவிடை செய்து, உனக்குத் தாழ்ச்சியில்லாமல் விசாரிப்பார்கள். அநேகம் வேலைக்காரிகளும் உனக்கு ஒத்தாசையாயிருப்பார்களென்றார்.

அவருடைய இளைய குமாரத்தி மனோன்மணியம்மாள் புருஷன் மாசிலாமணியாபிள்ளை, ஞானசிகாமணியாபிள்ளை குமாரன் செபமணி, அவருடைய மருமகள் அருளம்மாள், மற்றுங் குழந்தைகளெல்லாரும், இவருக்குச் செய்த பணிவிடைக்காக, அடிக்கடி அவர் சந்தோஷப்பட்டு, நீங்கள் என் முதுமையிலே எனக்குச் செய்த ஒத்தாசைக்காக ஆண்டவர் உங்களுக்கு நன்மை செய்து, உங்களுடைய முதுமையிலே உங்களை நன்றாய் விசாரிப்பாராக என்று ஆசீர்வதித்தார்.

சபையாரில் அநேகர் அவருடைய அந்திய காலஞ் சமீபித்திருக்கிறதென்றெண்ணி, அடிக்கடி வந்து, பற்பல

பதார்த்தங்களையுங் கொண்டுவந்து கொடுத்து, அவருடைய ஆசீர்வாதத்தையும் பெற்றுப் போனார்கள்.

சபையிலொரு பெரிய மனுஷன் அவரைக் காணவந்து, ஐயா! உங்களைப் பார்க்க வேண்டுமென்று முன்னொரு தடவை வந்தேன். அப்பொழுது நீங்கள் படுத்திருந்தீர்கள். அதை ஞானதிக்கம்பிள்ளை உங்களுக்குச் சொல்லவில்லையா என்றார். அப்பொழுது சாஸ்திரியார்: என்ன நீர் சொல்லுகிறது ஆச்சரியமாயிருக்கிறது. நீர் என்னைப் பார்க்க வந்ததையும் பார்க்க வராததையும் கர்த்தர் பார்த்திருக்கமாட்டாரா? நான் வியாதியாயிருந்தேன். என்னைப் பார்க்க வந்தீர்கள். காவலிலிருந்தேன், என்னைக் காணவந்தீர்கள் என்பார். அவரல்லவோ உமக்குப் பலனளிக்கிறவர் என்றார்.

அவருக்கு அப்பொழுது சாப்பிடக் கூடாமலேயிருந்தது. அந்தப் பெலவீனத்தோடேயிருக்கிறபோது தேவ நற்கருணை வாங்க மனதாயிருந்து, சங். பர்சுவேலையருக்குச் சொல்லியனுப்பினார். அவர் நல்ல, கோவில் முடிந்தபின்பு வீட்டுக்கு வந்து கொடுக்கிறேனென்று சொல்லியனுப்பினார். இவர் வீட்டிலே வாங்குகிறது தமக்கு அத்தனை எழுப்புதலைக் கொடுக்க மாட்டாதென்று வழக்கம்போல ஸ்நானம் பண்ணிக் கொண்டு, தேத்தண்ணீர் முதலாய்க் குடிக்காமல், உபவாசத்துடன் உடுத்திக்கொண்டு, தேவாலயத்துக்குப் போய்த் தம்முடைய குடும்பத்தோடே தேவ நற்கருணை வாங்கிச் சந்தோஷத்தோடே வீட்டுக்குத் திரும்பினார். என்றாலும் மிகுந்த பலவீனமாயிருந்ததினாலே போக வர மெத்த வருத்தப்பட்டார்.

பலவீனத்துக்குக் கொஞ்சம் ஒயின் சேர்த்தால் நலம் என்றும், அது பசித்தீபனத்தையுண்டாக்குமென்றுஞ் சொன்னபோது, அவர் அது கெட்ட வழக்கமாய்ப் பிடித்துக்கொண்டால் மோசம்; அப்படிச் செய்யக்கூடாதென்றார். பிற்பாடு அநேகருடைய கேட்டுக்கொள்ளுதலினால் அவர் சம்மதித்தபோது, தினந்தோறுங் கொஞ்சங் கொடுக்கப்பட்டது.

யாரும் நினையாத பிரகாரம், கர்த்தர் அவருக்கு வரவரப் புசிக்கவுஞ் சற்றே உட்காரவும் பெலன் அருளினார். ஆனால் காலில் கொஞ்சம் வீக்கம் உண்டாயிற்று. இரண்டு மாதக்

சாஸ்திரியார் உயிரோடிருந்த நாட்களில் சிலர் அறிந்த மட்டும் 1863 ஹூத்தின் பண்டிகையில்தான் அவருடைய பெலவீனத்தால் தேவாலயத்துக்கு வரவில்லை. பிறப்பின் பண்டிகைச் சதுரும் நடத்தவில்லை. வீட்டிலேயிருந்து வழக்கம்போல் தேதி வாக்கியத்துக்கு விஸ்தரிப்புச் சொல்லிச் செபம் செய்து, தம்முடைய வீட்டார், தூரப்பிரயாணம் போன தம்முடைய பிள்ளைகள், ஞானப்பாட்டகர், உபகாரிகள், திருச்சபையார் அனைவரையும் தற்காக்க வேண்டுமென்று கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டார்.

கவலைப்படாதபடிக்கு வீட்டார் அனைவருக்கும் புத்தி சொல்லி "மேசியாவின் மன்ருட்டிருக்குது வேதநாயகன் பாட்டிருக்குது, ஏன் மயங்குகிருய் மனமே" என்ற பாட்டைச் சொல்லிப் பிள்ளைகளைத் திடப்படுத்தி, கிறிஸ்து ஐசுவரியவானு யிருக்கிறதால் நமக்குக் குறைச்சல் வராது நீங்கள் மாத்திரம் வழக்கத்தை விடாமல் நானிருந்ததுபோல நீங்களும் எப்பொழுதும் கர்த்தரைப் பாடி, அவரைச் சேவித்து, அவருக்குப் பயந்து நடவுங்கள். அப்பொழுது உங்களை விசாரிக்கிறது, அவர் பேரில் விழுந்த கடன் என்றுர்.

29. முடிவுரை

வேதநாயக சாஸ்திரியின் மரணம்

கடைசியாக அவருக்குத் தொண்ணூற்றெரு பிராயமாகிற 1864 ஹூ ஜனவரி மீ" 24 உ ஞாயிற்றுக்கிழமை, அவர் இந்த மாயையான உலகத்தை விட்டுப் போகிற நாளாயிருந்தது. அந்த நாளில் அவருடைய மரணமிருக்குமென்று ஒருவரும் நினைத்ததில்லை.

வழக்கப்படி வீட்டில் காலை ஆராதனை நடக்கிறபோது, நாற்காலியில் உட்கார்ந்திருந்தவண்ணமாய் எல்லாருக்கும் பொதுவான ஆசீர்வாதத்தைக் கூறினுர். அதாவது: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும் பரமபிதாவின் சிநேகமும், பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூட இருக்கக்கடவதென்பதுதானே. இது அவர் வாயினாலே சொன்ன கடைசி ஆசீர்வாதமும் செபமுமாயிருந்தது.

அப்போ நானும்மைப் பார்த்து
கண்ணோக்கி நெஞ்சிலே
அணைத்துக் கொண்டு காத்து
தூங்கட்டும் இயேசுவே.

இந்தப் பிரார்த்தனைக் கவியைச் சொல்லி இயேசுநாதர் பாடு பட்ட தியான செபத்தை வாசித்த பின்பு,

அவருடைய மரணம் பாக்கியமான மரணமாயிருந்ததென்றும், தன் இரட்சகருடைய கையிலே நம்பிக்கையாய்த் தன் ஆத்துமத்தை ஒப்புக் கொடுத்துத் தமது ஓட்டத்தை முடித்தாரென்றும் கண்டு, முன் வாசித்த என்னை மீட்டுத்தாங்கிய என்ற பிரார்த்தனையிலொன்றைப் பாடி முடித்தார்.

அந்த நேரத்திலே மாசிலாமணியா பிள்ளை, தேவசகாயம் பிள்ளை, செபமணி முதலானவர்கள் பாடப் படிக்க உதவியாயிருந்தார்கள்.

அது சாயங்காலம் ஐந்து மணி வேளையாயிருந்தது. அந்த நேரத்திலே லுத்தரன் மிஷன் தேவாலயத்திலும் S. P. G. மிஷன் ஆலயத்திலும் மணியடிக்கப்பட்டது. பிற்பாடு செபம் பண்ணுகிற இடத்திலே, அவரைக் கட்டிலோடே கொண்டுபோய் வைத்து, அங்கி சால்வை முதலானவை போட்டிருக்கிற பாவனையாய்ச் செய்து தலையிலே சரிகைத் தலைப்பாகு வைக்கப்பட்டது.

வீட்டிலும் தெருவிலும் மெழுகுவர்த்திகள் விளக்குகள் ஏற்றப்பட்டது. கனம். லுத்தரன் மிஷனெரியாராகிய சங். அக்ட்டர் லோனி ஐயரும் வந்திருந்து ஆறுதலாகப் பேசி, சாஸ்திரியார் சந்தோஷத்தோடே நல்ல மரணம் அடைந்திருக்கிறார்கள் என்று சொல்லி, அடக்கம் பண்ணப்போகிற போது, எந்தப் பிரார்த்தனை பாடலாமென்று வினவினார்.

நோவா ஞானதிக்கம் பிள்ளை சங். தகப்பனார் பிரடரிக் சுவார்ச்சையரவர்கள் மரணத்தில், அவருக்குப் பிரியமான, என்னை மீட்டுத் தாங்கிய என்ற பிரார்த்தனை பாடப்பட்டதென்று, என் தகப்பனார் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் என் தகப்பனாருக்கும் பிரியமான பிரார்த்தனை. தங்களுக்குச் சித்தமானால் அதையே பாட உத்தரவாக வேண்டுமென்று

துபதேசியார் இளையகுமாரன் சாமுவேல்பிள்ளையும் "அன்பின் தெய்வ கிருபா சமுத்திர ஆழமே தயாபரா" வென்ற புலம் பலையும் வேறு சில பாடல்களையும் பாடினார்கள்.

சாஸ்திரியாருக்குப் பகல் ஒரு மணிக்குமேல் ஸ்நானம் பண்ணுவித்து உடுத்தினார்கள். அவர்களின் நாமங்கள்: வரோதய அம்மாள், நோவா ஞானதிக்கம்பிள்ளை, இராசுப் பிள்ளை, சிரஸ்தார் சாமுவேல்பிள்ளை, இயேசுதாஸ்பிள்ளை, பாக்கியம்பிள்ளை, குருபாதம்பிள்ளை, சின்னப்பபிள்ளை, கண்ணுப்பிள்ளை, தாவீதுப்பிள்ளை, மாசிலாமணியாபிள்ளை முதலானவர்கள்.

அப்பொழுது சாஸ்திரியாருடைய குடும்பத்தாராகிய ஞானப் பாட்டகர் முதலானவர்கள் பிரசங்கச் சதுருக்கு உடுத்துகிற வழக்கப்படி, அங்கி, சட்டை, குல்லா முதலானதுகளைப் போட்டுக்கொண்டு வந்து நின்றார்கள்.

நோவா ஞானதிக்கம்பிள்ளை, எல்லாச் சனங்களையும் அமர்ந்திருக்கச் சொல்லி, சாஸ்திரக்கும்மியிலே 762, 763, 766, 767, 768, 769 கண்ணிகளைப் பாடி,

கர்த்தராகிய ஆண்டவர் சாஸ்திரியாருடைய தகப்பனார் தேவசகாயம்பிள்ளையை, அவர் அக்கியான இருளிலிருந்த பொழுது தெரிந்துகொண்டு தம்மை வணங்கும்படி செய்து, அவருடைய குமாரனாகிய இந்த நம்முடைய நல்ல தகப்பனாகிய சாஸ்திரியாரை அவருடைய பன்னிரண்டாம் பிராயத்திலே சங். தகப்பனார் பிரடரிக் சுவார்ச்சையரைக் கொண்டு, இவ்விடத்துக்கு அழைத்துவந்து, மனுஷனாக்கி, சபைக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் பிரயோசனமான அநேக விதமான நூல்களையும், புராணங்களையும் உண்டுபண்ணும்படி வரமளித்தாரென்றும், இவர் தம்முடைய ஆயுளினுளெல்லாம் கர்த்தரையே பாடிக்கொண்டிருந்தாரென்றும், இஸ் அயினசு சரபோஜி மகாராசா, ஒரு சின்னப்பாடல் மாத்திரம் விக்கிரகத்தின் பேரில் பாடவேண்டுமென்று உபசரித்து கேட்டுக் கொண்ட அவருடைய கேள்விக்குச் செவிகொடுக்காமல், அந்த இராசாவின் சபையிலுள்ள புறச்சமயத்தாரின் கண்களுக்கு முன்பாகக் கர்த்தருடைய நாமத்தையே மகிமைப்

படுத்தினுரென்றும், சாஸ்திரக்கும்மி 432 கண்ணி முதல் 437 கண்ணிவரை பாடி அவற்றுக்குப் பொருட்சொன்னதுமன்றி,

தரங்கம்பாடி, தஞ்சாவூர், சென்னபட்டணம், திருச்சிராப் பள்ளியிலுள்ள திருச்சபையாரனைவரும், சாப்பிளன். போலே ஐயர் முதலான ஐயர்மார்களும், இவருக்கு வெள்ளை நிலை யங்கி தரிப்பித்து, சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரி என்று பட்டப்பெயரிட்டு விசேஷித்த நற்சாட்சிப் பத்திரமு மெழுதிக் கொடுத்தார்களென்றும், அந்த நற்சாட்சி நிருபத் தின் தலைப்பில் வேதநாயக சாஸ்திரியென்று எழுதி அதற்கு மேல் பரிசுத்த ஆவியானவர் புருருபமாக இறங்குகிற பாவ னையாகச் சித்தரித்து, இரு சம்மனசுகள் வானத்திலிருந்து, ஒரு கிரீடத்தைத் தங்கள் கைகளினுலே கொண்டுவந்து இவர்மேல் வைக்கிற மாதிரியா எழுதுவித்து, சபையில் இவ ருக்கு முதல் மரியாதையும் முதல் ஆசனமுங் கொடுத்து, புத்திர பரம்பரையாய் நடத்தி வருவோமென்றுங் கையொப் பம் போட்டுக் கொடுத்தார்கள்.

பிற்காலத்தில் சிலர், அந்தப் பட்டத்தையும் மரியாதை யையும் வேறுபடுத்த நினைத்தாலும், அவர்களால் முடியா மற் போயிற்று.

கர்த்தர் தம்முடைய அடியாளுகிய சாஸ்திரியவர்களை, அவருடைய அந்திய காலமாகிய தொண்ணூற்ருேராம் வயது மட்டும் மேன்மைப்படுத்தி, யாதொரு தாழ்ச்சியில்லாமல் விசாரித்து வந்தார். அவருடைய மரணம் பாக்கியமாய் முடிந் தது. அவருடைய சரீரம் பூமிக்குள் அடக்கப்பட்டு மறைக் கப்பட்டுப் போவதைக் குறித்து நாமெல்லாரும் நம்பிக்கையற் றவர்களைப் போலத் துக்கப்பட நியாயமில்லை. ஏனென்ருல் நம்முடைய சீவன், கிறிஸ்துவுடனேகூட மறைந்திருக்கிறது. என்னை விசுவாசிக்கிறவன், என்றைக்கும் மரணத்தைக் காண மாட்டானென்று, நம் இரட்சகர் சொல்லியிருக்கிருர். அவர் மரித்தார்; நாமும் மரிக்கவேண்டும். அவர் மகிமையாய் உயி ரோடெழுந்தார்; நாமும் குழியில் தரிக்கமாட்டோம்; இந்தத் தேகத்தோடுதானே எழுந்திருப்போம். இந்த நம்முடைய சொந்தக் கண்ணுலேயே அவரைத் தரிசித்து, நம்முடைய

வழிகாட்டியாகிய இந்த நல்ல தகப்பனை, மோட்ச இராச்சியத்திலே, கர்த்தருடைய மகிமையின் ஆசனத்துக்கு முன்பாக, அவரை ஓயாமல் கீர்த்தனம் பண்ணித் துதித்துக்கொண்டிருக்கக் காண்போம் என்று சொல்லிச் செய்த

செபம்

மகா இரக்கமுள்ள கர்த்தாவே, இத்தனை நாட்களாக இந்த வீட்டிலே வந்த எல்லாத் தீமைகளையும், மோசங்களையும் இடுக்கண்களையும் விலக்கி இரட்சித்த மகா வல்லமையுள்ள தேவனே!

இப்பொழுதும் இந்த இடத்திலே உம்மை இரவும் பகலும் ஆராதித்து வந்த உம்முடைய தாசனாகிய எங்கள் தகப்பனை உம்முடைய இராச்சியத்துக்கு அழைத்துக் கொண்டீரென்று மாங்கிஷப் பிரகாரமாக விசனப்படுகிற எங்கள் இருதயத்தின் துயரத்தை மாற்றி, அவர் பின் வைத்துப்போகிற அவருடைய வீட்டாராகிய எங்களைக் கைவிட்டு விடாமல், என்றென்றைக்கும் உம்முடைய கிருபையை எங்கள் பேரில் வைத்து, திருச்சபையாரனைவரும் இன்னமும் இந்த உம்முடைய அடியானின் வீட்டைச் சிநேகித்து வரும்படியான இருதயத்தை அவர்களுக்குக் கொடுத்து,

நாங்களும்மை இடைவிடாமல் துதித்து ஸ்தோத்தரித்துக் கொண்டிருக்கும் படியான வரத்தை எங்களுக்கு அருளிச்செய்யும். இந்தச் சமயத்திலே இவ்விடத்திலில்லாத எங்கள் சகோதரர் சகோதரிகள் இந்தச் செய்தியைக் கேட்டுத் துயரப்படும்போது, நீர்தானே அவர்கள் விசனத்தை மாற்றித் தேற்றரவருளும். கடைசிவரை நாங்கள் உமக்குள்ளே பிழைத்து, உம்முடையவர்களாக இருந்து, சந்தோஷமான மரணத்தையடைய எங்களெல்லாருக்கும் தயை செய்தருளும் சுவாமி. ஆமென்.

என்று சொல்லி முடித்தபோது எல்லாரும் கர்த்தருடைய செபத்தைச் சொல்லி வேண்டிக்கொண்டார்கள்.

அப்பொழுது ஞானதிக்கம் பிள்ளை எழுந்து நின்று, சாஸ்திரியார் தம்மைச் சேமிக்கும் பொழுது, தம்முடைய கையிலே எழுதிவைக்க பதப் புஸ்தகத்திற்குறித்திருந்த பிரகாரம்,

இயேசு ராசா என்னையாளும் நேசா,
யேசு நாதா கடைக்கண் பார்,
கிருபாகரனே, தோத்திரமையா,

என்ற மூன்று பதங்களையும் பாடின பின்பு நான் எப்பொழுதும் என் தகப்பனுருக்குப் பிரசங்கச் சதுருக்குப் புஸ்தகம் எடுத்துக் கொடுக்கிறவன். இந்தப் பாடலை இன்றுதினத்தில் அவர்கள் கட்டளைப்படியே பெயர்த்தெழுதி கடைசியாய் அவர் கையிலே கொடுக்கிறேனென்று, சாஸ்திரியார் கையிலே கொடுத்தவுடனே,

ஞானேந்திர ஐயர் செபம் பண்ணினுர். சி. கி. சாந்தப்ப பிள்ளை "வானோர் வணங்குஞ் சருவேசா" என்ற புலம்பலை பாடினுர்கள். சத்தியநாதபிள்ளையின் கூட்டத்தார் புலம்பல், ஞானபத கீர்த்தனங்களை இனிதான வாத்தியங்களுடனே பாடிக்கொண்டிருந்தார்கள். சங். நேலரையரும், அவர் சமுசாரமும் வந்து நின்றுர்கள்.

ஏராளமான சனங்கள், சாஸ்திரியாரைப் பார்க்கவேண்டுமென்று கூடிவந்ததினுல் வீட்டிலே சனங்களுக்கு இடங்காணுமல் அதிக நெருக்கமாயிற்று. இதினுலே சதுர் பண்ணுகிற வெளிப்பந்தலிலே யாவருங் காணத்தக்கதாக வைக்கவேண்டியதாயிற்று. அப்பொழுது கோட்டைக்குள்ளிருக்கும் வேதநாயக ஐயர் செபம் பண்ணினுர்.

உயிர்த்தெழுதலின் பேரிலே எழுதப்பட்ட பிரார்த்தனை கவியொன்றைச் சபையார் பாடினபின்பு ஞானேந்திர ஐயர் செபம் பண்ணினுர். சாஸ்திரியாருடைய பிள்ளைகள், பாட்டகர் முதலானவர்கள் ஆருந்துணையில்லை யென்கிற பாடலை பாடினுர்கள்.

இரண்டு தேவாலயத்திலும் மணி ஓயாமல் அடிபட்டுக் கொண்டேயிருந்தது. எல்லாத் துரைகளுக்கும் அவர்கள் தொப்பியிலும், தோளின்பேரிலும் வெண்வஸ்திர மரியாதை செய்யப்பட்டது.

அப்பொழுது அவரைப் பல்லக்கிலேற்றி எடுத்துக் கொண்டு, அவரைப் பார்க்கவேண்டுமென்று கூடிவந்த தேச சனங்களுடைய விருப்பத்துக்குத் திருப்தியுண்டாக்கச் சுற்றிப் பிரவேசம் வரவேண்டியதாயிற்று.

சிரஸ்தார் சாமுவேல்பிள்ளை, இயேசுதாஸ்பிள்ளை யிருவரும், வெண்சாமரைப் போட்டு சுகந்த வாசனைத் தைலங்களைத் தெளித்துக்கொண்டு நடந்துபோக, இருவர் முன்னுகச் சென்று வெண் பாவாடை வீச, சிலர் புஷ்பங்களை அள்ளியள்ளிச் சொரிந்துகொண்டுபோக, லுத்தரன் சபையாரும், பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளும், ஒருமுறை பிரார்த்தனை பாட, இங்கிலீஷ் சபையாரும், பிள்ளைகளும், ஒருமுறை பிரார்த்தனை பாட, சத்தியநாதபிள்ளை, அதிஷ்டநாதபிள்ளை முதலானவர்கள் தம்பூரா முதலான வாத்தியங்களுடனே கீர்த்தனைகள் பாடிக் கொண்டுபோக, பின்னுலே சாஸ்திரியாருடைய பாடல்களை, அவருடைய பிள்ளைகள், பாட்டகர் முதலானவர்கள் பாடிக்கொண்டு போக, சகல துரைகளும், துரைசானிகளும் கூடப் பின்சென்று, தோரணம் வாழைகள் கட்டி அலங்கரிக்கப்பட்ட வீதிவழியாய்ச் சுற்றி, கோவிற் சன்னதி முகப்பில், சங். நேலரையரும், ஆபர்ட்டையரும் செபப்பிரமாண ஒழுங்குப்படி வாசித்துக்கொண்டு தேவாலயத்திற் சென்று, கிரமப்படியே வாசிக்கவேண்டியதை வாசித்து உள்ளும் புறம்பும் அலங்கரிக்கப்பட்ட பெட்டியிலே அவரை வைத்தார்கள்.

அப்பொழுது வேதியர்புரம் சாஸ்திரப் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் சங்கீதம் பாடினுர்கள். சபையின் பிரதானிகளான வக்கீல் சுந்தரம் பிள்ளை, ஆனந்த நாதபிள்ளை, உபதேசியார் பொர்திஞைத்துப் பிள்ளை, ஆசீர்வாதம் பிள்ளை, ஞானசிகாமணிப் பிள்ளை, பாக்கியம் பிள்ளை, சிரஸ்தார் கி. சாந்தப்ப பிள்ளை, சிரஸ்தார் சாமுவேல் பிள்ளை, இயேசுதாஸ் பிள்ளை, கண்ணுப்பிள்ளை முதலானவர்கள் எடுத்துக்கொண்டு தேவாலயத்துக்குப் பின்னுக இருக்கிற மிஷன் உயித்தான பூமியில் கட்டப்பட்டிருந்த கல்லறைத்தானத்தில் வைத்தார்கள்.

சங். நேலரையரும், ஆபர்ட்டையரும் முறைப்படியே செபம் வாசித்து, அடக்கம் பண்ணினுர்கள். ஆமென்.

இதோ என் ஆத்துமாவே
நீ நம்பினுேர் கர்த்தாவே
பயப்படாதிரு.

நிற்பது

2 நம்பிக்கை விசுவாச முத்தம சினேகமும்
ஞாயநெறி யுஞ்சுகிர்தமும்
தன்மனச் சாட்சியுந் தருமதா னங்களும்
நற்கீர்த்தி யும்பொறுதியும்
உம்பர்க ளேக்யமு மிக்கதவ முஞ்செபத்
துயர்தேவ தாபத்தியும்
உண்மையும் நிதானமும் வாய்மையும் வானத்தி
ஞெளிவிலுறு மெஞ்ஞானமும்
அம்புவியி லேசுநா யகர்சொன்ன வார்த்தையும்
அரியசத் தியவேதமும்
யாவையு மமைத்தவொன் ருனமெய்த் தெய்வமும்
அவர்மீ தறைந்தபுகழுஞ்
சம்பிரம மாயென்று நிற்குமது போலெனது
சகலபா டல்களுநிற்குந்
தத்துவஞா னச்சொரூப நித்தியசீ வப்பிரபல
சத்தியவே தச்சபைகளே

நிற்காதது

3 காலமுஞ் சமயமுந் தலமுநில முந்தேடு
காணியும் பூணுமணியுங்
கட்டும் அரண் மனைகளு முறவின்முறை யார்களுங்
கண்கண்ட தாய்தந்தையும்

தஞ்சைச் சபையின் வளம்

4 முக்கியபிர தானகுரு வுங்கோவி லுஞ்சாதி
முறைமையுஞ் சதுர்வளமையு
மூதறிவு ளோர்கள்துரை மார்கள்தே சாதிபர்கள்
முதலான பெரியோர்களும்
திக்கெலாம் நிலைகொண்ட கீர்த்தியுஞ் செல்வமுந்
திரளான நாட்டையர்மார்
தேர்ந்த உபதேசிமார் கூட்டமும் விற்பனர்
செறிந்தபள் ளிக்கூடமும்

பக்கிஷங் கவிவாண ரண்ணுவி மார்களும்
பாட்டகர்க ளின்பெருமையும்
பாரித்த சபையுஞ் சகோதரக் கூட்டமும்
பத்தியும் புத்தியுமுள்ள
சக்கியசுவி சேடசபை தஞ்சையல் லாதிலேச்
சற்குரு சுவார்ச்சையரே
தத்துவஞா னச்சொருப நித்தியசீ வப்பிரபல
சத்தியவே தச்சபைகளே

வேதநாயகன் சரிதை

5 போதகர் சுவார்ச்சையர் திருநெல்வே லியில்வந்த
போதவரு டன்பின் வந்து
புத்தியிற் பதினேழு நூற்றெண்பத் தாறுறப்
பிள்ளைக ளுடன்படித்து
ஆதிதொண் ணூறுதொட் டறுபத்தி ஞன்கா
யனஞ்சுவி சேடகவியா
யைம்பா னிரட்டித்த நூற்செய் துரைத்தெழுப
தரியமா ணுக்கராக்கி
வேதமுழு துங்கவிதை பாடிவளர் பண்டிகை
விவாகம்ஞா னத்தீட்சையெவ்
வேளையினு முமதுபல சந்தோஷ நாளிலும்
வெற்றிகள் பெறச் செய்துலகின்
சாதியா வர்களையும் நேசித்து வந்தவென்
தருமசா ஸ்த்திரமறிவீர்
தத்துவஞா னச்சொருப நித்தியசீ வப்பிரபல
சத்தியவே தச்சபைகளே.

சங். வேதநாயக சாஸ்திரியாரின் மரண ஞாபகம்

குமாரன் ஞானசிகாமணி பிரசங்க சாஸ்திரி
எழுதின வாசக நடை.

அருமையுங் கனமுமுள்ள ஐயா!

ஆ, பராபரனுடைய மனிதனே, தகப்பனாகிய சுவார்ச்சு முனிவரின் சீடனே!

திருச்சபைக்கு ஆயிரம் பதினாயிரங்களைப்போலிருந்தவரே

நூற்றிருபது நூல்களைக் கிறிஸ்துவின் பேரிற் சொன்னவரே,

வேதாகமத்தை முழுவதும் பாடலாய் விஸ்தரித்தவரே,

உம்முடைய பாலதத்துவத்தில், புளியங்குடி பள்ளியிலிருந்து திரும்பும்பொழுது கொன்ஸ்தந்தீனைப்போல, மேகத்திற் சிலுவைக் காட்சியைக் கண்டவரே,

சாலமோனின் ஞானத்திலுந் தாவீதின் வரத்திலும் பங்குபெற்றிருந்தவரே,

அஞ்ஞானத்தையும், அவபக்தியையும் பகைக்கிற எரிச்சலின் ஆவியையுடையவரே,

ஒரு போதகர் சொன்னபடி, உம்முடைய கண்களின் விழியிற் கிறிஸ்துவைப் பாடுகிற வரமும் மூக்கிலே தேவ வைராக்கியமுமிருந்தவரே,

உலக ஐசுவரியமற்றிருந்தும், உம்முடைய முகத்திற்கு அதிருகிற அதிர்ச்சியுண்டாயிருந்ததே,

தமிழ்ச் சுவிசேஷ சபையில் முன்னும் பின்னுமிராத வரத்தைப் பெற்றிருந்தீரே,

பண்டிகையினாளில் புதுப்பாடல்களின் ஞான சங்கீதங்களோடே வருகிற உம்முடைய வருகை இராசாவின் மகிழ்ச்சிக்கொப்பாயிருந்ததே.

எங்கள் இக்கட்டின் வேளையிலே, செபத்தினால் எங்களுக்கு அடைக்கலபட்டணம் போலிருந்தீரே.

நீர் 70 வருடத்துக்கு முன் கட்டின உம்முடைய வீட்டில், நீர் முந்தினவராய்ப் புறப்பட்டதொழிய, ஒருவரும் புறப்படாதபடி, தேவபோராட்டமாய்ப் போராடிக் கொண்டிருந்தீரே.

நீர் தேவ ஊழியத்துக்கென்று தென்தேசங்களுக்கனுப்புவித்த, உம்முடைய அருமைக் குமாரத்தியும், நீர் வெகுபாடுபட்ட உம்முடைய மூத்த அருமைக் குமாரனுங் கடைக் குமாரனும் வருகிறதற்குமுன் உம்முடைய சவாரி புறப்பட்டதே. உம்முடைய ஏழைக் குமாரர்கள் ஞானதீபம், ஞானசிகாமணி, தேவசிகாமணியின் திரும்பிவருதல்கள் துக்கமாய் மாறிற்றே.

பாரிசமுசாரியாய்ப் போன, ஏழையடியானும் அவன் பிள்ளைகளும், உம்முடைய திருமுகத்தை யெப்போ காண்போம்.

தஞ்சை நகர்க் கிறிஸ்துவின் சபையிற் பிழைத்து, கர்த்தருடைய நாளில் மரித்து அவரோடே வாழப் போனீரோ?

இவ்வித முகிவுக்கு நாங்களும் வரக் கர்த்தருடைய கண்களில் எங்களுக்குக் கிருபை கிடைப்பதாக. ஆமென்.

சிவிலிப்புத்தூர், சுவிசேட கவிப்பிரசங்கி,
1864 ஸ்ரூ பெப்ருவரி மீ 24 உ ஞானசிகாமணி

இளைய மகன் எலியா தேவசிகாமணி கவிராயன் பாடின புலம்பல்

வெண்பா

1 தஞ்சைச் சபையோர் தலைமையா னெல்லையான்
றுஞ்சினு னேகோ துரிதமா - யென்செய்வோம்
அப்பாநீ போறசெய லாரறிவா ரத்தனலா
லிப்பார் தவித்திரங் கவே

2 அத்தனே சாப்தத்தி னுயிரத்தெண் ணூற்றறுப
துற்றநான் காண்டீர்பானேர் நால்தேதி - யற்றுதைவி
லேகினு னேசுவண்டை யெம்வேத சாஸ்திரியார்
தாகமா யாந்தவிக் கவே

3 பாடினுய் கர்த்தரைக் கொண் டாடினு யத்தனடி
கூடினு யீது கொடுமையா - வாடியாங்
கூவிடவு ஞாயமோ கூடுதிலை யென்றாலும்
தாவிப் பரிதவிப் பனே

4 துங்கன் பரனிடத்திற் றூரமாய்ப் போறசெய
லிங்கா ரறிவாரென் னையாவே - அங்கமெலாம்
பெட்டிக்குள் வைத்தாரோ பெட்டிபெட்டி புஸ்தகங்கள்
கட்டிவைத்த கையிரண்டைச் சேர்த்து

5 வாசிடா வுன்சத்தம் வாசியடா காதுக்கு
நேசமா என்று நிகழ்த்திடுமுன் - வாய்கூட
மோசமாய் மண்ணில் முழுது மறைந்ததுவோ
யேசுவே தம்ப மினி

கலிப்பா

6 விண்ணுடை யாளும் விமலனைப் பாடுமுனைக்
கண்ணாரக் கண்டு கடைவழியிற் கிட்டநிற்க
எண்ணிருேம் பெற்றையா எல்லார்க்குஞ் சொல்லாமல்
மண்ணிலுனை வைத்தாரோ வந்து பாராமுனமே

7 தெட்சணம்போய் நீங்கள் திரும்பிவர வென்றுசொன
அச்சமயம் நாங்கள் அடிதொழுது வந்துவிட்டோம்
இச்சமயம் வாய்த்ததென்றே யேகினுய் வானுலகம்
பிச்செலாம் பொங்கிப் பிளந்துருகு தையாவே

8 கடைமகனு முதல்மகனுங் கையோ டிருந்தாக்கால்
விடைகொடுக்கார் விண்ணுலக மேவுதற்கிப்
போதெனவோ
நடுமகனே யுன்பயணம் நன்ரு யனுப்புவிப்பான்
தடைசெய்யா னென்ருே தறுகவைத்தா யுன்னிடத்தில்

9 அங்கங் குளிப்பாட்டி யழகாய்க் கிடத்திடுகில்
எங்கடா போனு னிளையமக னென்றுமனம்
பொங்கியெனைத் தேடுகையிற் புறத்தேநா னில்லாமல்
இங்கிருக்க நீவிரசா யேகினையோ வானுலகம்

10 தெற்கூரு போய்நான் றிரும்பிவரு முன்னுலே
யிக்கோல மாக்கிகிறிஸ் தேசுவண்டை யோடிவிட்டாய்
யெக்கால முன்ற னெழில் முகத்தைப் பார்த்துய்வோம்
பக்கென் றெரியுதையோ பாவிகுட லையாவே

11 நீயுமா போருய் நிகழ்த்தடா என்றவுன்னு
பாயமோ முத்தியிட்ட வாயுமோ போயொழிந்து
மாயமோ ஐயா மருகிவந்து காணுமுன்னே
ஆயுணு ணுலறுந்தோ அவசரத்தி லோடிவிட்டாய்

12 மூத்தமகள் வந்து முடுகிமண்மேற் போடுதற்குக்
காத்திருப்பே னென்று கனிந்துசொன உன்வார்த்தை
பார்த்திருந்தோ மல்லால் பதஷ்டமாய்ப் போறசெயல்
தீர்த்தறியோ மையா திருநெல்லை சீர்பதியே

13 கிட்டிலுள நாட்டில் கிறிஸ்துவையே போற்றிமிக
மெட்டுக ளெலாம்பெற்று மேவினே முன்னிடத்தில்

எட்டுதிசை யுதவிநாதனே பேசித் திருப்புதல்வனே
பெட்டியாடு வைத்தனையோ போகவன்னை யென்றுநதிக

14 திருநெறியிலே சாஸ்திரித் தென்னுதல்வனை வாழ்த்திருக்க
அருமையிலே போர்க்கள் அடிக்கடி வந்துவிட்டோ
வறுமையிலே பட்டும் வைத்த திருநாமம்
எருமையிலே பயப்படாமல் பேசினாலோ ஞானமே

15 எத்தனைபோர் புலவர்கள் எத்தனைபோர் பாடல்களும்
அத்தனையும் போட்டுவிட்ட ஆசைதந்து கேட்டுநின்று
கந்தன்வந்தா ரென்று கடுகிரசாய்ப் போகுமெய
சித்தனையும் பாரதியே யென்னையெல்லாம் யினனேயே

16 பயல்களெல்லாம் போயடிவிட்டாற் பதறுமலன் மேலான
அயலூர்க்கெல்லாம் நிங்களுப்பி யத்தனன்னை—
போனவுடன்றன்
செயலெல்லாம் மென்னவிக் சிந்தித்து மாறுதில்லை
வயிறேரு எரியுதையோ வந்துவிட்டான் காண்பதெப்போ

17 ஒற்றையாய் போயடைந்தே புன்சமுக மியான்பார்க்க
எத்தனைபோ என்னவிஎன்னவி யேங்கித் தவித்தேனுன்
பற்றுதையாய என்வயிறு பரவிடத்தில் வாழ்ந்துகூகி
சுத்தனிட வின்பாற் கடுகிவந்து பாடுவனே

18 பாளையங் கோட்டை பழையநக ருன்னதல்லோ
ஏழையாய் விலகிருந்தோ என்தவிக்க வேண்டுமையா
பாளையம் போன்ற பட்டண ரெங்கேபோனர்
மாளையிலுன் மக்களெல்லா மருகிநின்று பார்த்திலரோ.

19 இடியென்றால் மேலே யிருந்துவிழு மல்லாமல்
அடிவயிற்றி லேவிழுந்தா லார்தாங்கி யார்பிழைப்பார்
படிமீது வந்த பரமனே நின் கிருபை
முடியாதென் றுரு முடியாதில் தோத்திரமே.

கழிநெடில்

20 திருநெல்லை ஞானி தேவசகாயன்
சேயென உதித்தனே யுன்னை
சிறந்தமா சுவார்ச்சு முனிதஞ்சைக் கழைத்து
தீர்க்கமாய்ப் படிப்பித்தான் பின்னும்

அருகெல்லை தரங்கை டாக்ட்டர் யோனையர்
இடத்திலுங் கல்வியி லதிகம்
அறிந்துபின் தஞ்சைக் கல்விச் சாலையிலோர்
அதிபனு யிருந்தனை நரனு

யெருசலே வந்த யேசுநா யகனை
யிருபது வயதிலே தொடங்கி
யேத்தினை செய்த புஸ்தகம் நூற்ரு
டிருபது மக்களோ ஐவர்

வருமொல்லை ஞான தீபமாள் ஞான
சிகாமணி மகிழ் ஞானுதிக்கம்
மனோன்மணி தேவ சிகாமணி யெலியா
மதிநிறை வேத நாயகனே.

21 ஆதிநா யகனை யனுதினம் பாடி
அகிலத்திற் கீர்த்தியே பெற்ற
அருமையி னையா பெருமையோ உனக்கிங்
ககலப்போய் வரும்படி யுறுதி

யோதியு மறந்தோ வோடினு யுயர
உற்றியான் றிரும்பு முனகை
ஒன்றியா மறியோஞ் சென்றையோ ஐயா
உடலெல்லா மெரியுது மெய்யாய்

சேதியைக் கேட்ட சன மழுகாரோ
தேவ சிகாமணி சேயுந்
திக்குநீ யனுப்பும் பக்கமே பார்த்து
திகைப்பதோ அழகுனக் கையா

வேதநா யகமா சாஸ்திரிக் கவியே
வினையலால் வேறிலை யையா
விண்ணுல கத்தாள் வேந்தனூ டூழி
மேவிவாழ் அவரடி சரணே.

பாளையங்கோட்டை
1864 ஸ்ரு தை மீ

31. திருச்சபையார் செய்த கனம்.

கிறிஸ்து பிறந்த 1818-ம் வரு புரட்டாசி மீ" 1 உ. தஞ்சை நகரத்திலும் அதின் சுற்றுப்புறத்திலுமிருக்கும், இதற்கடியில் கையொப்பம் வைத்த நாங்கள், மேற்படி ஊரிலிருக்கும், திருநெல்வேலித் தேவசகாயம் பிள்ளையவர்கள் குமாரர் சுவிசேட கவிராயராகிய வேதநாயக சாஸ்திரியாரவர்களுக்கு, எழுதிக் கொடுத்த மாருத உடன்படிக்கையாகிய தரும சாதனப் பட்டயமென்னவென்றால்,

தஞ்சை நகரத்தில் மகாகனம் பொருந்திய சுவார்ச்சையரவர்கள் நாள்முதல் சங்கிக்கப்படத்தக்க கோலப் ஐயரவர்கள் நாளாகிய இதுவரைக்கும், சுமார் முப்பது வருஷக்காலமாய்த் தாங்கள் இவ்விடத்திலிருந்து, வேதாகமங்களையெல்லாம் ஆராய்ந்து, பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடுகளிலடங்கிய அநேகம் ஞாயங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றையெங்களுக்கும் எங்கள் பின்னடியாருக்குமுதவியாக மகா அலங்கிர்தமு மதுரமுமான, அநேகம் பிரபந்தங்களாகப் பாடி கர்த்தருடைய சகல பண்டிகைகளையும், எங்கள் சபையின் ஞானஸ்நானங்கள், கலியாணங்கள், எங்கள் சந்தோஷ நாட்களையுஞ் சிறப்பித்து, எங்களுக்கு மனமகிழ்ச்சியு மெழுப்புதலுமுண்டாகும்படிக்குத் தாங்கள் பட்ட பெரிய பிரயாசத்துக்காகவும், இதுவுமல்லாமல் எங்களில் அநேகருக்கும் எங்கள் பிள்ளைகளுக்கும் படித்துக் கொடுத்த தங்கள் கருத்தான பட்சத்துக்கு நன்றியறிதலாகவும், தங்களுக்கு எங்களால் கூடினமட்டும் ஒரு சந்தோஷத்தைச் செய்யத் தீர்மானம் பண்ணினோம்.

நாங்கள் பண்ணின இந்தத் தீர்மானம், எங்கள் மனதுக்கு திருப்தியானதல்ல. ஏனென்றால் கர்த்தரெங்களுக்குக் கொடுத்திருந்தால், தங்களுக்குக் கிராமம் பூமி விட்டுக்கொடுத்துப் பெரிய வெகுமானங்களை யெல்லாம் செய்து, தங்களைப் பெரிய சீமானும் பாக்கியவானுமாக்க, எங்களெல்லாருக்கும் ஆசையுண்டு.

ஆனாலிப்போதிருக்கிற காலத்துக்குத் தக்கதாய் நாங்கள் பண்ணின தீர்மானத்தை, தாங்கள் சந்தோஷமாய் ஒப்புக் கொள்ளுவீர்களென்று நம்புகிறோம்.

அதென்னவென்ருல், தாங்களெங்களுக்கனுப்பிய ஞானப் பாட்டகரின் பன்னிரு ஞாயப் புஸ்தகத்தின்படியே, தங்களுக்கும் தங்கள் தருமச் செலவுகளுக்கும், தங்கள் பாடகாள் கற்றுச்சொல்லிகளுக்கு முதவியாக எங்கள் சந்தோஷத்தின்படி, எங்களுக்கு மனப்பூருவமானது இவ்வளவு செய்வோமென்கிறதை, இதற்கடியிலே எங்கள் சொந்தக் கையெழுத்தாக எழுதியிருக்கிறபடியினுலே, அதிலெழுதப்பட்டதை மாதாந்திரந்தாங்களனுப்புகிற மனுஷர் வசத்திலே யாதொரு தடையுமின்றி சந்தோஷத்தோடே செலுத்தி வைத்துப் போடுகிரோம்.

ஆனபடியினுலே நாங்கள் வெகு சனங்கூடி செய்கிற இந்த தருமத்துக்கு யாதொருத்தரும் வித்தியாசம் பண்ண மாட்டார்கள். அப்படி வித்தியாசம் பண்ணுகிறவர்களுண்டானுல், அவர்களுக்குத் தங்கள் பாடல்களுக்கு நாயகனுயிருக்கிற சேனேகளின் கர்த்தரும், இசருவேலின் ராசாவுமாகிய இயேசுகிறிஸ்துவும் வித்தியாசம் பண்ணுவார். ஆனதினுலே யாதொருத்தருடைய கட்டாயமில்லாமல் எங்கள் மனப்பூருவமாய்ச் சம்மதித்துச் சத்தியப்பிரகாரமாக எழுதிக்கொடுத்த இந்த மாருத உடன்படிக்கையாகிய தரும சாதனப் பட்டயத்தின்படியே, நீதிமான்கள் உயிர்த்தெழுதல் வரைக்கும் புத்திர பாரம்பரையாயெங்களுடைய, உங்கள் சுதந்திரத்தைப் பற்றியனுபவித்துக்கொண்டு, எங்களுக்கு மெங்கள் பின்னடியாராகிய எங்கள் சந்ததியாருக்கும், நன்மையுண்டாகத்தக்கதாக, திரியேக பராபர வஸ்துவாகிய யேசுராசாவை, சகல வித ராகங்களுடனே பாடிக் கீர்த்தனம் பண்ணிக்கொண்டு, சுகத்திலே யிருப்பீர்களாகவும்.

இப்படிக்கு நாங்களனேவருமெங்கள் மனராசியில் சம்மதித்துக் கிறிஸ்து பிறந்த 1815 ஷு தை மீ 1 வ எழுதிக் கொடுத்த மாருத உடன்படிக்கையாகிய தருமசாதனப் பட்டயத்தை மறுபடியுமிந்த 1818 ஷு புரட்டாசி மீ 1 வ புதுப்பித்துச் செம்மைப்படுத்தி சுவிசேட கவிராய வேதநாயக சாஸ்திரியாரவர்களுக்கெழுதிக் கொடுத்தோம்.

மல்லாமல், எங்கள் சபைக்கோர் ஆபரணம் போலிருக்கிரு ரென்றும், அப்படியே அவருடைய ஐம்பத்திரண்டு நூல்களு மிகுந்த பிரயோசனமுங் குறையற்றதுமான கணக்காகமமுங் கிறிஸ்துவின் சுவிசேஷ பிரபலத்துக்குஞ் சகல பள்ளிக்கூடங் களுக்கு முதவியான விசேஷித்த எற்றினமா யிருக்கிறதென் றும், இதுகளை யுண்டுபண்ணுகிறதினுலே இவருக்கிருந்த மகா கருத்தான பிரயாசமும் வருத்தமும், எங்களெல்லாரு டைய எண்ணத்திலேயும் புகழப்படத் தக்கதுமாயிருக்கிற தென்றும், நாங்கள் மிகுந்த சந்தோஷத்துட ஞெருமனப் பட்டுத் திடச்சாட்சியா யறிவிக்கிருேம்.

இந்த உண்மையான வார்த்தையின்படியே சொல்லப் பட்டவருடைய பாடல்களை யெத்தேசத்திலேயும் இனி கேட் கப்போகிற விற்பன்னரும், பெரியோர்களுமெங்களைப்போ லெச்சந்தேகமுமன்றி, அங்கீகரித்தேற்றுக்கொண்டு, நாங்கள வருக்குச் செய்த சங்கையையுமுபசரணையையுஞ் செய்வார்க ளென்கிற நம்பிக்கையினுலே அவருக்கு வேதாகம சிரோமணி மகாஞானக் கவிச்சக்கரவர்த்தியார் என்ற புதுநாமமுந்தரித்து, இவருடைய மேலான விவேகத்துக்குத் தகுமானதாயிருக்கிற, பிரதான ஆசனமு முதல் மரியாதையுஞ் சங்கைக்கடுத்த அடையாளங்களையுங் கொடுத்தெங்கள் கையொப்பமும் வைத்துக் கொடுத்தோம்.

தஞ்சை நகரம் சுவிசேஷ சபையில்,
1808 ஸு மாசி மீ 20 உ

தூதன் அச்சகம், நியூபோர்ட் தெரு, நாகர்கோவில்.